660

குண்டூசி

ஜனவரி.... எட்டு அணு

660
1.52

382



விநியோகஸ்தர்கள்

தமிழ்நாடு (சென்னையுட்பட): ராஜ்ஸ்ரீ பிக்சர்ஸ் லிமிடெட், மதராஸ் & மதுரை.

சிலோன் (F. M. S.): சினிமாஸ் லிமிடெட், கொழும்பு.

பொது இன்பங்கள்

நம் நாட்டில் நடுத்தரக் குடும்பத்தாருக்கு ஓய்வு நேரத்தில் முக்கியமான மகிழ்ச்சிகரமான பொழுதுப் போக்கு ஸினிமாதான். ஸினிமா குடும்பத்தில் எல் லோராலும் சக்திக்குத்தகுந்த செலவில் ரஸிக்கக் கூடினது.

இன்னும், எல்லோராலும் ஓய்வு நேரங்களில் குறைந்த செலவில், ரஸித்து, மகிழ்ந்து அனுபவிக்கக் கூடினது ஒன்று உண்டு. அதுதான் ஒரு கப் சூடான 'டீ'. அது உற்சாகத்தையும் புத்துயிரையும் கொடுக்கிறது.

டீ

உங்களுக்கு அதிக
இன்பத்தை கொடுக்கிறது.

சென்ட்ரல் டீ போர்டாரால் வெளியிடப்பட்டது.

CTB 66



இனும்! இனும்!! இனும்!!!

எமது நெ. 501 கருப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லா விதமான மயிரும் மைக் கருப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கருப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும் பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது. புட்டி ஒன்றின் விலை

ரூ. 1—15—0:

3 புட்டிகள் (பூரா முறை) ரூ. 5—0—0.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்ட்வாட்சும்; நியூ கோல்டு மோதிரமும் அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனும். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்:

AMRIT PHARMACY (G. M.) Jullundur City.

தளதளப்பான வாலிபமும் பிரகாசமிக்க வீரியமும் பெற

புனித மஹாத்மாவின்

பிரத்தியேக மூலிகை மருந்து

காஷ்மீர் மாத்திரைகள் :—சாதாரண பலஹீனத்திற்கு மிகச் சிறந்த மருந்து. இது தளர்ந்துபோன நரம்புகளுக்கு ஜீவனளித்து, தேகத்தில் வலிவை உண்டுபண்ணும். வாலிபம் குறைந்து போகாமல் காத்து சிறந்த இல்லற சுகத்தைப்பெற உதவும். வீரிய விருத்திக்கு நிகரற்ற மருந்து. புட்டி ஒன்றுக்கு விலை ரூ. 2—8—0.

காஷ்மீர் பூச்சு எண்ணெ :—இது ஆண் குறியின் எல்லாக் கோளாறுகளையும் போக்குவதற்கான வெளிப் பூச்சுத் தைலம். வாலிபச் சேஷ்டைகளாலோ அல்லது இதர எந்தக் காரணத்தாலோ இழந்த பலத்தைத் திரும்ப அளிக்கும். கோளாறுகளைச் சரிப்படுத்தும். நரம்புகளுக்கு ஜீவனை உண்டுபண்ணும். விலை ரூ. 2—8—0.

Prof. **B. S. SIDHU, HALKA No. 6 (G.M.),**

Jullundur City.

134131.

List of 1st Prize winners of B. No. 1.

(1) V. Karan, Hyderabad Dn. (2)N. Sahu, Puri. (3) P. S. Rao, Poona. (4) V. Raman, Cochin. (5) Manoharlal, New Delhi. (6) A. N. Rao, Bangalore. (7) B. Thakur, Behar. (8) J. N. Chaturvedi, Calcutta & 17 others. In addition 2 persons are awarded 2nd prize, 53 the 3rd, & 13 the 5th prizes.

Full particulars are published in the "Rainbow" dated 25—1—51.

ரிஜிஸ்டர் நெ. 277 **ரூ. 25,000 பரிசு** போட்டி நெ. 3

M/S. Premier Bank of India Ltd-ல் சீல் செய்துவைக்கப்பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கிகாரத்தின் பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர்களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியான விடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000/. முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு 5-ம் பரிசு ரூ. 1,000-ம் அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும்.

AMBAL'S PUZZLES

KEY S. NO 1 . 1 16=34

4	9	5	16
14	7	11	2
15	6	10	3
1	12	8	13

We hereby certify that the above is the solution in original deposited with us by Ambal's Puzzles No. 1 on 20-12-51 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For The Premier Bank of India Ltd.

V. Ramanathan 12-1-52

Agent Madras

முடிவு தேதி 12—2—52. விடை 27—2—52

பிரவேசக் கட்டணம் : கூபன் 1-க்கு ரூ. 1—0—0. 6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5—0—0

70

விடைகள் கண்டுபிடிக்கும் விதம் :—10 முதல் 25 வரையுள்ள எண்களை கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினாலும் 70 வரும்படியாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும்

விதிகள்;-தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டணத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தை கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதை கூபன்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கபடும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுத்துவதாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறை பத்திரிகையில் பிரசரிக்கபபடும்; அல்லது 4 அணா ஸ்டாம்பு அனுப்பினால் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்ப வேண்டிய விலாசம் :—

AMBAL PUZZLE No. 3

28 (21) Thandavaroya Gramani Street, Tondiarpet, Madras—21.

ரிஜிஸ்டர் நெ. 277. **ரூபாய் 25,000 பரிசு** போட்டி நெ. 4.

சரியான விடை Premier Bank of India Ltd., Madras-ல் சீல் செய்து வைக்கப்பட்டுள்ளது. (மற்றவை மேலே கூறப்பட்டுள்ளது போல்). முடிவு தேதி 27-2-52. விடை: 12-3-52.

74

பிரவேசக் கட்டணம் கூபன் 1-க்கு ரூ.1/- 6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5/-

விடைகள் கண்டுபிடிக்கும் விதம் :—11 முதல் 26 வரையுள்ள எண்களை கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் எப்படிக் கூட்டினாலும் 74 வரும்படி அமைக்கவேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும். மற்ற விபரங்கள் மேற்கூறியதுபோல்.

AMBAL PUZZLE No. 4

28 (21) Thandavaroya Gramani St., Tondiarpet, Madras—21.

இரவில் தனியாக இருக்கும்போது
தான் பார்த்துக்கொள்ள வேண்டும்

KOKSHASTRA

(Private)

கொக் சாஸ்திரம்

(இரகசியமானது)

284 படங்களுடன்

விளம்பரத் திறல் சரிவரக் கூற முடியாத விஷயங்கள் இதில் அடங்கியுள்ளன.

படிக்கிறவர்கள் நன்ருகவும், தெளிவாகவும், விஷயங்களைப் புரிந்து கொள்ளுவார்கள். நல்ல விதமான 284 படங்கள் இருப்பதால் மார்க்கெட்டில் எம்முடைய கோக் சாஸ்திரம் தான் வெகு நன்ருயிருக்கிறது எனக் கூறப்படுகிறது.

விலை ரூ. 0—8—0

BED ROOM PHOTOS

படுக்கை அறைப் படங்கள்

உங்களுக்கு படுக்கை அறைக் காக்ஷிகளையும், அழகு,வேறு உற்சாகமளிக்கும் காரியங்களையும் தெரிந்து கொள்ள விருப்பமிருந்தால் இன்றே 50 படங்கள் கொண்ட ஒரு ஸெட்டுக்கு ரூ. 1-4-0 அனுப்பிப் பெற்றுக் கொள்ளுங்கள். 25 படங்கள் கொண்ட ஒரு சாம்பிள் செட்டின் விலை அணு 0-12-0.

கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்திலேயே (இங்கிலீஷில்) இருக்க வேண்டும்.

FRENCH PHOTO SUPPLY Co.,

(G.M.). Jullundur City.

மனதிற்கு
குதூகலமளிக்க

மைதீன்

புகையிலை

காரம்
மணம்
கமழ்வது

E.S. மைதீன் & கோ

கும்பகோணம்

குண்டூசி

பட்டை 5
ஊசி – 4
பிரதி – 52

ஜனவரி
1952

ஆசிரியர்: பி. ஆர். எஸ். கோபால்

மாறுவேஷத் திருவிழா

சென்ற பொங்கலன்று, வாஹினி ஸ்டுடியோவிற்குள் நுழைந்தவர்களுக்கு சொப்பன உலகிற் பிரவேசித்த மாதிரியே இருந்தது. இப்படியெல்லாம் நடக்கும் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை. கண்களை ஒரு முறைக்கு இரு முறை துடைத்துக் கொண்டு பார்த்த பின்னரும், "இவையெல்லாம் நிஜமாகவே நடக்கின்றனவா!" என்றே கேட்க வேண்டியிருந்தது. எல்லாமே மாறு வேஷம்! குதூகலம்! கொம்மாளம்!

'பொங்கல் தினத்தன்று வாஹினி ஸ்டுடியோவில் சினிமாப் பிரமுகர்களின் களியாட்டம் ஒன்று நடக்கப் போவதாக' விஜயா புரொடக்ஷன்ஸ் மேனேஜிங் டைரெக்டரான ஸ்ரீ பி. நாகி ரெட்டியிடமிருந்து ஒரு அழைப்பு வந்தது. சிற்றுண்டி விருந்து, நாடகம், நடனம், இது மாதிரி ஏதாவது நடக்கும் என்று எதிர் பார்த்துக் கொண்டே போனேம்.

மாசுமருவின்றி கண்ணாடிபோல் காட்சியளித்த வாஹினி ஸ்டுடியோவில் எங்கு திரும்பினாலும் தோரணங்களும் எதிரே நின்ற (அலங்கரிக்கப்பட்ட) யானைகளும் ஒட்டகமும் திருவிழாக் களையை ஏற்படுத்தின. முதலில் ஒரு கண் காட்சிக்குள் நுழைவது போலிருந்தது. 'இன்று என்னதான் நடக்கப்போகிறது!' என்று சிறிது யோசிப்பதற்குள்ளேயே பாதை வழியே ஒரு கும்பல் வந்தது. நடுவில் ஜிப்ஸி மாதிரி உடையணிந்த சில பெண்மணிகள் ஆடிப்பாடிக் கூத்தடித்தனர். உற்றுக் கவனித்தேன்; அப்பெண்கள் பிரபல நக்ஷத்திரங்களானன பானுமதி, அஞ்சலி தேவி, சாந்தகுமாரி, லக்ஷ்மி பிரபா, சரோஜா ஆகியவர்கள்! ஆம் சந்தேகமில்லாமல் அவர்களே தான்!

நான் இந்த ஆச்சரியத்திலிருந்து விடுபடுவதற்குள்ளாகவே, என் இடது பக்கத்திலிருந்து ஒரு குரல், "ஏ! 'குண்டூசி' சாமி! ஊசி வாங்கல்லியா, சாமி!" என்று கேட்டதும் திரும்பிப் பார்த்தேன். ஒரு குருவிக்காரன் கையில் தகரக் குவளையுடன், தன் பெண்டாட்டி சகிதம், என் முன் நின்றான். "என்னைத் தெரியல்லியா, சாமி!" என்றான் குருவிக்காரன். "ஊசி வாங்கு, சாமி, காசு போடு, சாமி!" என்றாள் அவன் பெண்டாட்டி. நான் எட்டணா போட்டேன்; ஆனால் ஊசி தாராமல் ஏமாற்றி விட்டார்கள்! அவர்களது குரலிலிருந்து மட்டும் அவர்கள் முறையே கே. சாரங்கபாணி டி. ஆர். ராமச்சந்திரன் என்று தெரிந்து கொண்டேன்.

இதற்குள் எங்களைச் சுற்றி ஒரு கூட்டம் கூடிவிட்டது. ஒரு போலீஸ்காரன் "இங்கே என்ன கூட்டம்? போ, போ!" என்று விரட்டினான். ஆனால், அவன் நிஜப் போலீஸ்காரன் அல்ல! ஜூபிடர் சம்பத்துதான் அப்படி மாறுவேஷத்தில் அமல் செய்தார்!

மேலே சில அடிகள் நடந்தேன். ஒரு ஆந்திர நடிகர் காற்றாடி விற்றுக் கொண்டு வந்தார். சீன தம்பதிகளாக (அருமையாய் 'மேக்கப்' செய்துகொண்டிருந்த) இருவர் 'பலூன்' விற்றுக் கொண்டு வந்தனர். கமலா சந்திர பாபு என்ற நடிகை 'ப்ளிட்' பொம்மை மாதிரி உடையணிந்து, கொசு சம்ஹா



மாறுவேஷத் திருவிழா

●

இடது புறம்—ஒன்றின் கீழ் ஒன்றாய்: கே. சாரங்கபாணி, டி. ஆர். ராமச்சந்திரன் (குறவன், குறத்தி).

நாகி ரெட்டி, (லேடி) பாலகிருஷ்ணன், பானுமதி, சாந்தகுமாரி, பி. புல்லய்யா, (மீசையுடன்)

திருப்பதி பக்தர் வேஷத்திலிருப்பவர் நடிகர் நாகேஸ்வரராவ்.

கையில் குச்சியுடன் காட்சி அளிப்பவர் நடிகர் ரேலங்கி.



மேலே: திருவிழாவுக்காக ஸ்தூபிபோல் ஜோடிக்கப்பட்டிருந்த தீப அலங்காரம்.

மேலிருந்து: பலூன் விற்கும் சீனத் தம்பதிகள்.

கையில் தாளத்துடன் இருப்பவர் ஸி. வி. வி. பந்துலு.

சட்டைக்கார 'ஜோடி' (பாதாளபைரவி நடிகர்கள்) பாலகிருஷ்ணன், பத்மநாபன்.

கீழே: திருவிழாவுக்கு விஜயம் செய்த கே. மாலதி.

இடது புறம்: பின்னணி பாடுவதற்காக சென்னைக்கு வந்துள்ள வட இந்திய கிதாராய்.

போட்டோக்கள்: வி. கோபாலகிருஷ்ணன்

ரத்தைப் பற்றி பிரசங்கம் செய்துகொண்டிருந்தார். 'கோடக்' கம்பெனியின் மானேஜரான மிஸ்டர் எல்லிகாட் துரை ஒரு சாயபுவாக மாறியிருந்தார்!

சில கஜ தூரத்தில் நாதஸ்வர முழக்கத்துடன் ஒரு திருப்பதி கோஷ்டி வந்தது. வார்டன் உடையணிந்திருந்த ஒருவர் (நாகி ரெட்டி) கூட்டத்தை விலக்கிக் கொண்டிருந்தார். நடுவில் தாடி மீசையுடன், மஞ்சள் துணி உடுத்தியிருந்த ஒருவர் (நடிகர் நாகேஸ்வர ராவ்) ஆவேசத்துடன் குதித்துக் கொண்டிருந்தார். இந்தக் கூட்டத்திடையே ஒரு கரடிக்காரன் (என். டி. ராமராவ்) தன் (பொய்க்) கரடியை விட்டு கலாட்டா செய்தான்! இதுதான் போகட்டும் என்றால் இன்னொருவன் தன் "நாட்டியக் குதிரை"யுடன் தோன்றி அமளி செய்தான்.

இந்தக் கலாட்டாவைக் கவனித்துக் கொண்டிருக்கையில் நாட்டுப்புறத்தான் ஒருவன் என் மீது மோதினான். கோபத்துடன் திரும்பினேன். ஆனால், சிரித்துவிட்டேன், ஸி. வி. வி. பந்துலுவைப் பார்த்ததும்! இந்த சமயத்தில் ஒரு மரைக்காயர் எங்களை அணுகினார்: "நம்பள் பில்ம் வாங்கறாங்கோ; நிம்பள்கி விக்கறாங்க!" என்றார் அவர். "நிம்பள் என்ன பில்ம் வாங்கறான்!" என்று கேட்டேன் நான். அவர், "வேஸ்ட் பில்ம்!" என்று கூறிச் சிரித்தார். இது சகஸ்ர நாமம் செய்த தமாஷ்.

முக்காமாலா ஒரு மந்திரவாதியாகத் தோன்றி ஏமாற்றிக் கொண்டிருந்தார். பி. கே. சரஸ்வதி கருப்புக் கண்ணாடியணிந்து பெப்பர்மின்ட் விநியோகித்துக் கொண்டிருந்தார். குரங்காட்டியாக ஒருவர் காட்சியளித்தார். இன்னொருவர் பட்டாணி வண்டியைத் தள்ளி வந்தார்.

காம்பௌண்டின் ஒரு ஓரத்தில் அமர்ந்து 'அமைதியாக' நாதஸ்வரம் வாசித்துக் கொண்டிருந்த திக்குருச்சி சுகுமாரன் நாயரைப் பார்த்ததும் மூக்கில் விரலை வைத்தேன்! நாதஸ்வரத்தைக் கொஞ்சம் கேட்கலாமென்றால் இடைஞ்சலாக ஒரு ஆங்கிலோ இந்தியத் தம்பதிகள் தோன்றித் தங்கள் தாம்பத்தியக் கலகத்தைத் தீர்த்துவைக்கும்படி வற்புறுத்தினார்கள். போதாதற்கு ஒரு நாடோடித் தம்பதிகளும் (டைரெக்டர் புல்லய்யா, சாந்தகுமாரி) அங்கு வந்து விட்டனர்! இவர்களுடைய கலாட்டாவைப் பற்றி எதிரே வந்த இன்ஸ்பெக்ட(பாலய்யா)ரிடம் சொல்லப் போனேன். "பாருங்கள், இன்ஸ்பெக்டர்! இங்கு எல்லாமே மோசடியாக இருக்கிறது. எல்லோரையும் 'அரெஸ்ட்' செய்யுங்கள்" என்றேன். அதற்கு அவர், "நீங்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து, முதலில் ஒரு புகார் தாக்கல் செய்யும்" என்று சாவதானமாய் சொல்லிவிட்டுப் போய்விட்டார்! நாங்கள் பேசிக் கொண்டிருக்கையில், மாறுவேஷத்தில் அங்குவந்த ஒரு நடிகர் என்னிடம் ஒரு முந்திரிப் பொட்டலத்தைக் கொடுத்தார். அது நிஜம் முந்திரிதானா என்று நான் சோதித்துவிட்டு வாயில் போட்டுக் கொண்டேன்!

நடிகர் கணபதி பட் குடுகுடுப்பாண்டியாக மாறி 'சினிமாத் தொழிலுக்கு நல்ல காலம் வரப்போவதை' அறிவித்தார். இன்னும் அநேகர் பலவித வேஷங்களை அணிந்து கொண்டு நடமாடினர்.

பள்ளிக்கூடங்களில் எவ்வளவோ மாறுவேஷப் போட்டிகளைப் பார்த்திருப்பீர்கள். அவையெல்லாம் ஒரு குறிப்பிட்ட மேடையின்மீது நடப்பவையே. ஆனால் நாங்கள் பார்த்த மாறுவேஷதாரிகளோ ஒரு பெரிய மைதானத்தில் அங்குமிங்கும் உலவி, எங்களிடம் நேருக்கு நேராக தமாஷ் செய்தனர்.

இத் திருவிழாவில் சில கடைகளும், ரங்க ராட்டினம் போன்ற பொழுதுபோக்குச் சாதனங்களும்கூட இருந்தன. பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருந்த மேடையில் தமாஷான தெருக்கூத்து ஒன்றும் நடந்தது.

இதுபோன்ற மாறுவேஷத் திருவிழா இந்தியாவில் இதுவரை நடந்ததேயில்லை. இந்த நூதன விழாவை பூரண வெற்றியாக நடத்தி வைத்ததற்கு ஸ்ரீ. நாகிரெட்டியையும், வேஷங்களேற்று விழாவை சோபிக்கச் செய்த அனைவரையும் நான் மிகப் பாராட்டுகிறேன்.

சினிமாத் தொழில் சம்பந்தப்பட்டவர்களுக்கெனவே பிரத்தியேகமாய் நடத்தப்பட்ட இந்த விழாவில் நீங்கள் கலந்து கொள்ளும் பாக்கியத்தைப் பெறவில்லையே என்று வருத்தமாய்த் தானிருக்கிறது. என் வருத்தத்தை ஸ்ரீ. ரெட்டியிடம் கூறியிருக்கிறேன். எப்படியாவது இவ்விழாவை பொதுஜனங்கள் கண்டு களிக்கும் வகையில் ஏற்பாடு செய்ய முயற்சிப்பதாய் அவர் வாக்களித்திருக்கிறார்.

சமீபத்தில், தமிழ் நாடெங்கிலும் வெளி வந்து வெற்றிகரமாய் ஓடிக் கொண்டிருக்கும் "அம்மா" தமிழ்ப் படத்தில்—வாசவதத்தை நாட்டிய நாடகத்தில் லலிதாவும் பத்மினியும்.



ஸ்ரீராம்



ஸ்ரீராம்

வாழ்க்கை வர்ணனை

பிரபல வட இந்தியப் பாடகர்-நடிகராயிருந்த ஸைகால், சினிமாக் கம்பெனி ஒன்றில் குமாஸ்தாவாக இருந்தவர். அவர் நல்ல குரலையும் இனிமையாகப் பாடும் திறமையையும் பெற்றிருந்தது வெகு காலம் வரையில் ஒருவருக்கும் தெரியாது. பிறகு, திடீரென்று ஒரு நாள் அவரது முதலாளிக்கு இவ் விஷயம் தெரிய வரவே அவரை ஒரு நடிகராக்கிவைத்தார். ஸைகால் அகில இந்தியப் புகழ் பெற்ற நடிகரானார். தென்னிந்தியப் பிரபல நடிகரான நாகய்யா கூட ஒரு குமாஸ்தாவாக இருந்தவர்தான். மற்றும், நம் நடிகர்களில் பலர் சினிமாவில் ஈடுபடுவதற்கு முன் வேறு பல துறைகளில் முயன்றவர்களாகவோ, அல்லது ஈடுபட்டிருந்தவர்களாகவோ இருக்கும் விஷயம் நேயர்களுக்குத் தெரிந்ததே.



ஸ்ரீராமைத் தான் எடுத்துக் கொள்ளுங்கள். முதலில் அவர் கப்பர் படையில் சேர்ந்தார். பிறகு அங்கிருந்து இராணுவத்திற்குத் தம்மை மாற்றிக் கொண்டார். அதன் பிறகோ இராணுவத்திலிருந்தும் விலகி, ஏ. ஆர்.பியில் சேர்ந்தார். முடிவில், அதையும் உதறித் தள்ளிவிட்டு சினிமா ஸ்டுடியோவில் சேர்ந்துவிட்டார்! ஸ்ரீராம் ஒரு சினிமா நடிகராய் வாழ்க்கை நடத்த வேண்டும் என்று தலையில் எழுதப்பட்டிருக்கும்

போது, அவர் உப்புத்
தண்ணீர் மீது மிதந்து
கொண்டிருப்பதோ,
உடுப்புடன் ஊநராய்
சுற்றி அலைவதோ சாத்
தியம் ஆகுமா! கிரீடம்
தரிக்க வேண்டிய தலை
யில் (ஏ. ஆர்.
பி.) இரும்புத்
தொப்பியைக்
கவிழ்த்தால்
பொருந்துமா?
உயிருக்கு
அபாயத்தை
அறிவிக்கும்
ஏ. ஆர் பி. சங்
கிந்தும் வாழ்க்
கைக்குப் புக
ழை அறிவிக்கும்
ஸ்டூடியோ (ஷூட்
டிங் ஆரம்ப அறி
விப்புச்) சங்கிந்தும்

எவ்வளவு பெரிய வித்தியாசம் பார்த்தீர்களா!

மதுரையைச் சேர்ந்த ஒரு நாயுடு குடும்பத்தில் 1922ம் வருஷம் ஏப்ரல் மாதம் 17ந் தேதியன்று பிறந்தவர் ஸ்ரீராம். அவருக்கு, கூடப் பிறந்தவர் ஒரு அண்ணன் மட்டுமே இருக்கிறார். ஸ்ரீராம் இரண்டு வயதுக் குழந்தையாய் இருந்த போதே அவரது தகப்பனார் இவ்வுலகை விட்டே போய் விட்டார். அதனால் ஸ்ரீராமும் அவரது சகோதரரும் அவர்களது தாய் மாமனான ஸ்ரீ. ராதாகிருஷ்ணனின் பராமரிப்பில் வளர்ந்து வந்தனர். ஸ்ரீராம் மதுரையில் படித்து வந்தார்.

ஸ்ரீ. ராதாகிருஷ்ணன் ஒரு நாடக சபையை நடத்தி வந்தார். அதில் டி. ஆர். மஹாலிங்கம், பி. எஸ். கோவிந்தன் முதலியவர்கள் அப்பொழுது நடித்து வந்தனர். ஸ்ரீராம் அடிக்கடி தம் மாமன் நடத்தி வந்த நாடகங்களைப் பார்த்து வந்தார். அதன் விளைவாக அவருக்கு நடிக்க வேண்டும் என்ற ஆசை தோன்றியது. பள்ளிக்கூட நாடகங்களில் பங்கெடுத்துக் கொள்ளலானார். முக்கியமாக ஆங்கில நாடகங்களில் ஸ்ரீராம் நல்ல பெயர் பெற்று வந்தார். ஆனால் நடிப்பைத் தம் தொழிலாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று அவர் ஆசைப்படவில்லை. பள்ளி நடிப்பு பிற்காலத்தில் தமக்குத் தொழில் நடிப்பாக ஆகிவிடும் என்று அவர் கனவிலும் கருதியதில்லை.

மதுரையில் படித்து எஸ். எஸ். எல். ஸி. பரிக்ஷையில் தேறிய பின்னர் ஸ்ரீராம் சென்னைக்கு வரவேண்டியதாயிற்று. சென்னையில் அவர் பச்சையப்பன் கல்லூரியில் இன்டர்மீடியட் வகுப்பில் சேர்ந்து படித்து வந்தார்.

சிறு வயது முதலே ஸ்ரீராம் பள்ளிக்கூடத்தில் நடக்கும் விளையாட்டுப் பந்தயம், நாடகம், பேச்சு போன்ற பொது நடவடிக்கைகளில் தாராளமாய் பங்கெடுத்துக் கொள்ளுவது வழக்கம். கல்லூரியில் சேர்ந்ததும் அவர் கல்லூரியைச் சேர்ந்த இராணுவ சங்கத்தில் சேர்ந்து பயிற்சி பெற்று வந்தார். ஸ்ரீராம் இன்டர் மீடியட்டில் இரண்டாவது வருஷம் படித்துக் கொண்டிருந்த சமயத்தில், இரண்டாவது உலக மஹா யுத்தம் ஆரம்பமாயிற்று. கல்லூரி ராணுவ சங்கத்தில் சேர்ந்திருந்த பலர் படிப்பை நிறுத்தி விட்டு இராணுவ சேவையில் ஈடுபட்டனர். அவ்விதம் செய்தவர்களுள்

(தொடர்ச்சி 67-ம் பக்கத்தில்)

நுனிப்புல்

வெட்டுக்கிளி

அடேயப்பா! என் அபிமானிகளுக்கு என் மீதுள்ள அன்பு எவ்வளவு ஆணித்தரமானது; எவ்வளவு உத்ஸாக மிக்கது என்பதை நான் சென்ற இரண்டு வாரங்களில் சந்தேகமறத் தெரிந்து கொள்ளும் பாக்கியம் ஏற்பட்டது. ஒரு சகோதர தமிழ் சினிமாப் பத்திரிகை (இப்படிச் சொல்வதற்கே வெட்கமாயிருக்கிறது!) நம் "குண்டூசி" மீது சீறிவிழுந்து, தன் வயிற்றெரிச்சலை வெளியிடும் துர்ப்பாக்கிய கைங்கரியத்தில் ஈடுபடவே, எனக்கு மேற்சொன்ன பாக்கியம் ஏற்பட்டது.

என். எஸ். கிருஷ்ணனின் ரஷ்யா சம்பந்தமான பிரசங்கங்களைப்பற்றி நவம்பர் மாத ஊசியில் எழுதி யிருந்தேனல்லவா? "கலைக்குச் சம்பந்தமில்லாத விஷயங்களில் கிருஷ்ணன் தலையிட்டுத் தாறுமாருகப் பேசிவருவதை நீங்கள் கண்டித்து, அவரைக் கலை வழியில் திருப்ப முயன்றிருப்பது பாராட்டத் தக்கது" என்ற சாராம்சம் கொண்ட பல கடிதங்கள் நேயர்களிடமிருந்து நமக்கு வந்துள்ளன. அப்படி யிருக்க, 'திண்ணைக்குத் தேள் கொட்ட, தென்னை மரத்தில் நெரி கட்டியது' போல கிருஷ்ணனுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு, ஒரு மாதப் பத்திரிகை தனது அழகு ஒன்பதில் இந்தப் (பத்திரிகையின் எட்டாவது 'அழகு' எங்கே என்று கேட்டு விடாதீர்கள்! ஆம்; பெயரளவில்தான் மாதப் பத்திரிகை. வெளி வருவதென்னவோ அவர்களுக்கு எல்லா 'சௌகரியங்'களும் பொருந்தும் சமயங்களில்தான். இந்த அழகில் பத்திரிகை கொண்டு வருவதையே அவர்கள் ஒரு 'தனிக் கலை' என்று சொல்லவும் கூடும்!) மேற்சொன்ன பிதற்றல் படலத்தை வெளியிட்டிருக்கிறது. ஆனால், இந்தப் பிதற்றல்களைப் படித்ததும் எனக்குத் துளியும் ஆச்சரியம் ஏற்படவில்லை. (பிதற்றல் இல்லாமல் ஏதாவது எழுதி யிருந்தாலல்லவா நான் ஆச்சர்யப் படுவதற்கு!) இதற்கு முன்பும் இப்பத்திரிகை "குண்டூசி"யை சில தடவைகள் தாக்கி எழுதியிருக்கிறது. அப்பொழுதெல்லாம், இதை ஒரு பத்திரிகையாக மதித்து பதில் எழுதுவது கேவலம் என்று கருதினேன். "எச்சிற் கலை மீது கல் எறிந்தால் நம் முகத்தில்தானே தெரிக்கும்!' என்று நினைத்தேன். ஆனால், இத் தடவையோ நான் சும்மாயிருக்க விரும்பினாலும் நேயர்கள் விடமாட்டார்கள் போலிருக்கிறது. அவர்களுடைய வற்புறுத்தலுக்காகவே இந்த மறுப்பை எழுதவேண்டியதா யிருக்கிறது.

• • •

பிற தமிழ்ப் பத்திரிகைகள் எழுதுவதையும், செய்வதையும் அப்படியே காப்பி

யுவா பிக்சர்ஸார் தயாரித்துவரும் "சியாமளா" தமிழ்ப் படத்தில் தெலுங்கு ஹாஸ்ய நடிகர் ரேலங்கியைச் சந்திக்கலாம்.

யடிப்பதில் கலைத்திறன் பெற்ற இப்பத்திரிகைக்கு "யாரையாவது தாக்குவது; எவரையாவது வலுச் சண்டைக்கு இழுப்பது' என்பதெல்லாம் ஜீவன உபாயம். இதன்மூலம் எழுத்துச் சண்டை ஏற்பட்டாலாவது தம் பத்திரிகை விற்காதா என்ற எண்ணம் அதற்கு.

சில மாதங்களுக்கு முன், திருச்சி சினிமாப் பத்திரிகை கொடுத்த சவுக்கடிக்குப் பிறகாவது இந்தக் "காப்பிக் கூளம்" திருந்தும் என்று நினைத்தோம். ஆனால் அதற்குப் பதில் அளிக்கும் ரீதியில் சம்பந்தா சம்பந்தமின்றி இப்பத்திரிகை எதை எதையோ உளறிவிட்டு, "பிரபஞ்சமே காப்பி மயம்" என்று தன் கேவலச் செய்கையையே "உன்னதக் கலை"யாக விளக்கியது!

இதன் பிறகு, தற்போதைய தமிழ்ப் பட சங்கீதத்தை "டப்பா சங்கீதம்" என்று ஆசிரியர் "கல்கி" எழுதியதும் இந்த தமிழ் "சினிமா உலக போஷகரு"க்கு பொத்துக் கொண்டு வந்துவிட்டது

"சின்னதுரை" தமிழ்ப் படத்தில் ஒற்றைக் கண்ணாடி, புகைக் குழாய் சகிதம் காட்சியளிப்பவர் நம் மஹாலிங்கம்தான்.

கோபம். "கல்கி"யை காரசாரமாகத் தாக்கி எழுதியது இப்பத்திரிகை. ஆனால் "சூரியனைப் பார்த்து நாய் குரைத்த மாதிரி" முடிந்து விட்டது விஷயம். "கல்கி" இந்தத் தாக்குதலைச் சட்டை செய்யவே யில்லை!

* * *

இந்த இரு சந்தர்ப்பங்களிலும் நடந்த ஒரு பொது விஷயம் கவனிக்கத் தக்கது. திருச்சி ஆசிரியருக்கு 'மறுப்பு' எழுதிய பின், அவரிடம் இப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர். 'தன் இஷ்டத்திற்கு மாருக துணை ஆசிரியர் எழுதிவிட்டதாக' தெரிவித்து மழுப்பினராம். ஆனல் இரண்டாவது சந்தர்ப்பத்திலோ, "தன் இஷ்டத்திற்கு மாருக பிரதம ஆசிரியர் எழுதி விட்டதாக" இப்பத்திரிகையின் துணை ஆசிரியர் "கல்கி"யிடம் வருத்தம் தெரிவித்தாராம்! இந்தப் "பிதற்றல் படலம்" வெளிவருவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்பாகவே, இந்தப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் நம் மானேஜரிடம், "இந்த உதவி ஆசிரியர்களே இப்படித்தான்; கேட்டும் கேட்காமலும் எதையாவது எழுதி விடுகிருர்கள்" என்று சாதுரியமாகக் கூறினர். ஒரு பத்திரிகைக்கு மூன்று ஆசிரியர்கள் இருப்பதில் எவ்வளவு சௌகரியம் பார்த்தீர்களா!

* * *

சென்ற பதினேழு வருஷங்களாக நம் சினிமாத் தொழிலுக்குப் பத்திரிகைகள் மூலம் தொண்டு செய்துவரும் "குண்டூசி" யாருக்கும், "வெட்டுக்கிளி"க்கும் நேற்று வந்த இந்தக் 'காப்பிக் கலைஞர்கள்' 'பத்திரிகையில் என்ன எழுத வேண்டும், எப்படி எழுத வேண்டும்" என்றெல்லாம் உபதேசம் செய்யத் தொடங்கியிருப்பது, "பத்துப் பிள்ளை பெற்றவளுக்கு மலடி பிரசவத்தைப்பற்றி பிரசங்கம்" செய்த மாதிரி இருக்கிறதல்லவா!

• • •

"மேலெழுந்தவாரியாக எந்த விஷயத்தையும் பார்ப்பதும், 'அந்த அறிவு'டனே எழுதுவதும் அவசரக் குடுக்கைகளின் சம்பிரதாயம்" என்று எழுதுகிறது இப்பத்திரிகை. ஆனல், எழுதியிருப்பதைச் சரிவரப்படித்து, அதை மனதில் புதிய வைத்துக் கொள்ளுவதற்கான அறிவு இல்லாதவர்களை என்ன



தமிழ்நாடெங்கும் தற்போது வெற்றிகரமாய் ஓடிக்கொண்டிருக்கும் ஜூபிடரின் "கைதி" தமிழ்ப் படத்தில் நடிக்கும் புது நடிகை மதுரை மீனாக்ஷி.

வென்று கூறுவது? சென்ற மாத 'நுனிப் புல்' பகுதியை இந்த "மும்மணி"களும் சேர்ந்து பன்முறை படிக்கட்டும். நான் எழுதியிருக்கும் விஷயம் எதற்காவது பதில் எழுதி யிருக்கிறார்களா என்பதைப் பார்க்கட்டும்.

என். எஸ். கேயின் திறமை, புகழ், எல்லாவற்றிற்குமே பாதுகாப்பாளராய் நியமிக்கப்பட்டவர் போல் சீறிவிழுந்திருக்கிறார் ஆசிரியர். என். எஸ். 'கே யிடம் எனக்கோ ஆசிரியருக்கோ துளிக் கூட விரோதமோ, வெறுப்போ கிடை

நாராயணன் கம்பெனியார் தயாரித்துவரும் "தாய் உள்ளம்" தமிழ்ப் படத்தில் எம். வி. ராஜம்மாவும், மாதுரி தேவியும்.

யாது. பல தடவைகளில் அவர் செய்துள்ள நல்ல காரியங்களை நிறையப் புகழ்ந்திருக்கிறோம். புகழவேண்டிய போது புகழ்வதும், கண்டிக்க வேண்டிய போது கண்டிப்பதுமே "குண்டூசி"யின் கொள்கை. ஆனால் அதிக உஷ்ணத்தால் கண் மங்கிப்போன இந்த "உஷ்ணமானி" (ஆசிரியர்) களின் கண்களுக்கு அவையெல்லாம் தென்படாமல் போனது ஆச்சரியமா என்ன?

* * *

"என். எஸ். கே. கலைத் துறையை விட்டு திசைமாறிச் சென்று அரசியல் துறையில் குட்டை குழப்பி, புகழுக்குப் பங்கம் தேடிக் கொள்ளுகிறார்" என்று கூறினேன்; கூறுகிறேன்; இனியும் கூறுவேன். 'இப்படிச் செய்வது தவறு' என்று கூறிக்கொண்டு என்னைக் கண்டிக்கிறார் இந்த பிரஹஸ்பதி. ஆனால் அதே பத்திரிகையின் தலையங்கத்தைப் படியுங்கள்: "கலையையும், அரசியலையும் சேர்த்துக் குட்டை குழப்புவது எப்பொழுதுமே சரியல்ல" என்று காணப்படுகிறதல்லவா! நான் எழுதியிருப்பதும் இதைத்தானே? பிறகு, ஏன் "குண்டூசி"யைத் தாக்குகிறார்? "குண்டூசி"யைத் தாக்க வேண்டும் என்ற ஆத்திரத்தில், இந்த ஆசிரியர் நியாயத்தைக் கவனிக்கத் தவறிவிட்டார், பாவம்!

"கலை என்பது ஒரு சிறந்த பிரசார சாதனம்" என்று ஏதோ புதிதாக, தாம் ஒரு பெரிய உண்மையைக் கண்டு பிடித்து விட்டவர் போல் கூறுகிறார். யார் இல்லை என்றார்கள்? நானும் இதைத் தானே கூறியிருக்கிறேன். கலையைத் தவறான பிரசாரத்திற்கு என். எஸ். கே. உபயோகிக்கக் கூடாது என்று நான் சொன்னால் தவறு; ஆனால் இந்தப் பத்திரிகையின் ஆசிரியர் அதையே சொன்னால் தேவவாக்கு! அப்படித் தானே!

* *

கிருஷ்ணன் நடித்த படங்கள் ஒரு காலத்தில் மிக வெற்றி பெற்றதாக எடுத்துக் காட்டுகிறார் ஆசிரியர். நானே அதைச் சொல்லியிருப்பது இந்தக் காமாலைக் கண்ணருக்குத் தெரியவில்லை. கிருஷ்ணன் தாம் நடிக்கும் படங்களிலும் நாடகங்களிலும் தம் நோக்கங்களுக்கு ஹாஸ்யப் பூச்சுக் கொடுத்துப் புகுத்தி வருவதாக ஆசிரியர் கூறுகிறார். நான் கூறியிருப்பதும் அது தானே! 'ஹாஸ்யத்திற்காகவே நம் புராண பாத்திரங்களையும், கடவுள்களையும் கிருஷ்ணன் கிண்டல் செய்து வருகிறார்' என்று எண்ணி மக்கள் சகித்துக் கொண்டிருந்தனர்—ஒரு காலத்தில். அவருடைய உண்மை நோக்கம் வெளியானது முதல் அவரது நடிப்பை மக்கள் வெறுக்கிறார்கள் என்பதைப்பற்றி ஆசிரியர் ஒன்றுமே சொல்லாமல் மழுப்பிவிட்டார்.

* * *

"எதையும் பகுத்தறிவுடன் கிரகித்து, புரியும்படி பிறருக்கு உபதேசம் செய்வதில் இன்று தமிழ் நாட்டில் கிருஷ்ணனுக்கு ஈடு கிருஷ்ணன் தான்" என்று அறிவிலிப் பிரசங்கம் செய்கிறார். தலைவர் ராஜாஜி முதல் தமிழ் நாட்டுத் தலைவர்களும் அறிவாளிகளும் கிருஷ்ணனிடம் கொஞ்ச காலம் சிக்ஷை பெற வேண்டும் என்று சொல்லாமல் நிறுத்தினாரே ஆசிரி

யர்! தவளை தானிருக்கும் கிணற்றைத் தானே சமுத்திரம் என்று கூறும்!

• • •

“இந்த மட்டில் ‘கலைவாணரை’ அனுப்பி வைக்கும் அளவிற்கு நமது கலை உலகம் முன்னேறி யிருக்கிறதே என்று ‘வெட்டுக்கிளி’ பூரிப்படையாமல் தாக்கி எழுதி யிருப்பது அதன் அறியாமையையே படம் பிடித்துக் காட்டுகிறது” என்று எழுதுகிறார் இந்த மகா ‘புத்திசாலி’. “என்னெஸ்கே போன்ற கோமாளிகளை வெளி நாடுகளுக்கு அனுப்பி கூத்தடிக்கச் செய்தது இந்திய தேசத்திற்கே பேரவமானம்” என்று பிரபல “பில்மிந்தியா” பத்திரிகை எழுதி யிருப்பதை இந்த ஆசிரியர் படித்தாவது தன் அறியாமையைப் பழுது பார்த்துக் கொள்ளட்டும்!

• • •

இந்த அறிவிலிப் பிதற்றலில் இரண்டு விஷயம் தெளிவாக இருக்கிறது. ஒன்று என். எஸ். கே.யுக்கு வால் பிடிப்பது; மற்றது “குண்டூசி”யைத் தாக்குவது. இந்தப் பத்திரிகையின் ஆசிரியர்கள் என். எஸ். கே.யுக்கு மட்டுமல்ல, இன்னும் எத்தனை பேருக்கு வேண்டுமானாலும் வால் பிடிக்கட்டும், கால் பிடிக்கட்டும், இன்னும் எதை வேண்டுமானாலும் செய்யட்டும்! ஆனால், இதற்காக பிற பத்திரிகைகளைப் பற்றித் தாறுமாறாய் எழுதி தன் அறியாமையைப் பிரகடனம் செய்து கொள்ளுவது தான் பரிதாபமாயிருக்கிறது!

• • •

‘அசல் வாழ்ந்தால் ஐந்து நாள் பட்டினி கிடக்கும்’ கோஷ்டியையோ, சரக்கில்லாமல் ஜம்பம் பேசும் வர்க்கத்தையோ “குண்டூசி” சேர்ந்ததல்ல. வேண்டியவர்கள், வேண்டாதவர்கள், லாபம், நஷ்டம் என்ற பாகுபாடு நோக்கமின்றி நாம் நிர்த்தாக்ஷிணிய சேவை செய்து வருவது நம் நேயர்களுக்குத் தெரியும். இதைப் புரிந்து கொள்ள முடியாமல் இந்தக் “காப்பிக் கூள”த்தின் மூளை இந்தக் குளிர் காலத்திலேயே இவ்வளவு சூடேறிப் போய் விட்டது! அடுத்து வரும் வெயில் காலத்தில் என்னாகுமோ, பாவம்!

• • •

நான் பயிர்களைச் சேதம் செய்யும் ‘வெட்டுக்கிளி’ அல்ல என்பதைத் தலைப்பே தெளிவாகக் காட்டுகிறது. மேலும் சில மாதங்களுக்கு முன் இதைப்பற்றி வியாக்கியானம் வேறு செய்திருக்கிறேன். அதெல்லாமிருக்க, நான் “பகுத்தறிவுக்கு சேதம் செய்யப் புறப்பட்டி”ருப்பதாக இந்த “ஞான சூன்யம்” எழுதுகிறது. பகுத்தறிவு துளியும் இல்லாத போது இதைப்பற்றி இவர்கள் ஏன் கவலைப்பட வேண்டும்!

• • •

“குண்டூசி”யைத் தாக்கி எழுதுவதில் பிரமாத ஆசை கொண்டிருக்கிறது இந்தக் கலைக் குப்பை. இந்த ஆசையைப் பூரணமாக நிறைவேற்றிக் கொள்ளட்டும். பத்திரிகையில் சில பக்கங்களென்ன, பத்திரிகை பூராவையுமே “குண்டூசி”யைத் தாக்குவதற்குப் பயன் படுத்தட்டும். ஆனால் இந்தக் குப்பை ஆராய்ச்சிக்காக நாம் இனி காலத்தையும், பக்கங்களையும் வீணாக்கத் தயாராயில்லை. நம் நேயர்களின் வற்புறுத்தல்களுக்காக வேண்டியே இந்த ஒரு முறை மட்டும் எழுதியிருக்கிறோம். இத்துடன் இதற்கு நான் மூடு விழாவும் கொண்டாடுகிறேன்.

“ஆடினதெப்படியோ நடனம், ‘அமரகவி’யில் ?” டி. ஆர். ராஜகுமாரியிடம் இந்த காவலர்கள் நிச்சயம் ஏமாந்து போவார்கள் என்று தெரிகிறதல்லவா ?

சோவியத் சினிமா

டைரெக்டர் கே. சுப்ரமண்யம்

ரஷ்ய சினிமாத் தொழிலின் அடிப் படை, நடை முறை, பிற தேசங் களிலிருப்பதைப் போலன்றி வேறுபட்ட தாக இருக்கிறது. அங்கே சினிமா சர்க் காரின் நிர்வாகத்தில், அவர்களால் சிருஷ் டிக்கப்பட்டு, உருவாக்கப்பட்டு, ஒரு தேசியத் தொழிலாக இருக்கிறது. நம் நாட்டில், ரயில்வே, கல்வி இப்படி ஒவ் வொரு இலாகாவுக்கும் தனித் தனியே ஒரு மந்திரி இருப்பதுபோல ரஷ்யாவில் சினிமாத் தொழிலுக்கென்றே தனியாக ஒரு மந்திரி இருக்கிறார். படத் தயாரிப்பு, விநியோகம், திரையிடுதல், போன்ற சகல வேலைகளும் இந்த மந்திரி இலாகா வின் கண்காணிப்பில் நடந்து வரு கின்றன. வெளி நாட்டு விவகார இலா காவுக்கு அடுத்தபடி இந்த இலாகாவுக்கே அதிகமான அதிகாரங்களும், பிரதான்ய மும் ரஷ்யாவில் அளிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

மற்ற எந்த சாதானத்தையும்விட சினிமா மூலம் தேச மக்களின் அறிவை விருத்தி செய்ய முடியுமென்று ரஷ்ய சர்க்கார் நம்புகிறது. அக்டோபர் புரட் சிக்குப் பின், ரஷ்யா சினிமாத் தொழிலை தன் நிர்வாகத்தின் கீழ் எடுத் துக்கொண்டது. கிரியாம்சையில், திறன் அறிந்து, நிறைய சந்தர்ப்பம் அளிக்கப் பட்டு, ஒவ்வொரு துறையும் நன்றாக வளர்ச்சி அடைந்திருக்கிறது. படத் தயாரிப்பிற்காகச் செலவு செய்யப்படும் தொகை, திருப்பக் கிடைக்கும் தொகை எல்லாமே ரஷ்ய சர்க்காரைச் சேர்ந்தது.

தயாரிக்கப்படும் படங்களின் தன்மை யைப் பார்ப்போம். மத்திய சர்க்காரில் இருப்பது போலவே ரஷ்யாவின் பதினாறு மாகாண சர்க்கார்களில் சினிமாவுக்கு ஒவ்வொரு மந்திரி இருக்கிறார். ஒவ்வொரு மாகாணத்திலும் குறைந்தது ஒரு ஸ்டுடி யோவாவது இருக்கிறது. சினிமா சம்பந் தப்பட்டமட்டில், மத்திய சர்க்காருக்கும் மாகாண சர்க்கார்களுக்கும் இடையே ஒற்றுமை இருந்து வருகிறது.

தயாரிக்கப்படும் படங்கள் பின்கண்ட மூன்று பிரிவுகளாக பாகுபடுத்தப் பட் படுள்ளன : (1) கதைப் படங்கள் (2) டாக்குமென்டரி படங்கள். (3) விஞ் ஞான, கல்விப் படங்கள். (4) கார்ட்டூன் படங்கள். கதைப் படங்களைப் பொருத்த வரை அவைகளின் போக்கு—சரித்திர நிகழ்ச்சி, கிராமியக் கதை, ஜீவிய சரிதம், சமூகம் — இப்படி பலதரப்பட்டவை களாக இருக்கின்றன. சமூகப் படங்கள் என்றால் சாதாரணமாக பிரபல எழுத் தாளர்களான டால்ஸ்டாய், மாக்ஸிம் கார்க்கி போன்ற பிரபல எழுத்தாளர் களின் கதைகளாக இருக்கும். தவிர, பாதிக்குமேல், படத்திற்கெனத் தேர்ந் தெடுக்கப்படும் கதைகளின் போக்கு, கம்யூனிஸத்தைப் பிரசாரம் செய்வதாக வும், அதன் வெற்றியை எடுத்து விளக்கு வதாகவும் இருக்கும். மற்ற பாதி மனித உணர்ச்சிகளைப் பிரதிபலித்துக் காட்டுவ தாக இருக்கும். ஆனால், எல்லாக் கதை களுமே எந்த லட்சியத்துக்காக மனிதன் வாழ வேண்டுமென்பதை எடுத்துக் காட் டுவதாக இருக்கும். அதற்காக படத்தின் பொழுது போக்கு அம்சம் புறக்கணிக் கப் படுவதில்லை. படங்கள் தமாஷாக ரஸிக்கக்கூடிய வகையில் இருக்கும். அதே சமயம் படம் பார்ப்பவர்களின் மனதில் நிரந்தரமான ஒரு படிப்பினையைப் பதிய வைப்பதாகவும் இருக்கும்.

சரித்திரக் கதைகள், ஜீவிய வரலாறு கள்—இவைகளிலேயே சோவியத் சர்க் கார் முக்கியமாக கவனம் செலுத்துகின் றனர். சோவியத்தின் சரித்திரமும் அவர் களின் போராட்ட நிகழ்ச்சிகளும் படங் களில் நன்கு சித்தரிக்கப் படுகின்றன. இவை மக்களுக்கு சரித்திர ஞானத்தை விருத்தி செய்து கொள்ள உதவுகின் றன. பிரபல விஞ்ஞானிகள், பேனா வீரர் கள், சித்திரக்காரர்கள் முதலியவர்களைப் பெருமைப் படுத்தும் வகையில் இருக் கின்றன ஜீவிய சரித்திரப் படங்கள். மாபெரும் வீரர்கள், பெண் மணிகள்,

இவர்களின் வாழ்க்கையைக் காட்டுவதன் மூலம் மக்கள் மனதில் அவர்கள் நாட்டின் பெருமை அடிக்கடி படும்படிச் செய்கின்றனர். உதாரணமாக, பிரபல கவிஞரான புஷ்கின், கம்யூனிஸத்தின் ஸ்தாபகர் லெனின், இவர்களின் சரிதப் படங்கள் மிகப் புகழ் பெற்றுள்ளன. இந்த மாதிரிப் படங்களை ஒரு ரஷ்யன் கூடப் பார்க்கத் தவற மாட்டான்.

'மேக்கப்' கலையில் ரஷ்யர்கள் அபார முன்னேற்றம் அடைந்துள்ளனர். பிளாஸ்டிக் மேக்-அப் முறையில் அவர்கள் மிகத் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். அவர்கள் நடிகரின் முகத்தைமாற்றி, உருவகப் படுத்துவதற்கும், தாடை, நெற்றியிலுள்ள சுருக்கங்களை மறைப்பதற்கும் மெல்லிய, மிருதுவான ஒரு வகை ரப்பரை உபயோகிக்கின்றனர். இம் முறையால், சாதாரணமாக, எந்த மனிதனையும் சரித்திரத்தில் வரும் எந்த கதா பாத்திரத்தைப் போலவும் தோன்றும்படி மாற்றிவிட முடியும்.

ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன். 'பெர்லின் வீழ்ச்சி' என்ற ஒரு ரஷ்யப் படத்தை நாங்கள் பார்த்தோம். படத்தில் ஹிட்லர், ஸ்டாலின், சர்ச்சில் மூவரும் வருகிறார்கள். உண்மையில் அவர்களே தானோ என்று பிரமிக்கும்படி இருந்தது. எல்லாம் பிளாஸ்டிக் மேக்கப்பின் உதவியினால் தான். இம் முறை நம் நாட்டில் முயற்சி செய்யப்பட வேண்டும் என்பது என் ஆசை. அப்படி முடிந்தால் நாம், சிவாஜி, அக்பர் போன்ற மாபெரும் மனிதர்களையும், கிருஷ்ணன், ராமன், துஷ்யந்தன் போன்ற புராண புருஷர்களையும், ரவி வர்மாவின் படத்தின் உதவி கொண்டு அப்படியே திரைக்குக் கொண்டுவர இயலுமல்லவா!

ரஷ்ய டாக்குமென்டரி படங்களில் இரண்டு மாதிரியானவை உண்டு. ஒன்று இயற்கையானது; மற்றொன்று செயற்கையானது. நாங்கள் சில டாக்குமென்டரி படங்களைப் பார்த்தோம். "அன்டார்ட்டிக் யாத்திரை" பற்றியது ஒன்று. இது ஒரு கலர்ப் படம். விஞ்ஞானிகளும், ஆராய்ச்சியாளர்களும் அடங்கிய ஒரு கோஷ்டி பிரத்தியேகமான ஒரு கப்பலில் அன்டார்ட்டிக் பிரதேசத்திற்குப் போகிறது. சமுத்திரத்தில் பெரிய பெரிய ஐஸ் பாறைகள் மிதந்து வருவது, பாலைப் போன்ற வெண்மையான பறவைக் கூட்

டம்—இவைகளுடன் படத்தையும் எவ்வளவு சிறப்பாக ஒளிப்பதிவு செய்திருக்கிருர்கள்! மற்ருென்று விமான அணி வகுப்பு பற்றியது. இதுவும் ஒரு கலர்ப் படம் தான். ஆகாயத்திலிருந்தபடி இவ்வளவு சிறப்பாகப் படம் பிடித்திருப்பது உண்மையில் ஒரு மகத்தான வெற்றி தான். துரதிருஷ்ட வசமாக இந்த டாக்குமென்டரி படங்கள் இந்தியாவுக்கு வரவில்லை.

அடுத்தபடி கல்வி, விஞ்ஞான் சம்பந்தமான படங்களை எடுத்துக் கொள்ளலாம். விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட படங்களைத் தயாரிப்பதற்கென தனியே ஒரு அதிகாரி இருக்கிருர். அவரது இலாகா தயாரிக்கும் வைத்திய சம்பந்தமான படங்கள், வைத்தியக் கல்விக்கு சிறந்த திருஷ்டி போதனு முறையாக இருக்கிறது. பிரசவம், பிளாஸ்டிக் சஸ்திர சிகிச்சை, இவை சம்பந்தமான ரஷ்யப் படங்கள் உலகத்திலேயே சிறந்தவைகள் என்று நான் கேள்விப்பட்டேன். இந்தியக் கலாசார, விஞ்ஞான தூதுகோஷ்டியின் தலைவர் டாக்டர் பாலிகா, ‘இம்மாதிரிப் படங்களை உலகமெங்கும் காட்டினுல் மக்கள் மிகுந்த பலனடைவார்கள்’ என்று அபிப்பிராயம் தெரிவித்திருக்கிருர். கல்வித் துறையில் அக்கரை உள்ளவர்கள் தயாரிக்கும் சிறுவர்களுக்கான படங்கள் பள்ளிக்கூடங்களில் திரையிடப்படுகின்றன.

இவைகள் தவிர, வழக்கமான செய்தி துண்டுப் படங்கள் வேறு இருக்கின்றன. நாட்டில் நடக்கும் செய்திகள் படமாக்கப்பட்டு 24 மணி நேரத்திற்குள் திரையிடப்படுகின்றன, அம்மாதிரி துண்டுப் படங்கள் டெலிவிஷன் மூலமும் காட்டப்படுகின்றன. மாஸ்கோ நகரத்தில் மட்டும் 41,000 டெலிஷன் செட்டுகள் உள்ளன- அந்த 41,000 வீடுகளில் உள்ளவர்கள் மேற்கண்ட செய்திப் படங்களைக் கண்டு களிக்க முடியும். சில சமயங்களில் செய்தி நடக்கும் போதே கூடக் காணலாம்; தப்பினுல் 24 மணி நேரத்திற்குள் பார்த்துவிடலாம்.

மாஸ்கோவிலும் லெனின்கிராடிலும், கதைப் படங்கள், டாக்குமென்டரி படங்கள் இவைகளைத் தயாரிக்க தனித் தனியே ஸ்டுடியோக்கள் உள்ளன. மாஸ்கோவில், இரண்டாயிரம் சித்திரக்காரர்கள் வேலை பார்க்கும்—விசேஷ வசதிகளுடன் கூடிய—கார்ட்டூன் படங்கள் தயாரிப்பதற்கான ஒரு ஸ்டுடியோ இருக்கிறது. இந்த ஸ்டுடியோவில் கலர்ப் படங்களும், சாதாரணப் படங்களும் தயாரிக்கின்றனர். கார்ட்டூன் படங்களையும் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்; சில படங்கள் சிறுவர்களுக்கெனவே பிரத்தியேகமாக தயாரிக்கப்படுகின்றன. இது மாதிரி தயாரிக்கப்படும் படங்கள் பிராணிகள், பறவைகள், அவைகள் உயிர் வாழும் விதத்தையும், சுகாதாரத்தையும் பற்றி சிறுவர்களுக்கு போதிப்பவைகளாக இருக்கின்றன.

ஸ்டுடியோக்களெல்லாம் சிறந்த ஒலி, ஒளிப் பதிவு இயந்திரங்களுடன் அமைக்கப்பட்டுள்ளன. எந்தப் படமானுலும் திட்டம் போட்டு, அதன்படி தயாரிக்கிருர்கள். செலவுக்கான புள்ளி விபரங்களை மனதில் கொண்டே படம் தயாரிக்க முற்படுகிருர்கள். கடந்த மூன்று வருஷங்களில், செலவினம் அவர்கள் முதலில் போட்ட புள்ளி விவரத்தை

[தொடர்ச்சி 50-ம் பக்கத்தில்]

அனைவருக்கும் ஆனந்தம் அளிப்பது

நீலகிரி காபி

தலைமை ஆபிஸ்:
28 வெங்கடாஜல முதலி தெரு.
பி. டி. சென்னை.
கிளை: 82 நாட்டுபிள்ளையார் கோயில் தெரு,
ஜி. டி. சென்னை.
—89 பாண்டி பஸார், —
தியாகராயநகர், சென்னை—17.

RKF
RADHAKRISHNA FILMS
ALLEPPEY
Sole Proprietor S. KUMARASWAMY REDDIAR
அந்தமான் கைதி



தன் தங்கையின் சுகந்திற்காக, தன்
வாழ்க்கையைத் தியாகம் செய்து
'அந்தமான் கைதி' யான ஓர் அண்ண
னின் உருக்கமான கதை. பல சபாக்க
ளாலும் நாடகமாக நடிக்கப்பட்டு பிர
சித்தமான உணர்ச்சி மிக்க சித்திரம்.







பிரபல நக்ஷத்திரங்கள் பலர் நடிக்கும், ராதாகிருஷ்ணா பில்ம்ஸாரின் இந்த சமூகப்படம், மார்ச் மாதம் தமிழ் நாடெங்கும் வெளிவரும்.

பாவம் அந்தப் பெண்
மலேரியாவினுல் என்ன
கஷ்டப்படுகிறுள்

'பாலுட்ரின்'

அந்தத் தொல்லையினின்றும் என்னைப் பாதுகாத்துவருகிறது

எலும்பையே நொறுக்குவது போன்ற தினசரி குடும்ப வேலைகளுக்கு மேல் மலேரியா வேறு. பாவம் அந்தப் பெண் மெலிந்து வெறும் நிழல்போல ஆகிவிட்டாள். அந்த சாதுப்பெண் அதைப்பற்றி என்னதான் செய்கிருளோ கடவுளுக்குத்தான் தெரியும். எப்போது பார்த்தாலும் அவள் நோய், நோய், நோய் என்று நோயினுல் நொறுங்குகிறதைத்தான் நாங்கள் காண்கிறோம். ஆனல் தினமும் ஒரு 'பாலுட்ரின்' மாத்திரை வீதம் சாப்பிட்டு வந்தால் மூன்று அல்லது நான்கு நாட்களுக்குள் அவள் சுலபமாக குணமடையலாம். அவளது உதாரணம் என்னை உஷார்ப்படுத்திவிட்டது. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் சாப்பாட்டுக்குப் பிறகு ஒரு 'பாலுட்ரின்' மாத்திரை சாப்பிடுவதை நான் வழக்கமாக ஆக்கிக் கொண்டுவிட்டேன். என் குடும்பத்திலே மற்றவர்களும் இதைப் பின்பற்றுமாறு செய்து வருகிறேன். ஆகையினுல் மலேரியா எனது வாசற்படிகளை அணுகுவது இல்லை.

ICI

பாலுட்ரின்*

டிரேட் மார்க்

மலேரியாவுக்கு ஓர் அற்புதமான மருந்து

* அளவுக்கு ஒரு வில்லை

இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிமிடெட்

IX-P 139 TM

குண்டூசியைக் கேளுங்கள்

கலை சம்பந்தமாக உங்களுக்கு என்ன சந்தேகமிருந்தாலும் "குண்டூசி"யிடம் கேளுங்கள். இலவசமாகவே பதில் பெறலாம். யாருடைய மனமும் புண்படாதபடி தமாஷாக பதிலளித்து, தமிழ் சினிமா உலகை சீர்திருத்துவதே இப் பகுதியின் நோக்கமாகும்.

—ஆசிரியர்

டி. எம். மூர்த்தி (சாத்தங்குளம்)

ஆண்களின் வாடையே கூடாதென்று லலிதா தம்முடைய சகோதரிகளான பத்மினி, ராகினி இவர்களுடனேயே ஆடி வந்தாரே; இப்பொழுது மட்டும் அவர் தனியாகச் சென்று வேறு ஆண்களுடன் நடிக்கக் காரணமென்ன?

ஆண் வாடை கூடாது என்று லலிதா நினைத்ததோ, சொன்னதோ கிடையாது. ஆனால், 'கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அழ வேண்டும்' என்கிறீரா? தமக்கு இரு சகோதரிகளிருக்கையில் கூட ஆடுவதற்குப் பிற ஆண்களின் உதவியை எதற்காக நாட வேண்டும்!

ஏ. பீ. பிரான்ஸிஸ் தியஸ் (அவிசவெல்ல, இலங்கை)

கே. டி. ருக்மணியும், பி. எஸ். ஸ்ரீனிவாஸ ராவும் தற்போது எந்தப் படங்களில் நடித்து வருகின்றனர்?

இவ்விருவரும் சினிமா உலகிலிருந்தே சீட்டு வாங்கிக் கொண்டு விட்டனர். ஒரு வேளை, ஸ்ரீனிவாஸ ராவ் பம்பாயில் ஏதேனும் படங்களில் புனை பெயருடன் நடிக்கிறாரோ என்று சந்தேகிக்கிறேன்.

வி. ஆர். சுப்பையா (மலாயா)

சின்னப்பாவுக்கு எத்தனை குழந்தைகள் உள்ளனர்? அவரது மனைவி யார்?

முன்பு ஒரு சமயம் சினிமா நடிகையாய் இருந்த ஏ. சகுந்தலாதான் சின்னப்பாவின் மனைவி. அவர்களுக்கு ராஜா பகதூர் என்ற ஒரே ஒரு பையன் மட்டுமே பிறந்துள்ளான்.

"ஸ்வர்ண ஸேவன" (இலங்கை)

நான் ஒரு சினிமாக் கம்பெனியில் சேர விரும்புகிறேன். இதற்கு மிகச் சுலபமான வழியொன்றைச் சொல்லும்.

சினிமாக் கம்பெனியில் சேருவது சுலபமான விஷயமல்ல. அப்படியிருக்க அதற்கான வழியை எப்படிச் சுலபமாகச் சொல்ல முடியும்?

கே. சுப்ரமண்யம் (வத்தலகுண்டு)

"நிரபராதி" புகழ் அஞ்சலி தேவிக்கு நான் ஒரு புகழுரை அனுப்ப விரும்புகிறேன். ஆதலால் அவரது விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

c/o அஞ்சலி பிக்சர்ஸ், எல்டாம்ஸ் ரோடு, சென்னை-18.

வி. ராமஸ்வாமி (பேரளம்)

"ராஜாம்பாள்" படத்தில் கோபாலனாக நடிப்பவருடைய சொந்தப் பெயர் என்ன?

லக்ஷ்மி நாராயணன் என்பது.

புருஷோத்தமன் (பறங்கிமலை)

டி. ஈ. வரதன் சினிமாவுக்கு வருவதற்கு முன் என்ன செய்து கொண்டிருந்தார்?

நான் அதைப் பற்றிக் கவலையே படவில்லை. அவர் சினிமாவை விட்டால் என்ன தொழில் செய்வார் என்றே கவலைப் படுகிறேன்!

எஸ். சபாபதி (அறந்தாங்கி)

சினிமா நடிகைகளுக்குக் கடிதம் எழுதினுல் அவர்கள் அதைப் படிக்காமலே குப்பைத் தொட்டியில் போட்டுவிடுவது வழக்கமாம். எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்கூட இப்படிச் செய்து வருகிருர்களா?

ஆம். ஆனுல் படித்தவர்களுக்கும் படிக்காதவர்களுக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. படிக்காதவர்கள் கடிதத்தை வெறுமனே கூடையில் போடுவார்கள். படித்தவர்களோ கடிதத்தைத் துண்டு துண்டாய்க் கிழித்து விட்டுப் போடுவார்கள். காரணத்தை நீரே ஊகித்துக் கொள்ள முடியாதா என்ன?

பி. ராம்ராஜ் (கோயமுத்தூர்)

சினிமாவில் சேருவதற்காக நான் ஏராளமான பணத்தைச் செலவழித்திருக்கிறேன். இப்பொழுதுதான் எனக்கு ஒரு சிறு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. என் எதிர்காலத்தைப் பற்றி உம் அபிப்பிராயம் என்ன? இத்தொழில் என் ஆயுட்காலம் முழுமைக்கும் நீடித்திருக்குமா?

சினிமா ஒரு மாயை. எனவே அதில் நடக்கும் காரியங்களும், கிடைக்கும் பெயரும், புகழும் எந்த வரையறைக்கும் உட்பட்டவை யல்ல. நீர் கேட்டிருக்கும் கேள்விக்கு என்னைவிட ஒரு ஜோஸ்யன் அளிக்கும் பதில் உமக்குத் திருப்தி யளிக்கக் கூடும்.

கே. முனவ்வர் உஸேன் (ஆம்பூர்)

புளிமூட்டை ராமஸ்வாமி தற்போது எந்தப் படத்தில் நடிக்கிருர்?

நீர் அவரை "குமாரி" படத்தில் சந்திக்கலாம்.

"ராஜாம்பாள்" சம்பந்தமாக வழக்கில் சிக்கித் தவித்த அநுபவத்தின் விளைவாக மனேஹர் தாமே ஒரு வக்கிலாகிவிட்டார்! 'பழைய லோகசுந்தரி' என்று தன்னை நிராகரித்து விடுவாரோ என்ற கவலையோ மாதுரிக்கு! நாராயணன் கம்பெனியார் சீக்கிரமே வெளியிடப்போகும் "தாய் உள்ள"த்தில் இது ஒரு காட்சி.



விஜயா புரொடக்ஷன்ஸார் தமிழ், தெலுங்கு ஆகிய இரு பாஷைகளில் தயாரித்துவரும் "கல்யாணம் பண்ணிப் பார்" என்ற படத்தில் ஜெயராவ், ஜி. வரலக்ஷ்மி முதலியோர் தோன்றும் ஒரு உள்ள முருக்கும் கட்டம்.

ஆர். நாராயணன் (பாளையங்கோட்டை)

எம். ஜி. ராமச் சந்திரனின் முழு விலாஸத்தைத் தெரிவிக்க முடியுமா?

அட ராமா! சந்திரனின் முழு விலாஸத்தை பௌர்ணமியன்று பார்த்துத் தெரிந்து கொள்ளக் கூடாதோ.

பத்மராணி சண்முகதாஸன் (யாழ்ப்பாணம்)

பத்மினி, குமாரி கமலா இவ்விருவருள் யார் மூத்தவர்? இவர்களின் பிறந்த தேதியைத் தெரிவியுங்கள்.

இருவருள் பத்மினி தான் (சுமார் ஆறு மாதம்) மூத்தவர். பத்மினி 1933 டிஸம்பர் 25ந் தேதியும், குமாரி கமலா 1934 ஜூன் 9ந் தேதியும் பிறந்தவர்கள் ஆவர்.

ஸ்ரீனிவாசன் (வந்தவாசி)

"வாழ்க்கை" படக் கதையும், "குன்வரா பாப்" படக் கதையும் ஒன்றாயிருப்பது உமக்குத் தெரியுமா? காரணம் என்ன?

தெரியும். காரணம், இவ்விரண்டும் "பேச்சலர் பாதர்" என்ற ஆங்கிலக் கதையைத் தழுவப் பட்டுள்ளன என்பது தான்.

முகுந்தன் (ஆத்தூர்)

உங்கள் மனதைக் கொள்ளை கொண்டவர் நடிகையா? நடிகரா? அவர் யார்!

என் மனது கொள்ளை போகும்படி விடுவதற்கு நான் ஏமாந்த பேர்வழி அல்ல. ஆனால் நாகய்யா பக்திமானாய் நடிக்கும் போது நான் மெய் மறந்து போவதுண்டு.

கே. சுப்பையா (மிஷபம்)

யூ. ஆர். ஜீவரத்தினம், வி. என். ஜானகி, பி. கே. சரஸ்வதி, லலிதா, பத்மினி இவர்களுள் நடிப்பிலும்

பேச்சிலும் யாருக்கு முதல் ஸ்தானம் அளிக்கலாம்?

நடிப்பில் பத்மினிக்கும், பேச்சில் லலிதாவுக்கும் முதல் ஸ்தானம் அளிக்கலாம்.

எஸ். கே. பாஷா (நல்லூர்)

தமிழ் நடிகர்களுள் அழகில் சிறந்தவர் யார்?

தற்போதைக்கு ('ராஜாம்பா"வில் நடித்த) மனோஹரைக் கூறலாம்.

ராமச்சந்திரன் (பட்டீஸ்வரம்)

டி. ஆர். மஹாலிங்கம் இறந்துவிட்டதாக எங்கள் ஊரில் சொல்லுகிறார்களே, இச்செய்தி உண்மையா?

துளிக்கூட நிஜக் கலப்பில்லாத பொய் இது. சில படமுதலாளிகள் கையில் பணமில்லாமல் அடிக்கடி செத்துப் பிழைப்பதுண்டு! படமுதலாளி மஹாலிங்கமோ அப்படிக் கூடச் செய்யவில்லை. ஆனால், அவரோடு நடிக்கும் கதாநாயகிக்கு மட்டும் நித்திய கண்டம் தான்!

தாஸன் (புது டில்லி)

"லலிதா, பத்மினியை மணக்க விரும்பிய நண்பருக்கு ஒரு ஜோடி தொட்டில் பரிசளிப்பீர்கள்" என்று எழுதியிருந்தீர்கள். இந்த விஷயத்தில் நான் அந்த நண்பருடன் போட்டியிட்டு வெற்றி பெற்றுவிட்டால் நீர் எனக்கு என்ன கொடுப்பீர்?

மேற்படி தொட்டில்களை ஆட்டும் உத்தியோகத்தை உமக்குக் கொடுப்பேன்!

"கலைப்பித்தன்" (குளித்தலை)

என். எஸ். கிருஷ்ணன் தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

ரஷ்யாவிலிருந்து தாம் கொண்டுவந்த மூட்டைகளை அவிழ்த்து உதறிக் கொண்டிருக்கிறார்.

எம். கே. நடராஜா

சினிமா நக்ஷத்திரங்களை நேரில் பார்க்கும்போது ரஸிகர்கள் காட்டுமிராண்டித்தனமாய்நடந்துகொள்ளு

உறுதிக்கும் நாகரீகத்திற்கும்

மைசூர் ஸில்க்ஸ்

ஜார்ஜெட்கள், கிரேப்கள், புடவைகள், கவர்ச்சியான டிஸைன்கள்! நூதனமான வர்ணங்கள்!

கவர்ன்மென்டு ஸில்க் வீவிங் பாக்டரி,

மைசூர்.

வதாக ஒரு நடிகையின் கட்டுரையில் படித்தேன். இவ்விதம் நடப்பது அவர்களது நடிப்புத் திறமை காரணமாகவா? அல்லது அவர்களது அலங்காரத் தோற்றம் காரணமாகவா?

இவையிரண்டும் காரணமல்ல. இது மாதிரியான நடத்தைக்கு ரஸிகர்களின் தளர்ந்த மனம்தான் காரணம்.

பாபாசான் (திருச்சி)

பி. ஏ. பெரியநாயகி, வஸந்த குமாரி, கே. வி. ஜானகி, குமாரி ரத்தினம், பி. லீலா, பட்டம்மாள், கிருஷ்ணவேணி ஆகியோருள் சினிமாவில் பின்னணி பாடுவதில் யாருக்கு முதல் ஸ்தானம் அளிக்கலாம்?

எம். எல். வஸந்த குமாரியை முதன்மையாய் கூறலாம்.

கே. எம். பிச்சைமுத்து (கல்லார்)

டி. எஸ். பாலய்யாவுக்கு விவாஹம் ஆகிவிட்டதா?

அனைவருக்கும் ஆனந்தம் அளிப்பது

தலைமை ஆபீஸ்:
28 வெங்கடாஜல முதலி தெரு.
பீ. டி. சென்னை.
கிளை: 82 நாட்டுபிள்ளையார் கோயில் தெரு,
ஜீ. டி. சென்னை.
89 பாண்டி பஸார், தி. நகர், சென்னை—17.

மெதுவாகக் கேட்கிறீரே! ஒன்றுக்கு இரண்டாக ஆகியிருக்கிறது, ஐயா!

கே. வி. கிருஷ்ணன் (ஆரணி)

"சம்சாரம்" படத்தில் உமக்கு யாருடைய நடிப்பு மிகப் பிடித்திருக்கிறது?

எனக்கு ஸ்ரீராமின் நடிப்புதான் மிகப் பிடித்திருக்கிறது.

கே. ஆர். அன்னதானம் (கம்பளை)

சினிமா நக்ஷத்திரங்கள் தங்களை நாடிவரும் ரஸிகர்களை அன்புடன் வரவேற்றுப் பேசுவார்களா?

தாராளமாய் வரவேற்றுப் பேசுவார்கள், சினிமா உலகில் தங்களை அழைப்பாரில்லாமற் போனபின்!

எஸ். கே. மூர்த்தி (பம்பாய்)

"சன்ஸார்" படத்தில் நடிக்கும் எம். கே. ராதாவின் விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

எம். கே. ராதா, பிருந்தாவன் தெரு, மைலாப்பூர்—என்று எழுதும்.

எஸ். யு. ஆறுமுகம் (இரச்சகுளம்)

கோவாடினேட்டட் ஸினி புரொடக்ஷன்ஸின் "நண்பன்" படம் எப்பொழுது வெளிவரும்?

சில மாதங்களாக இந்தப் படத்தைப் பற்றிய தகவலே கிடைக்கவில்லை. கிடைத்தால் வெளியிடுகிறேன்.

வி. எஸ். பாலு (வடிவேர்)

நீங்கள் கலையை வளர்க்கப் பாடுபடுகிறீர்களா? அல்லது வயிறு வளர்ப்பதற்குப் பாடுபடுகிறீர்களா?

இரண்டுக்கும்தான், ஸ்வாமி! வயிறு காய்ந்தால் கலை வளருமா, சொல்லும்!

கே. எம். கந்தசாமி (கருப்பம்பாளையம்)

மாடர்ன் தியேட்டர்ஸ் தற்போது என்னென்ன படங்களைத் தயாரித்துக் கொண்டிருக்கிறது?

"கல்யாணி" என்ற படத்தைத் தமிழ், தெலுங்கு ஆகிய பாஷைகளிலும், "காடு" என்ற படத்தை தமிழ், சிங்களம், ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய பாஷை

பல வருஷங்களுக்குப் பிறகு பழம் நடிகை சந்தானலக்ஷ்மியை சந்திக்கும் பாக்யத்தை பக்ஷி ராஜா பில்ம்ஸார் "காஞ்சன"வில் நமக்கு அளிக்கப் போகிறார்கள். கூட இருப்பவர்கள் டி. எஸ். துரைராஜும், லலிதாவும்.

களிலும், "ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி"யை ஹிந்தியிலும் தயாரித்துக் கொண்டிருக்கின்றனர்.

என். ஆறுமுகம் (ஆறுமுகனேரி)

கே. மாலதிக்குக் குழந்தைகள் உண்டா?

உண்டாவதற்கு அவருக்கு நிரம்ப ஆசைதான். ஆனால்......?

பி. இஸ்ரேல் (கொழும்பு)

சினிமாப் படம் எதைப் பார்த்தாலும் ஒரே காதலும், காமமுமாகவே இருக்கிறதே. இதைக் குறைத்து மக்கள் நல்லொழுக்க முறைகளைக் கற்கவும், சன்மார்க்கத்தைக் கடைப்பிடிக்கவும் செய்யக் கூடியபடி படங்களின் போக்கை மாற்ற முடியுமா? அல்லது முடியாதா?

சினிமா ஒரு சிறந்த பொழுது போக்குச் சாதனமாக இருப்பதையே நான் விரும்புகிறேன். அதே சமயத்தில், ஆபாசக் காட்சிகளை ஒழிப்பதில் எனக்குத் துளியும் ஆட்சேபம் இல்லை. சினிமாவை தமிழ் இலக்கணம் மாதிரியோ, நீதி மஞ்சரி மாதிரியோ செய்துவிட வேண்டும் என்று நீர் கூறினால், நான் அதை ஒப்புக்கொள்ள முடியாது.

ஆர்.எல். கோபாலகிருஷ்ணன் (திருப்பூர்)

"ராஜாம்பாளி"ல் நடிக்கும் பி. கே. சரஸ்வதி விவாஹம் ஆனவரா? குழந்தைகள் உண்டா? அவருக்கு நாட்டியம் ஆடத் தெரியுமா? கச்சேரி செய்ய அழைத்தால் வருவாரா?

தம் நாட்டியத்தின் மூலமே சரஸ்வதி, ஒரு சினிமா நடிகை ஆனார் என்றாலும், அவர் மேடைமீது ஆடக் காணோம். தற்போது அவர் தன் 'அம்மை'யின் செல்லக் "குழந்தை" யாக மட்டும் இருந்து வருகிறார். விவாஹம், குழந்தைப்பேறு இவையெல்லாம் இனிமேல் தான் ஏற்படவேண்டும்.

பாலசந்தரின் பிரமிக்கத் தக்க வெற்றி!

ஜூபிடரின் துணிகர முயற்சி—"கைதி"

ஒரு படத்தின் கதை, டைரெக்ஷன், சங்கீத டைரெக்ஷன், நடிப்பு, இப்படி பல பொறுப்புகளை ஒருவரே ஏற்றுக் கொள்கிறாரென்றால் அதன் வெற்றியைப் பற்றி சந்தேகிக்கத்தான் தோன்றும். ஜூபிடர் பிக்சர்ஸார் எஸ். பாலசந்தருக்கு "கைதி" பட சம்பந்தமாக அவ்வளவு பொறுப்புகளையும் கொடுத்துப் பார்த்திருந்தார்கள். அவர் "கைதி"யை ஒரு சிறந்த படமாகத் தயாரித்து, அந்தப் பரீக்ஷையில் நல்ல வெற்றி பெற்றிருக்கிறார்.

பட்டதாரி விஜயன், கருணாகரரைக் கொன்றதாகக் கொலைக் குற்றம் சாட்டப்பட்டு, ஜன்ம தண்டனை பெறுகிறான். நிரபராதியான அவன் உண்மைக் குற்றவாளியைக் கண்டு பிடிக்கும் தீர்மானத்துடன் சிறைச்சாலையிலிருந்து தப்பி வக்கீல் ராமன் மகள் ரேவதியை ஆபத்திலிருந்து காப்பாற்றி அவளுடைய காதலுக்குப் பாத்திரமாகி மறைந்துவிடுகிறான். அவன் போலீஸாரின் கண்களிலிருந்து மறைந்து வாழப் புகலிடம் அளிக்கிறாள் கமலா. காதல் வளருகிறது. தன் காதலி கமலாவின் தந்தை விஜயசாரதிதான் உண்மைக் குற்றவாளி என்பதையும் விஜயன் தெரிந்து கொள்கிறான். இதனிடையில் கருணாகரரின் மகன் சேகரும் கொலை செய்யப்படுகிறான். கமலா தன் காதலனையே சந்தேகித்து வெறுக்கிறாள். விஜயன் விரக்தி அடைந்தவனாகி போலீஸிடம் சரண் அடைகிறான். ரேவதி தன் தந்தையின் உதவியினால் உண்மைக் குற்றவாளியான விஜயசாரதியை வெளிப்படுத்துகிறாள். இது தான் "கைதி" கதையின் சாரம்.

ஆங்கிலப் படக் கதைகளைப் போல இது ஒரு புது மாதிரியான கதை. 'விஜயன் போலீஸிடம் அகப்பட்டுக் கொண்டு விட்டான்' என்று நினைக்கும்படி பல சம்பவங்களை நேர்த்தியாகப் பிணைத்து, படம் பார்ப்பவர்களின் ஆவலைத் தூண்டும் வகையில் கதையை அமைத்திருக்கிறார். சில சம்பவங்கள் அசம்பாவிதமாகப் பட்டாலும், இப்படத்தின் சிறப்புக்கு பெரும் அளவு உதவியிருக்கின்றன கதையில் வரும் இத்தகைய நிகழ்ச்சிகள். உதாரணமாக வக்கீலின் மகன் விளையாட்டுத் துப்பாக்கியை வைத்துக் கொண்டு மிரட்டும் கட்டம்; கமலா யாருக்கு சாப்பாடு கொண்டு போகிறாள் என்று பார்க்க மோட்டார் ஷெட்டுக்கு விஜயசாரதி வருவது, இவைகளைக் குறிப்பிடலாம். கதையில் சில பலஹீனங்களும் இல்லாமற் போகவில்லை. தான் காதலிக்கும் கமலாவைத் தேடி வரும் சேகர் பங்களாவுக்குள் போகாமல் மோட்டார் ஷெட்டுக்கு வருவானேன்! முடிவில் கமலா விஷம் உண்டு இறப்பதாக முடித்திருப்பது இயற்கையாக இல்லை. கமலா-ரேவதி இருவரையும் விஜயன் மணக்க முடியாது என்பதற்காக ஒருவரை வேண்டுமென்றே கொன்றுவிட்டது போலவே தோன்றுகிறது. சம்பாஷணைகளைப் பற்றி ஒன்றும் சிலாகித்துக் கூறுவதற்கில்லை. மோசமாக இல்லை; அவ்வளவுதான்!

விஜயனாக நடிக்கும் எஸ். பாலசந்தர் நடிப்பு சில இடங்களில் மிகையாக இருந்தாலும் பொதுவாக நன்றாக நடித்திருக்கிறார். வைக்கோல் வண்டிக்காரனாக வரும்போதும், கடைசியில் சாகத் துணிந்து போலீஸிடம் சரணடையும்

கைதி

நீளம் :	15,586 அடிகள்
தயாரிப்பு :	எம். சோமசுந்தரம் (ஜூபிடர்)
வெளியீடு :	பெல் பிக்சர்ஸ்
நடிகர்கள் :	எஸ். பாலசந்தர் ரேவதி மீனாக்ஷி எஸ். ஏ. நடராஜன் ஆர். மாலதி
டைரெக்ஷன் :	எஸ். பாலசந்தர்

“வக்கீல் குமாஸ்தா உத்தியோகம் லேசான உத்தியோகம் இல்லைன்னு இப்போ தெரிஞ்சுகிட்டாயா?” என்று 'பிரண்ட்' ராமசாமி முத்துலக்ஷ்மியிடம் (“தாய் உள்ள”த்தில்) கேட்கிறார் போலிருக்கிறது.

கட்டங்களிலும் இவரது நடிப்பு ரொம்பவும் சிறப்பாக இருக்கிறது. கொலைகாரன் விஜயசாரதியாக நடிக்கும் எஸ். ஏ. நடராஜனின் நடிப்பு முற்பகுதியில் சப்பென்றிருந்தாலும் பிற்பகுதியில் வெளுத்துக் கட்டுகிறார். முக்கியமாக, இறுதியில் கோர்ட்டில் தன் குற்றங்களை ஒத்துக் கொள்ளும் கட்டத்தில் இவரது நடிப்பு கண்ணீரை வருவிப்பதாக இருக்கிறது. பிரபாகரனாக வரும் சிறுவன் வெடுக்வெடுக்கென்று பேசி துடியாக நடித்திருக்கிறான். வக்கீல் ராமனாக வரும் பக்ஷீருக்கு வேஷப் பொருத்தம் நன்றாக இருப்பதுடன், நடிப்பும் கம்பீரமாய் இருக்கிறது. மற்றுமுள்ள நடிகர்கள் அனைவருமே நன்றாக நடித்திருக்கிறார்கள்.

இந்தப் படத்திலுள்ள மற்றொரு பரீட்சை—ரேவதி, மீனாக்ஷி என்ற இரு புதிய முகங்களைப் பிரதம பாகங்களில் அறிமுகப் படுத்தியிருப்பதாகும். ரஸிகர்களுக்கு இது ஓரளவு ஆறுதல் அளிக்கக் கூடும். கமலாவாக நடிக்கும் ரேவதிக்கு நல்ல தோற்றம் இருக்கிறது. நடிப்பில் அபிவிருத்தி ஏற்படவேண்டும். தன் தந்தைதான் கொலையாளி என்று அறியும் போது அவர் நடிப்பு சப்பென்றிருக்கிறது. அவர் சம்பாஷணைகள் உச்சரிப்பு கூட அழுத்தமாக இல்லை. ரேவதியாக வரும் மீனாக்ஷி விஷயமாக ஏமாற்றமே ஏற்படுகிறது. நடிப்போ, தோற்றமோ எதுவும் குறிப்பிடும்படியாக இல்லை.

சில நல்ல 'ட்யூன்'கள் போடப்பட்டுள்ளன என்றாலும் பாட்டுகள் எதுவுமே மனதில் பதிவதாக இல்லை. பாட்டுகளின் கவனம்கூட சிறப்பாகக் குறிப்பிடுவதற்கில்லை. வண்டிக்காரன் பாடும் பாட்டில் தேர்தல் பற்றி வரும் அடிகள் நன்றாக இருக்கின்றன. பின்னணி சங்கீதம் திறமையாகக் கையாளப்படுகிறது. சம்பவங்களைத் தகுந்த பின்னணிவாத்ய இசைகளைக் கொண்டு விறுவிறுப்பாக்கியிருக்கிறார் பாலசந்தர்.

எமது பொங்கல் வாழ்த்துகள்!

ஒளிப்பதிவு பிரமாதமாக இருக்கிறது. பல கோணங்களில், கோர்ட், மோட்டார், ஷெட், வக்கீல் வீடு, இவைகளை வெகு நேர்த்தியாகப் பதிவு செய்திருக்கிறார்கள். ஒலிப்பதிவும் குறை சொல்ல முடியாத வகையில் இருக்கிறது. காட்சி ஜோடனைகளும் நன்றாக இருக்கின்றன.

ஹாஸ்யம் என்று ஒன்றைத் தனியாகப் புகுத்தாது, கதையிலேயே இழைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. பெண் கல்வி சம்பந்தமாக உள்ள நாட்டிய நாடகம் கருத்துடனும், ஹாஸ்யத்துடனும் பாராட்டத்தக்க வகையில் இருக்கிறது.

பல படங்களை டைரெக்ட் செய்து அநுபவம் பெற்றவர்கள்கூட பிரமிக்கும் முறையில் இருக்கிறது எஸ். பாலசந்திரனின் டைரெக்ஷன். சிரத்தையும் சிரமமும் எடுத்துக்கொண்டு ஒவ்வொரு சிறு விஷயத்தையும் கவனித்திருக்கிறார். கோபமாகப் பேசும் கட்டத்தில் ஊஞ்சலின் சங்கிலிகள் குறுக்கும் நெடுக்குமாக ஆடுவதைக் காட்டியிருப்பது; சேகர், குற்றவாளியைப்பற்றி இன்ஸ்பெக்டருக்குக் கூறிக் கொண்டிருக்கும் போதே அவன் கொலை செய்யப்பட்டதை டெலிபோனிலிருந்து வெளிப்பட்ட குழறின குரலில் காட்டப்படுவது, இப்படிப் பல இடங்களை எடுத்துக் காட்டலாம். தவிர, விஜயசாரதியின் கைரேகையை எடுக்க வக்கீல் கையாளும் யுக்தியை நன்றாகப் புரியும்படி கையாண்டிருக்கிறார். எதற்கும் இடது கையையே உபயோகிக்கும் விஜயசாரதி துப்பாக்கி சுட மட்டும் வலது கையை உபயோகித்ததைத் தவிர்த்திருக்க வேண்டும்.

கோர்ட் ஸீனில், பப்ளிக் பிராசிகியூட்டர், ஜூரர்களையும், மற்ற வக்கீல்களையும் பிரதட்சிணம் செய்தபடி விவாதம் செய்வது பொருத்தமற்றதாகவும், நகைப்புக் கிடமானதாகவும் காணப்படுகிறது.

மொத்தத்தில், "கைதி" எஸ். பாலசந்தரின் அமோக வெற்றி; ஜூபிடர் பிக்ஸர்ஸின் ஆபாசங்களற்ற—பார்க்கப்படவேண்டிய— புதுமாதிரியான ஒரு நல்ல சமூகப் படம்.

—"தாஸன்"

"மாயக்காரி" — ஒரு மூன்றாம்தரப் படம்

பல சினிமாக் கதைகளின் அவியல்

அஸ்வினியின் "மாயக்காரி"யை ஒரு கதை என்று கூறுவதைவிட, ஏற்கனவே வெளிவந்த பல படங்களிலிருந்து பல சம்பவங்களை எடுத்துத் தயாரித்த 'கதம்பம்' என்று சொல்லுவதே மிகவும் பொருந்தும். கதைப் போக்கை கவனிக்கும்போது இது நன்கு வெளிப்படுகிறது.

சேனாதிபதி பாஸ்கரனின் கொடுமையிலிருந்து தப்ப ராஜகுமாரி இந்துமதியும் அவளது காதலன் பரதாப்பும் தப்பி ஓடி, ஒரு பகல் வேஷக் கும்பலில் சேர்ந்து கொள்கின்றனர். பல முறை அவர்கள் சாமர்த்தியமாக பாஸ்கரனின் வீரர்களிடமிருந்து தப்பி, கடைசியில் சிக்கி விடுகின்றனர். குறவர் கூட்டம் ஒன்று வந்து அட்டஹாஸம் செய்து கதையை சுபமாக முடிக்கிறது. இடையில், காதலர்களைப் பிரிக்க ஒரு மாயக்காரி வந்து சேருகிறாள். இந்த மாயக்காரிக்கும் கதைக்கும் என்ன சம்பந்தம்? படத்தின் நீளத்தை அதிகப்படுத்தவும், படத்திற்கு "மாயக்காரி" என்று பெயர் வைக்கவுமே இப்படி ஒரு சம்பவத்தை சிருஷ்டித்தார்களோ என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. அதே போலத்தான் இறுதியில் பாஸ்கரனும் வீரர்களும் சாமியார்களாக வந்து அட்டகாசம் செய்யும் காட்சியும், சம்பாஷணைகள் சர்வ சாதாரணம்.

இந்தப் படத்தில் யாருடைய நடிப்புமே குறிப்பிடும்படியாக இல்லை. கதாநாயகனாக வரும் நாகேஸ்வர ராவ் ஆள் அழகாகத்தான் இருக்கிறார். ஆனால் வீராவேசமான கட்டங்களில் அவர் வரும்போது பரிதாபமாகவே இருக்கிறது. வில்லனாக வரும் முக்கமாலாவின் தோற்றம் கம்பீரமாக இருக்கிறது. ஆனால் நடிப்பு பூஜ்யம். படத்தின் ஹாஸ்ய பாகத்தைப் பூர்த்தி செய்ய கோவிந்தனாக சிவ ராவ் வருகிறார். இவரது கோணங்கி வேலைகளும், நடிப்பும் ஒரே கேலிக் கூத்தாக இருக்கிறது.

ராஜகுமாரியாக நடிக்கும் அஞ்சலி தேவி இப் படத்தில் தமது விசிறிகளை ஏமாற்றவே செய்திருக்கிறார். பகல் வேஷ கோஷ்டியில் இருக்கும் சமயம் ஓரக்கண் பார்வையால் எதிரிகளிடமிருந்து தப்பும் கட்டத்திலும், மாயக்காரியால் காதலன் பிரிக்கப்படும் கட்டத்திலும் தவிர வேறு எந்த இடத்திலுமே அவரது நடிப்பு சோபிதமாக இல்லை. தோழி லவங்கியாக நடிக்கும் நடிகையை 'குரங்கி' என்று அழைக்கத் தோன்றுகிறது—அவர் தோற்றம். பாம்பு கடித்ததாக அவர் நடிக்கும் கட்டம் மிக ஆபாஸமாக இருக்கிறது. குறத்தியாக நடிக்கும் பாலசரஸ்வதி ரொம்ப 'ப்ரீ'யாக நடிக்கிறார். நடிப்பும் பாதகமில்லை,

'டப்'பிங் பல இடங்களில் மகா மட்டம். சம்பாஷணை உச்சரிப்புகளும் ஒரே தமிழ்க் கொலையாக இருக்கிறது. கிராமத்தில் நடக்கும் கூத்து நன்றாக இருக்கிறது. ஆனால் சலிப்புத் தட்டும் அளவுக்கு இது நீண்டிருக்கிறது.

இப் படத்தின் சிறந்த அம்சங்கள் காட்சி ஜோடனைகளும், ஒளிப் பதிவும் தான். மாய மாங்கையுடன் கதாநாயகன் பறந்து செல்லுவது, மாயக்காரி திடீர் திடீரென்று தோன்றி மறைவது போன்ற காட்சிகள் பிரமிக்கும் முறையில் நன்கு பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒலிப்பதிவு சுகமில்லை. மொத்தத்தில் "மாயக்காரி" ஒரு சர்வசாதாரணமான மூன்றாம் தரப் படம்.

—"ஜாம்பவான்"

மாயக்காரி

நீளம் :	15,500 அடிகள்
தயாரிப்பு :	அஸ்வினி பிக்சர்ஸ்
வெளியீடு :	நேஷனல் பிக்சர்ஸ்
நடிகர்கள் :	நாகேஸ்வர ராவ்
	அஞ்சலி தேவி
	முக்கமாலா
	சிவ ராவ்
	லக்ஷ்மிகாந்தம்
	பாலசரஸ்வதி
டைரெக்ஷன் :	ஸ்ரீதர்

பிரிய சகோதரிகளே!

நான் ஒரு நர்ஸ் அல்ல. டாக்டரும் அல்ல. எனக்கு வைத்தியமும் தெரியாது. நானே உங்களைப்போல் ஒரு குடித்தனப்பெண், எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப்பின் துர்பாக்கியத்தினால் லிகோரியாவும் (வெட்டை) சூதக வியாதியும் எனக்கு ஏற்பட்டு விட்டன. மாதவிடாய் நின்று விட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொர்ப்பமாகவே வெளி வந்தது. வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளிவருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக்கொண்டே வந்தது. முகம் வெளுத்துவிட்டது. வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறு கிறுப்பு இருந்து வந்தது; இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டுவிட்டது. என் கணவர் நூற்றுக்கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒருநாள் ஒரு சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். நான் பிச்சைபோட வெளியில் வந்ததும், அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலேயே உன் முகம் பஞ்சுபோன்று இருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு, ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்து விட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மை செய்து வருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். இதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2-14-0 [ரூபாய் இரண்டு அணா பதினான்கு]. தபால் செலவு தனி.

இத்துஷ்ட ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையாலேயே மருந்து தயாரித்து, வி. பி. பி. மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத் தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதவேண்டாம்.

BIBI CHARAN PIARI

SANT NAGAR :: (G. M.) JULLUNDUR CITY.

டூரிங் சினிமாக்களுக்கு நல்ல காலம்

டூரிங் சினிமா சொந்தக்காரர்களின் விஞ்ஞாபனங்களுக்கு இணங்கி, டூரிங் சினிமா சம்பந்தமான நிபந்தனைகளை அடியிற் கண்டவாறு சர்க்கார் தளர்த்தி யுள்ளனர்:

பத்தாயிரத்துக்குக் குறைவான ஜனத் தொகையுள்ள ஊர் ஒன்றில் ஒரு நிரந்தர சினிமா அனுமதிக்கப் படும். நிரந்தர சினிமா இல்லா விட்டால் ஒரு டூரிங் சினிமா அனுமதிக்கப்படும்.

பத்தாயிரத்துக்கு அதிகமாக—ஆனால் இருபதாயிரத்துக்குக் குறைந்த—ஜனத் தொகையுள்ள ஊர் ஒன்றில் ஒரு நிரந்தர சினிமா இருக்கலாம். அது இல்லா விட்டால் இரண்டு டூரிங் சினிமாக்கள் அனுமதிக்கப்படும்.

இருபதாயிரத்துக்கு அதிகமாக முப்பதாயிரத்துக்குக் குறைவாக ஜனத்தொகை யுள்ள ஊரில் ஒரு நிரந்தர சினிமாவும் ஒரு டூரிங் சினிமாவும் இருக்கலாம். நிரந்தர சினிமாவே இல்லா விட்டால் இரண்டு டூரிங் சினிமாக்கள் அனுமதிக் கப் படும்.

30 ஆயிரத்துக்கு அதிகமாகவும்—ஆனால் 40 ஆயிரத்துக்குக் குறைவாகவும் ஜனத் தொகையுள்ள ஊர் ஒன்றில் இரண்டு நிரந்தர சினிமாவும் ஒரு டூரிங் சினிமாவும் இருக்கலாம். ஒரே ஒரு நிரந்தர சினிமா மட்டும் இருந்தால் ஒரு டூரிங் சினிமா அனுமதிக்கப்படும். நிரந்தர சினிமாவே இல்லாவிட்டால் இரண்டு டூரிங் சினிமாக்கள் அனுமதிக்கப்படும்.

40 ஆயிரத்துக்கு அதிகமாக—ஆனால் 50 ஆயிரத்துக்குக் குறைவான—ஜனத் தொகையுள்ள ஊரில் இரண்டு நிரந்தர சினிமாக்களும் இரண்டு டூரிங் சினிமாக்களும் இருக்கலாம். ஒரு நிரந்தர சினிமா கூட இல்லாவிட்டாலோ அல்லது ஒரே ஒரு நிரந்தர சினிமா ம்ட்டும் இருந்தாலோ இரண்டு டூரிங் சினிமாக்கள் அனுமதிக்கப்படும்.

50 ஆயிரத்துக்கு அதிகமான ஜனத் தொகையுள்ள ஒரு ஊரில் 3 அல்லது அதற்கதிகமான நிரந்தர சினிமாக்களிருந்தால் ஒரு டூரிங் சினிமாக் கூட அனுமதிக்கப்பட மாட்டாது. இரண்டு நிரந்தர சினிமாக்கள் மட்டுமிருந்தால் இரண்டு டூரிங் சினிமாக்கள் அனுமதிக்கப் படும். ஒரே ஒரு நிரந்தர சினிமா மட்டும் இருந்தாலோ அல்லது ஒன்றுகூட இல்லா விட்டாலோ 3 டூரிங் சினிமாக்கள் அனுமதிக்கப் படும். நிரந்தர சினிமாக்களும், டூரிங் சினிமாக்களும் அனுமதிக்கப் படும் ஊர்களில் இரண்டுக்கு மிடையே உள்ள தூரம் 4 பர்லாங்குக்குக் குறைவாக இருக்கக்கூடாது.

தற்போது வேலை செய்து வரும் டூரிங் சினிமாக்கள், அவற்றின் தற்போதைய லைசென்ஸ் தீர்ந்து போகும் வரையில் இந்தப் புது உத்தரவால் பாதிக்கப்பட மாட்டா.

ஹிந்தி முயற்சிகள்

தெலுங்கிலும், தமிழிலும் சக்கை போடு போட்ட "பாதாள பைரவி" ஹிந்திப் படமாகவும் வெளிவரப் போகிறது. அந்த உரிமையை ஜெமினி பெற்று, ஹிந்தியாக்கும் வேலையைத் தொடங்கி விட்டதாம். இதைத் தவிர, ஜெமினி ஏற்கனவே தயாரித்து வெளியிட்டு அமோக வசூலைப் பெற்ற "பால நாகம்மா"வையும் ஹிந்தி சம்பாஷணைகளுடன் வெளியிடவும் ஜெமினி தீர்மானித்திருக்கிறதாம்.

கிருஷ்ணா பிக்சர்ஸார், தங்களது "வனசுந்தரி"யை "ராஜகுமாரி" என்ற பெயரில் ஹிந்திப் படமாக்கப் போகிறார்களாம். டைரெக்டர் எச். எம். ரெட்டி, தமிழ்-தெலுங்கு இரு பாஷைகளிலும் நல்ல ஆதரவைப் பெற்ற "நிரபராதி"யை ஹிந்திப் படமாக்கத் திட்டங்கள் போட்டு விட்டாராம்.

மலையாள "மருமகள்"

எர்ணாகுளம் எம். பி. புரொடக்ஷன்ஸார் "மருமகள்" என்ற மலையாளப் படத்தைத் தயாரிப்பதில் முனைந்திருக்கிறார்களாம். இப்படம் எஸ். கே. சாரியின், டைரெக்ஷனில் சேலம் ரத்னா ஸ்டுடியோவில் உருப்பெறுமாம். இதில் பல புது முகங்கள் நடிப்பார்களென்றும் தெரிகிறது.

இது செய்தி

குமாஸ்தாவின் பெண்

இம் மாதம் 7-ம் தேதி, மயிலை கமர்ஷியல் இன்ஸ்டிட்யூட்டின் நான்காவது வருஷக் கொண்டாட்டம் நடைபெற்றது. அது சமயம் "குமாஸ்தாவின் பெண்" என்ற சமூக நாடகம் நடைபெற்றது. அன்றைய நாடகத்தின் சிறப்புக்கு முக்கிய காரணம் நடிகர்களை பயிற்றுவித்த காமெடியன் சீனு, பட்டு இருவருமென்று கூறலாம். நாடகத்தில் எல்லோருமே நன்கு நடித்தார்களென்றாலும் பிச்சுமணியாக நடித்த ஜே. ஆர். எஸ். சர்மாவின் நடிப்பு குறிப்பிடத் தக்க முறையில் இருந்தது. மற்றும் ஜோஸ்யர், ராமசாமி அய்யர், சீதா ஆகிய பாகங்களை நடித்தவர்களும் நன்கு நடித்தனர். பின்னணிப் பாடல்கள் பாடிய விஸ்வநாதனின் இனிய சாரீரம் நாடகத்தை சோபிக்கச் செய்தது. நாடகத்தின் சங்கீத மேற்பார்வையை தேவநாராயணன் கவனித்தார். பிரபல அமெச்சூர் நடிகரான டாக்டர் வி. ராமமூர்த்தி நடிகர்களின் திறமையைப் பாராட்டிப் பேசினர்.

ஒன்பதாவது தமிழ் இசை விழா

சென்ற மாதம் 24ம் தேதி சென்னையில் ஒன்பதாவது தமிழ் இசை விழா ஆரம்பமாயிற்று. யாழ்ப்பாணத்து பேரறிஞர் ஸ்ரீ. ஜி. நடேசப் பிள்ளை தலைமை வகித்து இசை விழாவை ஆரம்பித்து வைத்தார். அவர் பேசுகையில், தமிழ் நாட்டின் பண்டைய பெரும் கலைகளைப் போற்றி வளர்க்கும் பெருமை தமிழ் நாட்டிற்கே உரியதாகும் என்று குறிப்பிட்டார். இந்த விழாவை யொட்டி—அன்று முதல் 31ம் தேதி முடிய எட்டு நாட்களும் அரிய சங்கீத, நாட்டியக் கச்சேரிகளையும், டி. கே. எஸ். பிரதர்ஸின் "ஒளவையார்" நாடகத்தையும் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

இருவர் உள்ளம்

சென்ற மாதம் 28-ம் தேதி சென்னை, ஒற்றவாடை தியேட்டரில் "இருவர் உள்ளம்" என்ற நாடகத்தை, தெலுங்குச் செட்டியார் நாடக சங்கத்தினர் நடித்தார்கள். அன்றைய நாடகத்திற்கு நடிகர் டி. எஸ். பாலய்யா தலைமை வகித்தார். நாடகத்தின் மத்தியில் குமாரி ராஜேஸ்வரியின் நடனக் கச்சேரியும் நடந்தது. அன்றைய நாடகம், சென்னை தெலுங்குச் செட்டியார் சங்க கட்டட நிதிக்காக நடைபெற்றது.

தேவி பாலவினோத சங்கீத சபா

நவாப் டி. எஸ். ராஜமாணிக்கத்தை உரிமையாளராகக் கொண்ட மதுரை தேவி பால வினோத சங்கீத சபாவின் 19-வது ஆண்டு பூர்த்திவிழா இம்மாதம் 7-ம் தேதி நடைபெற்றது. நவாப் ராஜமாணிக்கம் வழக்கம்போல் இவ்வாண்டும் ஏழைகளுக்கு பல தர்மங்களைச் செய்தார்.

நக்ஷத்திர கிரிக்கெட் விழா

சில மாதங்களுக்கு முன்பு பம்பாயில் பிரபல நக்ஷத்திரங்களுடைய கிரிக்கெட் ஆட்டம் நடைபெற்றது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அம்மாதிரியான நக்ஷத்திர கிரிக்கெட் ஆட்ட விழா ஒன்றை சென்னையிலும் கார்ப்பரேஷன் ஸ்டேடியத்தில் இம்மாதம் 27-ம் தேதி நடத்துவதற்கான தீவிர ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. க்ஷயரோக நிவாரண நிதிக்கு உதவி அளிக்கவே இந்த ஆட்டம் ஏற்பாடு செய்யப்படுகிறது. இந்த ஆட்டத்தை ஏற்பாடு செய்வதற்காக, என். எஸ் கிருஷ்ணன். வசுந்தரா, சென்னை நகர-மேயர், க்ஷயரோக ஆஸ்பத்திரியின் அதிகாரி, மற்றும் சிலர் உள்ள ஒரு ஆலோசனைக் கமிட்டி அமைக்கப் பட்டிருக்கிறதென்று தெரிகிறது. ஒரு கட்சிக்கு வசுந்தரா காப்டனாகவும், மற்றொரு கட்சிக்கு கமலா கோட்னிஸ் காப்டனாகவும் இருப்பார்களாம். இந்த ஆட்டத்தில் மாதுரிதேவி, கிருஷ்ண குமாரி, ரஞ்சன், ஸஹஸ்ரநாமம், கணேசன், என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஆர். ராமச்சந்திரன், லலிதா-பத்மினி, கே. சாரங்கபாணி, என். டி. ராமராவ், ரங்க ராவ், டி. ஆர். மஹாலிங்கம் இப்படி நம் நக்ஷத்திரங்கள் பலர் பங்கெடுத்துக் கொள்ளக் கூடுமென்று தெரிகிறது. இவர்கள் தவிர வடநாட்டு நடிகர்களான அசோக் குமார், நர்கீஸ், மதுபாலா ஆகியோரும் சென்னைக்கு வந்து கலந்துகொள்ளப் போகிறார்களாம்.

தமிழ் நாட்டில் ஆங்கிலப் படம்!

ஒரு ஆங்கிலப் படம் இந்தியாவில் தயாரிக்கப்பட இருக்கிறது என்றால் அது சந்தோஷப்பட வேண்டிய ஒரு செய்திதானே! அதுவும் தமிழ் நாட்டில்—சேலம் மாடர்ன் தியேட்டர்ஸின் கூட்டுறவில் என்றால் தமிழ் நாடு பெருமைப்பட வேண்டிய விஷயமல்லவா. ஹாலிவுட்டின் சிறந்த டைரெக்டர்களில் ஒருவரான வில்லியம் பர்க் என்பவர் சேலத்திற்கு வந்து முகாம் போட்டு விட்டார். அவர் "ஜங்கிள்" (காடு) என்ற படத்தை ஆங்கிலம், தமிழ், ஹிந்தி, சிங்களம் ஆகிய நான்கு பாஷைகளிலும் தயாரிக்கப் போகிறாராம். இந்தப் படங்கள் மாடர்ன் தியேட்டர்ஸில் தயாரிக்கப்படும். சேலம், மைசூர், காடுகளை வெளிப்புறக் காட்சிகளுக்காகத் தேர்ந்தெடுத் திருக்கிறார்களாம். இப் படத்தில் நடிப்பதற்கென அமெரிக்காவிலிருந்து பிரபல நடிகைகள் சிலர் வந்திருக்கிறார்கள். பல வனப் படங்களை ஒளிப் பதிவு செய்துள்ள கிளேட் செவினர் என்ற ஒளிப் பதிவாளரும்கூட வந்திருக்கிறாராம். எல்லிஸ். ஆர். டங்கன் தான் இப் படங்களின் உதவித் தயாரிப்பாளர்.

இந்திய பிலிம் விழா

இம்மாதம் 24-ம் தேதி பம்பாயில் ஆரம்பமாகும் இந்திய பிலிம் விழாவில் திரையிட பின் கண்ட நான்கு இந்தியப் படங்களைத் தேர்ந்தெடுத் திருக்கிறார்கள். 1 "அவாரா" (ஹிந்தி) 2. "அமார்பூபலி" (மராத்தி) 3. "பாபல" (வங்காளம்) 4. "பாதாள பைரவி" (தெலுங்கு). இந்த விழாவில் போட்டியிடும் படங்களுக்கு ஏற்கெனவே அறிவித்தபடி பரிசுகள் வழங்கப் போவதில்லையாம். சர்டிபிகேட்டுகளே வழங்கப் போகிறார்களாம். இந்த விழாவுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட படங்களை பொது ஜனங்களும் ஒரு நாள் பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாம். பம்பாய் தியேட்டர்காரர்களும்,—இந்த விழாவை ஏற்பாடு செய்தவர்களும் இதற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டுள்ளார்களாம். வசூல் தொகையை இருவரும் சமமாய் பங்கிட்டுக் கொள்வார்களாம். இது தவிர அந்த ஒரு நாள் காக்ஷிகளுக்கு தமாஷா வரியிலிருந்து விலக்கு அளிக்கும்படி பம்பாய் சர்க்காரிடம் கேட்டுக் கொண்டிருக்கிறார்களாம். இந்த பிலிம் விழாவைச் சர்க்கார் செய்திப் பட இலாகாவினர் படமாகத் தயாரிக்கப் போகிறார்கள். மற்றும் சில தனிப்பட்ட படத் தயாரிப்பாளர்களும்கூட இந்த முயற்சியை செய்யப் போவதாகத் தெரிகிறது. பிலிம் விழாவில் கலந்து கொள்ள பல தேசங்களிலிருந்தும் வரப்போகும் பல்வேறு பிரமுகர்களுக்கு தகுந்த முறையில் வரவேற்பளிக்க, பிரபல துர்க்கா பாய் கோட்டே பட உலகப் பிரமுகர்களுடன் ஏற்பாடுகள் செய்து வருகிறார்.

பி. எஸ். கந்தசாமி சா சன்ஸ்

ஸ்தாபிதம் 1904

(டெலிபோன்: 86135)

சேலைகள், வேஷ்டிகள் முதலிய எல்லா விதமான ஜவுளிகளும் நூதன தினுசுகளில், நயமான விலைக்கு எம்மிடம் கிடைக்கும்.

கரூர் விலை! மெத்தைக் கடை!

13, அய்யா முதலி தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை—2.

தலைமை ஆபீஸ்: செக்குப் பேட்டை, காஞ்சீவரம்.

புதுப் படங்கள்

பிரபல நடிகை பானுமதி, தமது சொந்தத்தில், பரணி பிக்சர்ஸின் தயாரிப்பாக, இரு புதுப் படங்களைத் தயாரிக்கப் போவதாய் அறிவித்திருக்கிறார். "சந்திராணி" என்ற கதையை, ஹிந்தி, தமிழ், தெலுங்கு ஆகிய மூன்று பாஷைகளிலும், "சுபலேகா" என்ற கதையை தமிழ், தெலுங்கு ஆகிய இரு பாஷைகளிலும் படங்களாக்கப் போகிறாராம். இது நாள் வரை நடிகையாக மட்டும் இருந்து வந்த அவர் இந்தப் படங்களின் மூலம் கதாசிரியையாகவும், டைரெக்டராகவும் மாறப் போகிறார். மேற்படி படங்களின் கதையை அவரே எழுதியிருப்பதுடன், படங்களையும் அவரே தான் டைரெக்ட் செய்யப் போகிறாராம். இந்தப் படங்களெல்லாம் அவரது சொந்த ஸ்டுடியோவான பரணியில் தயாரிக்கப்படுமாம்.

யார் யாரோ படமாக்கப் போவதாக செய்திகள் அடிபட்ட "மனிதனும் மிருகமும்" கடைசியாக இப்பொழுது ரேவதி ஸ்டுடியோவால் படமாகப் படப் போகிறதாம். வி. எஸ். ராகவனது டைரெக்ஷனில் இப்படம் வளருமாம்—அவர்களது ஸ்டுடியோவில்.

ஆலப்புழை சந்திரா பிக்சர்ஸ் என்ற புதிய படக் கம்பெனியார், "ஜினேவா" என்ற, கிருஸ்துவர்களின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட ஒரு கதையைத் தமிழ், மலையாளம் ஆகிய பாஷைகளில் நியூடோன் ஸ்டுடியோவில் படமாக்கி வருகிறார்களாம். நாகூர் டைரெக்ஷனில், படத்தின் பிரதம பாகங்களில் பி. எஸ். சரோஜா, எம். ஜி. ராமச்சந்திரன், கே. பி. கேசவன் ஆகியோர் நடித்து வருகின்றனர்.

என்னெஸ்கே பிலிம்ஸார், தாங்கள் அடுத்தபடி தயாரிக்கத் திட்டம் போட்டுள்ள இரு படங்களைப் பற்றிய அறிவிப்பை வெளியிட்டுள்ளார்கள். அவைகளில் ஒன்று "தோட்டக்காரன்"; மற்றொன்று "ரகசியம்". இந்த இரு கதைகளையும் தமிழ், தெலுங்கு இரு பாஷைகளிலும் படமாக்கப் போகிறார்களாம். "தோட்டக்காரன்" கதையை, படத்திற்கு ஏற்ற முறையில் வி. எஸ். விஸ்வநாதன், முன்ஷி பரமுபிள்ளை ஆகிய இருவரும் எழுதுகிறார்கள். இப்படத்தில் உமாபதியாக நடிக்க எஸ். எம். குமரேசன் ஒப்பந்தம் ஆகியிருக்கிறாராம். முன்ஷி பரமுபிள்ளை எழுதிய "ரகசியம்" கதையின் வசனங்களை மு. கருணாநிதி எழுதுகிறாராம். எல்லாப் படங்களும் என். எஸ். கிருஷ்ணனின் டைரெக்ஷனில் தயாரிக்கப் படுமாம்.

சென்னையில் புதிதாகத் தோன்றியுள்ள, சிவகுமார் பிக்சர்ஸார், "அவன்" என்ற ஒரு கதையைத் தமிழ், மலையாளம், பாஷைகளில் படங்களாக்கப் போகிறார்களாம். தமிழ்ப் படத்திற்கான வசனங்களை "கர்மயோகி"யும், மலையாளப் படத்திற்கு முன்ஷி பரமுபிள்ளையும் எழுதப் போகிறார்களாம். படம் சியாமளா ஸ்டுடியோவில் ஒரு புது ஆசாமியின் டைரெக்ஷனில் தயாராகுமென்று தெரிகிறது.

"சம்சாரம்" தெலுங்குப் படத்தைத் தயாரித்து வெளியிட்ட சாதனா பிக்சர்ஸார் அடுத்தபடி "தாஸி" என்ற கதையைத் தமிழ்–தெலுங்கு ஆகிய பாஷைகளில் படமாக்குகிறார்களாம். பிரஸாத்தின் மேற்பார்வையில் ஸி. வி. ரங்கநாத தாஸ் படங்களை டைரெக்ட் செய்து வருகிறாராம். என். டி. ராம ராவ், லக்ஷ்மி ராஜ்யம், ரேலங்கி ஆகியோர் முக்கிய பாகங்களில் நடிக்கிறார்களாம்.

மீரா பிக்சர்ஸார் என்ற புதிய படத் தயாரிப்பாளர்கள் "வேசி" என்ற ஒரு கதையை தமிழ், தெலுங்கு பாஷைகளில் படமாக்கப் போகிறார்களாம். எஸ். கே. வாசகம் டைரெக்ட் செய்யப் போகும் இப்படங்களில் பல புது முகங்களைக் காணலாமாம். சங்கீத டைரெக்ஷனை கே. வி. மஹாதேவன் ஏற்றிருக்கிறாராம்.

எம். எல். பதியின் முயற்சியில் ஆரம்பிக்கப் பட்டுள்ள லிபர்ட்டி பிக்சர்ஸார் "மதன மோஹினி" என்ற படத்தைத் தயாரிப்பதில் இறங்கி யிருக்கின்றனர். பி. எஸ். சரோஜா, எஸ். டி. சுப்பய்யா பிரதம பாகங்களில் நடிக்கும் இப்படத்திற்கு மாதுரி தேவியும் ஒப்பந்தம் செய்யப்படலாமென்று தெரிகிறது.

சித்ராங்கி

சில வருஷங்களுக்கு முன் மினர்வா மூவிடோனின் தயாரிப்பாக அறிவிக்கப்பட்ட "சித்ராங்கி"க்கு இப்பொழுது உயிர் வந்திருக்கிறதாம். இதன் படப்பிடிப்பு வேலை ரேவதி ஸ்டுடியோவில் 'முருகதாஸா' டைரெக்ஷனில் ஆரம்பமாகி விட்டதாம். டி. ஆர். மஹாலிங்கம், எஸ். வரலக்ஷ்மி, கே. சாரங்கபாணி ஆகியோர் பிரதம பாகங்களில் நடிக்கப் போகும் படம் இது.

தர்ம தேவதா

ராகினி பிக்சர்ஸார் அடுத்தபடி "தர்ம தேவதா" என்ற கதையைத் தமிழ், தெலுங்கு ஆகிய இரு பாஷைகளிலும் படங்களாக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். இப் படங்கள் பி. புல்லய்யாவின் டைரெக்ஷனில் வாஹினி ஸ்டுடியோவில் உருவாகுமாம். சாந்தகுமாரி, லலிதா, கிரிஜா, லக்ஷ்மி ப்ரபா, லிங்கமூர்த்தி, ஸி. வி. வி. பந்துலு ஆகியோர் முக்கிய பாகங்களில் நடிக்கப் போகும் இப் படத்தில் பத்மினி, ராகினி இருவரின் நடனம்கூட இருக்குமாம்.

"ஆன்" தயாராகி விட்டது

பம்பாய் டைரெக்டர் மெஹ்பூப் பல லக்ஷ ரூபாய்களில் தயாரித்து வந்த "ஆன்" என்ற இயற்கை வர்ணப் படம் தயாராகி முடிவடைந்து விட்டது. பி. எஸ். ராமையாவின் வசனங்களுடனும், "கம்பதாஸன்" பாட்டுகளுடனும் இப் படத்தைத் தமிழாக்கியிருக்கிறார் அவர். இப் படம் தமிழ் வருஷப் பிறப்பன்று தமிழ் நாடெங்கும் திரையிடப் படும். திலிப் குமார், நிம்மி, பிரேம்நாத் ஆகியோர் பிரதம பாகங்களில் நடித்துள்ள படம் இது.

"அம்மா" திரையிடப்பட்டது

அஸோஸியேடட் புரொடக்ஷன்ஸாரின் "அம்மா" தமிழ்ப் படம் இம்மாதம் 11-ம் தேதி சென்னை நகரில் மூன்று தியேட்டர்களிலும், தமிழ் நாட்டிலும் திரையிடப்பட்டுள்ளது. உள்ளமுருக்கும் ஒரு சமூகக் கதை இது. லலிதா, சாந்தகுமாரி. பி. எஸ். சரோஜா. திக்குரிசி, டி. எஸ். துரைராஜ் நம்பியார் ஆகிய நக்ஷத்திரங்கள் இதில் நடித்துள்ளனர்.

கோகுல்
ஹேர் ஆயில்
டி.எஸ்.ஆர்
..... தயாரிப்பு....
டி.எஸ்.ஆர். & கோ.
...கும்பகோணம்...

இது நிஜமா!

குதிகால் பகுதியே இல்லாததும் பழைய செருப்பின் மீது எல். நாராயணராவுக்கு அபார வாஞ்சை!

டாக்கி உலக பிரபல ராக்ஷஸர் ஆர். பாலசுப்ரமண்யம் ஒரு காலத்தில் மேடையில் ஒற்றை நாடி சரீரமுடைய கதாநாயகியாய் விளங்கி வந்தார்! சீதை வேஷத்தில் பேர் போனவர் அவர்!

'சந்திரலேகா'வில் சசாங்கனின் மெய்க்காப்பாளனை நடித்திருப்பவர் தற்போது பிரபல கதாநாயகனை நடிக்கும் ஸ்ரீராம் தான்!

'கோகிலகான' என்ற பட்டத்தை எம்.எஸ்ஸிற்கும், 'வஸந்த கோகிலம்' என்ற பெயரைக் காமாட்சிக்கும் அளித்துப் பிரபலப் படுத்தியவர்கள் எச்.எம்.வி. கிராமபோன் கம்பெனியார் தான்.

பட்டம்மாள் பாட, பிரபல நக்ஷத்திரம் பி. சாந்தகுமாரி வயலின் வாசிக்க, சரஸ்வதிகான நிலையத் தலைவி லலிதா மிருதங்கம் வாசிக்க, பல நகரங்களில் கச்சேரிகள் நடந்திருக்கின்றன!

டி. பாலசுப்ரமண்யம், எம். கே. ராதா இவர்களின் மனைவியரும் சினிமா நடிகைகளாய் இருந்தவர்கள்!

'திகம்பர சாமியார்' புகழ் லக்ஷ்மி பிரபாவின் தந்தை ராமனுஜன் ஒரு மௌனப் பட நடிகர்; ஆஞ்சநேயராகக்கூட நடித்திருக்கிறார். பிறகு 'சந்திர காந்தா' வீரரெட்டியும், 'வஸந்த சேனா' ஆர்யகனும், 'விஷ்ணு லீலா' ராமனும் இவரே தான்!

பிரபல எம். என். நம்பியார் நடித்த முதல் படம் (நவாப்) 'ராமதாஸ்' தான்; இதற்காக பெற்ற தொகை நாற்பதே ரூபாய்!

சுமார் 15 வருஷங்களுக்கு முன் நவாப் ராஜமாணிக்கத்தின் 'ஸ்ரீ கிருஷ்ண லீலா' நாடகம் சென்னையில் நடந்த போது ஜப்பானில் அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

'பகதூர் பகத் சிங்கும்' 'பஞ்சாப் படுகொலை' பாட்டுகளை திரும்பத் திரும்பப் பாடி பல காலம் ஜெயிலில் வாழ்ந்து வந்த எஸ். எஸ். விஸ்வநாத தாஸ் பத்து வருஷங்களுக்கு முன் (சென்னை) மேடையில் மயில் வாகனத்தில் உயிர் துறந்தார்.

எட்டி போலோ, எல்மோ லிங்கன், ரிச்சர்ட் டால்மாஜ், ஹெரால்ட் லாய்டு, டக்ளஸ் பார்பாங்க்ஸ் இப் பெயர்களை இப்பொழுது கேட்கும் சிலரசிகர்களுக்கு மின்சாரம் பாய்ந்த மாதிரி இருக்கும். இவை பிரபல மௌனப்பட நடிகர்களின் பெயர்களாகும்.

சென்னை சர்க்காரின் செய்தி இலாகா அதிகாரி ஆர். பார்த்தசாரதி ஒரு சினிமா நடிகர் ஆவார்! 'பாலயோகினி' பரதன் அவர் தான்!

வேலு நாயர், அனந்த நாராயணய்யர் தோன்றிய நாடகங்களுக்கு ஒரு காலத்தில் டிக்கெட் கிடைப்பது துர்லபமாய் இருந்தது. ஆனால் இவர்களை [illegible] தியேட்டரில் நாடகம் நடத்திப் [illegible] அடைய வேண்டி [illegible]

28 ஆண்டுகளாக இந்தியாவில் சிறந்து விளங்கும்

வினாயகர்

எங்கும் கிடைக்கும் எங்கும் கிடைக்கும்

சுருட்டுகள்

SHELL BRAND ஷெல் பிராண்டு

மணிலா சுருட்டுகள்

V. ஆறுமுக **செட்டி**

18, அண்ணா பிள்ளை தெரு, சென்னை—1

N. B. பொடிக்கு உயர்ந்த பந்தர் புகையிலைகளும்
எங்களிடம் கிடைக்கும்.

*உப நடிகைகள்

இன்று சினிமா உலகிலுள்ள உப நடிகைகளின் நிலை மிகவும் பரிதபிக்கத் தக்கதாக இருக்கிறது. ஒரு படத்தில் தட்டுத் தூக்கி நின்றால் கடைசி வரையில் பட முதலாளிகள் அதையே அவர்களுக்கு ஸ்திரம் செய்து விடுகிறார்கள். ஏன்? அவர்களுக்குத் திறமை இல்லையா? முக வெட்டு இல்லையா? நடனம் தான் ஆடத் தெரியாதா? டி. ஏ. ஜெயலட்சுமி, ஜி. சகுந்தலா போன்றவர்கள் உபநடிகைகளாக இருந்தவர்கள் தான். டி. ஏ. ஜெயலட்சுமியை ஏவி. எம். சரிவரப் பயன்படுத்தி தமது திறமையான டைரெக்ஷனில் ஓர் முன்னணி நக்ஷத்திரமாய் கொண்டு வந்தார், "நாம் இருவர்" மூலம். அதேபோல ஜி. சகுந்தலாவை, டைரெக்டர் டி. ஆர். சுந்தரம் தமது "மந்திரி குமாரி"யில் திறமையாக நடிக்கச் செய்து ரஸிகர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். ஆகவே, 'ஆற்றலும், ஆர்வமும் இருந்து கை தூக்கிவிட ஆளில்லாது எத்தனையோ இளம் நடிகமணிகள் குடத்திலிட்ட விளக்காகவே இருந்து வருகின்றனர்' என்பது முற்றிலும் உண்மை!

பி. கே. புஷ்பாபாய்,
பறங்கிப்பேட்டை.

காப்பி அடிக்க வேண்டாம்

"மாயலமாரி" படத்தை நான் பார்த்தேன். அதில் ஒரு ராஜகுமாரனுக்கு உதவியாக குறவர்கள் கூட்டம் ஒன்று ஆயுதம் தாங்கி வந்து அவனுடைய எதிரியைத் தாக்கி, கடைசியில் அவனுக்கு வெற்றி அளிக்கிறது. இந்தப் பகுதி "சந்திரலேகா"விலிருந்து காப்பி அடிக்கப்பட்டுள்ளது. அங்கு சர்க்கஸ்காரர்கள் கூட்டம்; இங்கு குறவர்கள் கூட்டம். இதுதான் வித்தியாசம். ஏன் புதிதாகக் கற்பனை செய்ய இந்த நாட்டில் மூளைப் பஞ்சமா?

வி. சந்தானம்,
ஹைதராபாத்.

முதலாளிகள் உணர்வார்களா?

மறுமலர்ச்சி தழைத்தோங்கி வரும் இது சமயம் மாயாஜால மந்திரக் கதைகளும், ராஜாராணிக் கதைகளும் கூஜாத் தூக்கவேண்டியதுதான். தொழிலாளர்களின் துயர்வாழ்வைத் துலக்கி—ஏழைகளின் அவல நிலைமையை அலசி—செல்வந்தர்களின் செருக்கைச் சாடி—இப்படிப் பல சம்பவங்களைப் பிணைத்து, பெண்மையின் பெருமையை, காதலின் உயர்வை, காமவெறியர்களின் போக்கை, சத்தியத்தின் எதிரொலியை சாதுரியமாகப் படரவிட்டு, அமைக்கப்பட்ட கதைகள்தான் இனி வேண்டியவை. இவ்விதம் அமைக்கப்படும் கதைகளின் நிகழ்ச்சிகள், ஆமை வேகத்திலே நகர்ந்து, பார்ப்பவர்களின் பொறுமையைப் பரிசோதிப்பவைகளாக இருந்து விடக்கூடாது. "வேலைக்காரி" படத்தின் வெற்றி அதன் கதையமைப்பில் தொக்கியிருந்தது. "நாம் இருவர்" வாலிபர்களின் இதயதில் — செல்வமே குறிக் கோளாகக் கொண்டு காலத்தைப் பயன்படுத்தி கள்ளமார்க்கெட் செய்யும் கயவர்களின் முடிவை—தெளிவு படுத்தியதனால் வசூலைத் தந்தது. "வாழ்க்கை" "ஏழைபடும் பாடு" "நிரபராதி" ஆகிய படங்களின் வெற்றிக்கும் அவைகளின் கதைகளே முக்கிய காரணமாகும். ஒரு கட்டடத்திற்கு அஸ்திவாரம் பலமாக அமையவேண்டியது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் படத்தின் வெற்றிக்கு சரியான கதையைத் தேர்ந்

* பரிசு பெற்ற கடிதம். எழுதியவர்: பி. கே. புஷ்பாபாய், செட்டித் தெரு, பறங்கிப்பேட்டை.

தெடுப்பதும் ஆகும். இதனைப் படமுத லாளிகள் உணர்வார்களா?

எம். எம். பொன்னுசாமி,
கரூர்.

ஆஷாடபூதிகள்

உலகத்தில் சாமர்த்தியத்தினால் சில ஜனங்கள் அதிகப் பணம் சேகரித்துக் கொள்ளுகிறார்கள். அந்த ரகத்தில் ஒன்று, ஏழைகள்படும் பாட்டைப் பற்றிய பாட்டுகளையும் சம்பாஷணைகளையும் புகுத்திப் படம் தயாரித்துப் பணம் திரட்டுவதாகும். இதில் விசித்திரம் என்னவென்றால், "ஏமாற்றுபவனுக்கே உலகம்" என்று பாடலைப் புகுத்தும் பட முதலாளிகளே ஏமாற்றித்தான் பிழைக்கிறார்கள். இதை சிறிதும் ஆலோசியாத ஏழைகள் இந்தக் கட்டங்களில் கையைத்தட்டி "அப்ளாஸ்" கொடுத்து, அடிக்கடி ஒரே படத்தைப் பார்த்து மேற்படி பட முதலாளியை மேலும் பணக்காரர்களாக்குகிறார்கள்.

சௌந்தர்யலஹரி,
ஹைதராபாத்.

இதய ஒலி

'நடிப்பு' என்பது சிறுபிள்ளை விளையாட்டோ அல்லது 'செல்வாக்கு' என்ற சந்தையில் 'பணம்' கொடுத்து வாங்கவோ கூடியதல்ல. கதா பாத்திரத்தின் தன்மையை உணர்ந்து, இடத்துக்கேற்ப, உணர்ச்சிகளைப் பிரதிபலித்து பார்ப்போரின் உள்ளங்களை ஈர்ப்பதே நடிப்பு. இதற்கு 'அநுபவம்' அவசியம் தேவையாகிறது. 'அநுபவம்' என்பது அனைவரும் பெறக் கூடியதல்ல. ஆனால் படிப்பால் வரும்பண்பட்ட அறிவு அந்த அரும்பொருளைத் தருகிறது. படிப்பும்–நடிப்பும் காந்தத்தின் இரு துருவம் போன்றவை. ஆதலால் படிப்போ, அநுபவமோ குறைவுபட்டால் 'நடிப்பு' பாழ்படுகிறது. நடிப்புத் திறமையின்றி, கொடுத்த வசனங்களை நெட்டுருத்தள்ளி, இயந்திரம்போல் கொட்டி விடுவதும்—குயிலினும் இனிமையாக இசையைக் கூவி விடுவதும், துருப்பிடித்த இரும்புக்குத தங்க முலாம் கொடுத்தது போலவே ஆகும். இன்றைய்த் திரையுலக நடிக நடிகையருள் பெரும்பாலோர் கல்வியறிவில் மிகவும் வறியர்கள். தமிழ்ப் பட முன்னேற்றத்தின் தடைக்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாகும். எனவே படமுதலாளிகளும், டைரெக்டர்களும் தங்கள் கவனத்தை பெரும்பாலும் நன்கு படித்த— ஆர்வமுள்ள — புதுமுகங்களைத் திரை உலகுக்குக் கொண்டு வருவதில் திருப்ப வேண்டும். சம்பந்தப்பட்ட 'சினிமா ஏடு' களும் இந்த அரிய கருத்தை அனைவரும் அறியும் வகையில் பிரசாரம் செய்ய வேண்டும். இதுவே என் போன்ற 'கலை முன்னேற்ற விரும்பி'களின் 'இதய ஒலி' யாகும்.

எச். செல்வக்குமார்,
குமாரமங்கலம்.

வாஸனுக்கு யோசனை

'நம் தமிழ் நாட்டுப் படங்கள் வடநாட்டிலும், ஆந்திர நாட்டிலும் வெற்றி முரசு கொட்ட முடியவில்லையே!' என்ற குறையை முதன் முதலில் "சந்திரலேகா" மூலம் போக்கினார் ஸ்ரீ எஸ்.எஸ். வாஸன் அவர்கள். அப் புகழை "நிஷான்", "மங்களா", 'ஏக்-தா-ராஜா' (மர்மயோகி) முதலிய படங்கள் நிலையாக்கி வைத்தன. உலகிலேயே இரண்டாவதாக வசூல் பெற்ற "சந்திரலேகா"வைத் தயாரித்ததால் ஜெமினியின் புகழ் ஓங்கிற்று. தமிழ், ஹிந்தி, பாஷைகளில் மட்டும் பிடித்து, இந்தியாவில் மட்டும் காண்பித்து, இவ்வளவு புகழ் பெற்ற வாஸன் "சந்திரலேகா"வை ஆங்கிலத்திலும் தயாரித்து உலகம் முழுவதும் காட்டினால் நிச்சயம் உலகத்திலே அதிக வசூல் பெற்ற ஆங்கிலப் படத்தை அது எளிதில் வென்றுவிடும் என்பது எனது துணிபு. ஆனால் உடைகள், சம்பவங்கள் யாவும் ஆங்கிலப் படத்தை ஒத்து இருத்தல் அவசியம். நிச்சயம் இதனால் தமிழ்நாடு பெருமையுற வழியுண்டு. இதர படக் கம்பெனிக்காரர்களும் இம்முயற்சியில் ஈடுபடலாம்; அவர்கள் தயாரிக்கும் படங்கள் ஆங்கில, ஹிந்திப் படங்களைத் தழுவாதவையாய் இருந்தால்!...

ஆர். தங்கவேலன்,
திருச்சி.

"ஏன் இடவசதி இல்லை?"

ஜூன் மாதம் மத்தியில் சென்னை, நகர கமிஷனர், தியேட்டர்களில் க்யூ வரிசையில் நிற்கும் ஜனங்களுக்கு நிழலுக்காக தடுப்புப் போடும்படி உத்தரவு



வட இந்தியாவில் பிரமாத வெற்றி பெற்றுவிட்டு சென்னைக்கு விஜயம் செய்திருக்கும் ஏவி. எம்மின் "பஹார்" ஹிந்திப் படத்தில் பிரான், பேபி தபஸும், பத்மினி ஆகியோர்.

போட்டதற்கு, தியேட்டர் முதலாளிகள் கமிஷனரை பேட்டிகண்டு 'நிழலுக்காக தடுப்புப் போடத் தாங்கள் தயாராய் இருப்பதாகவும், ஆனால் இடவசதி இல்லாமையாலும், நிலம் வாங்குவதில் ரொம்பவும் சிரமம் இருக்கிறபடியாலும், தடுப்புப் போடுவது சாத்தியமில்லை' என்று நாசூக்காகத் தெரிவித்துவிட்டு வந்து விட்டார்கள். ஆனால், இது உண்மை இல்லை. காஸினோ, கெயிட்டி, சித்ரா, பாரகன், வெல்லிங்டன், நியூ குளோப், எல்பின்ஸ்டன் இன்னும் சில தியேட்டர்களில்கூட டிக்கெட் கொடுக்கும் இடம் தியேட்டருக்கு உள்ளேயேதான் இருக்கிறது. இவர்கள் ஏன் தடுப்புப் போடக் கூடாது! இதற்காக நிலம் வாங்க வேண்டுமா! இதை நன்கு சிந்திக்க வேண்டும்?

எம். வி. ராமன், சென்னை 2.

வேண்டியதுதான்!

நாட்டில் அனைவரும் சினிமாக் கலையைப் பற்றி பலவிதமாக தூஷணை செய்ய ஆரம்பித்து விட்டார்கள். படங்களில் காதல் காட்சிகளே கூடாது; தெய்வங்களைப் போல் வேஷம் தாங்கி நடிக்கக் கூடாது; மெல்லிய சல்லாத் துணியை அணியக் கூடாது" இப்படியெல்லாம் ஒரு சாரார் பிரசாரம் செய்கிறார்கள். படக் கலையை முன்னுக்குக் கொண்டுவரும் நோக்கமே இவர்களுக்குக் கிடையாது என்பது என் அபிப்பிராயம். படங்களில் ஆபாசங்களைப் புகுத்துவது கெடுதல்தான். அதற்காக ஒரேயடியாக காதல் காட்சிகளே இருத்தல் கூடாது என்று வாதித்தல் அழகா! காதல் காட்சிகள், இன்ப மூட்டும் தாம்பத்யக் காட்சிகள், இவை இல்லாத படங்களை யாரால்தான் ரஸிக்க முடியும்? படம் சப்பென்று இருக்காதா? ஹாஸ்யம், காதல், மற்றும் நவரஸங்களையும் புகுத்திப் படமெடுத்தால்தான் படம் பார்ப்பவர்களுக்கு அது இன்ப மூட்டுவதாக இருக்கும்! அப்படிப்பட்ட படங்களுக்குத்தான் ஆதரவு கிடைக்கும் என்பது நிச்சயம்.

"கலைச்செல்வி", புதுடில்லி.

சோவியத் சினிமா

[22-ம் பக்கத் தொடர்ச்சி]

மிஞ்சிப் போனதே கிடையாதாம் குறித்த காலத்திற்குள்ளும், குறித்த தொகைக்குள்ளும் ஒரு படம் முடிவடைந்து விட்டால், மிகுதியாக உள்ளதைப் படம் சம்பந்தப்பட்டவர்கள் விகிதப்படி தங்களுக்குள் பிரித்துக் கொள்கிறார்கள். படத்தின் டைரெக்டர் படத்தின் "ரிஜிஸ்யூர்" என்று அழைக்கப்படுகிறார்.

நம் நாட்டில் தொழில் கல்லூரிகள் இருப்பதுபோல அங்கு சினிமாத் துறையின் ஒவ்வொரு பகுதியிலும் பயிற்சி அளிக்க கல்லூரிகள் உள்ளன. இம்மாதிரிக் கல்லூரிகளில் தேர்ச்சி பெறுபவர்களுக்கே சினிமாத் துறையில் உத்தியோகம் கிடைக்கும். இந்தியாவைப் போல் அங்கு யாரும் திடீர் நக்ஷத்திரம் ஆகிவிட முடியாது. நக்ஷத்திரங்களெல்லாம் சர்க்காராலேயே ஏற்பாடு செய்யப்படுவதால் அவர்கள் இஷ்டம் போல் பணம் கேட்பதும் முடியாது.

ரஷ்யாவில் எல்லோருக்கும் ஒரே சம்பளம் என்று தவறாகக் கருதப்பட்டு வருகிறது. சம்பளம், அவரவரது வேலைக்கும், புத்திசாலித்தனத்திற்கும் ஏற்றபடி கொடுக்கப்படுகிறது. அங்கு ஒரு கூலியின் குறைந்த சம்பளம் மாதம் 600 ரூபிள்ஸ் (ஒரு ரூபிள் என்பது பதினன்கு அணவுக்கு சமம்). அங்கு மாதம் 35,000 ரூபிள்கள் சம்பளம் வாங்கும் டைரெக்டர், ஒளிப் பதிவாளர்கள்கூட இருக்கிறார்கள்.

நடன, மியூஸிக் டைரெக்டர்களும் கூட அதற்கென உள்ள கல்லூரிகளில் படித்துத் தேறியவர்களாக இருக்கிறார்கள். நாட்டியம் ஆடுகிறவர்கள் அதற்கென உள்ள நாட்டியப் பள்ளிக்கூடங்களில் ஒன்பது வருஷங்கள், பயிலவேண்டும். இத்தகைய ஒரு சிறந்த நடனப் பயிற்சிசாலை மாஸ்கோவில் உள்ளது. நாட்டியம் பயிலுகிறவர்கள், பயிற்சி பெற்று படங்களிலும் நடித்து வருகிறார்கள். சங்கீதப் பயிற்சிச் சாலையிலிருந்து தேறி வெளி வருகிறவர்கள் நாடகம், சினிமா, சங்கீதம், நாட்டிய நாடகம், பொம்மலாட்டம் எதிலாவது வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றனர். நம் நாட்டிலுள்ளதைப் போலவே அங்கும் பலதரப்பட்ட சங்கீதப் பள்ளிகள் உள்ளன. உஸ்பெகிஸ்தான் மாகாண நடனமும் சங்கீதமும், நம் நாட்டு கிராமிய நடனம், சங்கீதம் இவைகளைப் பெரிதும் ஒத்திருக்கின்றன.

பட விநியோகம், திரையிடுதல் இவைகளைப்பற்றிக் கவனிப்போம். சோவியத் ரஷ்யாவில் 50,000 சினிமாத் தியேட்டர்கள் உள்ளன. இவைகளுக்குக் கட்டணம் உண்டு. இவை தவிர, தொழிற்சாலைகள், சங்கங்கள், கல்வி ஸ்தாபனங்கள், இவைகளில் பிரத்தியேகமாக 49,000 தியேட்டர்கள் உள்ளன. அவைகளில் வாரம் இரு முறையாவது படங்கள் திரையிடப்படுகின்றன.

இவைகள் தவிர, 41,000 டெலிவிஷன் செட்டுகள் வேறு உள்ளன. சர்க்கார் தயாரித்துள்ள புள்ளி விபரங்களிலிருந்து 95 சத விகிதம் மக்கள் சினிமாப் பார்க்கிறார்கள் என்பது தெரியவருகிறது. ஒவ்வொரு கதைப் படமும் ஐம்பது பாஷைகளில் 'டப்' செய்யப்படுகின்றன. ஒவ்வொரு படத்திற்கும் 3,500 பிரதிகள் தயாரிக்கப்படுகின்றன.

வெத்து பிலிம், ரஸாயனப் பொருள்கள், இயந்திர சாதனங்கள், காமிராக்கள், இவையெல்லாம் சோவியத் ரஷ்யாவிலேயே தயாரிக்கப்படுகின்றன. மாஸ்கோ, லெனின்கிராடு, ஒடிஸ், கீவ் முதலிய நகரங்களில் இதற்கென பெரிய தொழிற்சாலைகள் உள்ளன. தவிர, படத் தொழிலின் எல்லாத் துறைகளுக்கும் வேண்டிய சகல சாமான்களையும் அவர்களே தயாரித்துக் கொள்ளுகிறார்கள். ஒவ்வொரு ஸ்டுடியோவிலும், ஒரு ஆராய்ச்சி இலாகா இருக்கிறது. இங்கு ஒவ்வொரு துறையிலும் ஆராய்ச்சிகள் நடத்தப்படுகின்றன. கலர்ப் படத் தயாரிப்பு முறையில் ரஷ்யர்கள் பூரண வளர்ச்சி பெற்றுள்ளனர்.

சினிமாத் தொழிலைப் பற்றி இந்தியா ரஷ்யாவிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டியது எவ்வளவோ இருக்கிறது. நீங்கள் படித்தது சென்னை அ. இ. ரேடியோவில் டைரெகடர் கே. சுப்ரமண்யம் செய்த பிரசங்கத்தின் சாராம்சமாகும்.

ரூ. 1000 ரொக்க இனம்!

நீங்கள் நாடியதெல்லாம் கைகூடும்

எல்லாவிதமான பிரயத்தனம் புரிந்து நீங்கள் மனம் சோர்ந்திருந்தாலும் சரி, இந்த மாய ஜால மோதிரத்தை வாங்கி அணிந்து கொள்ளுங்கள். இதை அணிந்தவுடனே நீங்கள் விரும்பிய நபர் ஆணாயிருந்தாலும், பெண்ணாயிருந்தாலும் தக்ஷணமே வசியமாகி விடுவார். அன்னவர் எவ்வளவு கல்லைப் போன்ற மனம் உடையவராய் இருந்தாலும், ஏழு சமுத்திரங்களுக்கு அப்பால் இருந்தாலும், எல்லாத் தடைகளையும் கடந்து வந்து உங்கள் பேச்சைக் கேட்டு நடப்பார். இஷ்டப்பட்டவரை நீங்கள் மணப்பீர்கள். இதனால் மலட்டு ஸ்திரீக்கும் புத்திர சந்தானம் உண்டாகும். இறந்தவர்களின் ஆத்மாவோடு பேசலாம். பூமியில் இருக்கும் புதையல் உங்கள் கனவில் தோன்றும், லாட்டரி, ஆட்டப்பந்தயம், சூதாட்டம், வழக்கு இவற்றில் ஜெயம் உண்டாகி வெற்றி பெறுவீர்கள், பரீக்ஷையில் தேறுவீர்கள். வியாபாரத்தில் லாபம் உண்டாகும்.

துஷ்ட கிரகம் சாந்தம் அடையும். தரித்திரம் விலகும். நல்லதிர்ஷ்டம் உண்டாகும். ஜீவிய காலம் சுகமாகவும் சந்தோஷமாகவும் கழியும்.

மாந்திரீக மோதிரம் விலை ரூ. 1-15-0. ஸ்பெஷல் மோதிரம் ரூ. 3-0-0. ஸ்பெஷல் சக்தி மிகுந்தது ரூ. 3-15-0. மின்சார சக்தியைப்போல் உடனே இது பலன் தரும். இந்த மாய மோதிரம் கிரஹணம் போன்ற சமயங்களில் தயார் செய்யப்படுகிறது. சூரியன் தவறுதலாய் மேற்கில் உதித்தாலும், இம் மோதிரத்தின் சக்தி தவறமாட்டாது. அப்படிப் பலன் இல்லையென்றால் இரட்டிப்பு சார்ஜ் வாபஸுக்கு காரண்டி. பலனில்லை என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனம்! ஒருமுறை பரீக்ஷித்துப் பாருங்கள்.

விவரங்களுக்கு எழுதவும்:

Principal,

The Bengal Mesmerism House (G.M.)

JULLUNDUR CITY.

சென்னை
134131
JL
NWM,N47
N52.5.4

புஸ்தகப் பொழுது

சோலைமலை இளவரசி

[ஆசிரியர்; "கல்கி"; விலை: ரூ. 3-8-0; கிடைக்குமிடம்: கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1.]

இப் புத்தகத்தின் ஆசிரியர் "கல்கி" என்னும் போதே புத்தகத்தின் சிறப்பைப் பற்றி வாசகர்கள் தெரிந்து கொண்டிருக்கக் கூடும். 'புத்தகத்தை வாசிக்க எடுத்துக் கொண்டு விட்டால் முடிக்காது கீழே வைக்கத் தோன்றாது' என்ற அபிப்பிராயம் "கல்கி"யின் கதைகளுக்கும், நாவல்களுக்குமுள்ள ஒரு தனிச் சிறப்பாகும். அப்படிப் பட்ட ஒரு நாவல்தான் இந்த "சோலைமலை இளவரசி"யும்.

இந்த நாவலில் அவர் சில புதுமைகளைக் கையாண்டிருப்பதை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். படத் துறையில் சம்பவங்களை விறுவிறுப்பாக்க, கையாளப்படும் பல 'டெக்னிக்'குகளை அவரது எழுத்திலே கையாண்டு வெற்றி கண்டிருக்கிறார். ஆகவே 'சோலைமலை இளவரசி'யைப் படிக்கும் போது, ஒரு நாவலைப் படிக்கிறோம் என்ற எண்ணத்தைவிட, ஒரு சினிமாவைப் பார்க்கிறோமோ என்ற உணர்ச்சியேதான் ஏற்படுகிறது. கதாபாத்திரங்களை அப்படியே நம் கண் முன் கொண்டுவந்து நடமாட விடுகிறார்; அவ்வளவு நேர்த்தியாக உருவகப் படுத்தியிருக்கிறார் அவர்களை.

இந்த நாவலின் மற்றொரு விசேஷம்; இதை ஒரே நாவல் என்று சொல்லுவதைவிட இரட்டை நாவல் என்று சொல்ல வேண்டி யிருப்பதுதான். சோலைமலை இளவரசியின் கதையுடன்கூட, குமாரலிங்கம்— பொன்னம்மாள் இவர்களின் கதையும் இழைந்து நிற்கிறது. முதலில் சொன்னது கும்பெனியார் நம் நாட்டிற்குள் காலடி வைத்த காலத்தியது; பின்னது 1947-ம் வருஷம் ஆகஸ்ட் புரட்சி சமயம் நடந்தது. இரண்டு கதைகளையும் அவர் பிணைத்து, சுவாரஸ்யம் சற்றும் குன்றாமல் கையாண்டிருக்கிறார்.

இரு கதைகளையும் மாற்றி மாற்றி வெகு சுவாரஸ்யமாகச் சொல்லிக் கொண்டு போயிருக்கிறார். குமாரலிங்கம் -பொன்னம்மாள் கதையைப் படிக்கும் போது, அது எப்படி முடியப் போகிறதோ என்ற ஆவல் ஒருபுறமிருக்க, சோலைமலை இளவரசி கதை என்ன ஆயிற்று என்ற ஆவலும் கூடவே எழுகிறது. அதே போலத்தான் சோலைமலை இளவரசியின் கதையைப் படிக்கும்போது மற்ற கதையைப் பற்றிய ஆவல் எழுகிறது. தவிர, கதையை அநாவசியமாக வளர்த்தாமல், ஒரு கதையைப் பற்றிய சம்பவங்கள் சிலவற்றைப் பற்றி மற்றொரு கதையிலேயே புரிந்து கொள்ளும்படியும் கொண்டு செல்கிறார்.

ஒரு கதையிலிருந்து மற்றொரு கதைக்கு மாறும் இடங்களில்தான் அவர் 'சினிமா நுணுக்கங்களை'ப் பிரமாதமாகப் பின்பற்றியிருக்கிறார். அந்த இடங்களில் நமக்கு சினிமாக்களில் கையாளப்படும் தந்திரக் காட்சிகள்தான் ஞாபகத்துக்கு வருகின்றன. ஒரே ஒரு இடத்தை மட்டும் உதாரணம் காட்ட விரும்புகிறேன். குமாரலிங்கம் சோலைமலை இளவரசி கதையைக் கனவில் கண்டு கொண்டிருக்கிறான். முருகன் கோயில் தீபம் ஏற்றியாகி விட்டது; தன்னை அழைக்க இளவரசி வந்து விடுவாள் என நினைக்கிறான்: இனி ஆசிரியர் வருணிப்பதைக் கேளுங்கள்: "பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவனுடைய கண்ணெதிரே தோன்றிய முருகன் கோயில் தீபம் பெரிதாகிக் கொண்டு வந்தது. கிட்டத்தட்ட மாலை வேளையில் உதிக்கும் பூரண சந்திரனுடைய வடிவை அது அடைந்தது. சட்டென்று அந்தப் பூரணச் சந்திரன் ரயில் வண்டியின் ஸர்ச்லைட்டாக மாறியது. ரயிலும் ஸர்ச் லைட்டும் அதிவேகமாக அவனை நெருங்கி, நெருங்கி வந்தன. ஸர்ச் லைட்டின் உஷ்ணமான வெளிச்சம் அவனுடைய முகத்தில் பளீரென்று விழுந்து மூடியிருந்த கண்களையும் கூசும்படி செய்தது......

கடைசியாக, அவன் முகத்தில் அடித்த வெளிச்சம் ரயில் வண்டியின் ஸர்ச்லைட் வெளிச்சமும் அல்ல; உச்சி வேளை சூரியனின் வெய்யில் வெளிச்சம்..."

கமர்ஷியல் பிரின்டிங் அண் பப்ளிஷிங் ஹவுஸார் இந்த நல்ல நாவலை, கவர்ச்சிகரமான முறையில் புத்தகமாய் வெளியிட்டிருக்கிறார்கள்.

என் கடன் களிப்பூட்டல்

[ஆசிரியை: டி. ஏ. மதுரம்; விலை; அணா 2; கிடைக்குமிடம்: நன்னூலகம், த. பெ. நெ. 1403, சென்னை—17.]

ஹாஸ்ய நடிகை டி. ஏ. மதுரம், நிகழ்த்திய ரேடியோ பிரசங்கம் ஒன்றே குட்டிப் புஸ்தகமாக வெளியிடப்பட்டிருக்கிறது. அவருடைய நடிப்பைப் போலவே பேச்சும் ஹாஸ்யம் நிரம்பி இருப்பதுடன், விஷயம் பொதிந்ததாகவும் இருக்கிறது. இப் புத்தகத்திற்கு ஆசிரியர் "கல்கி" தமாஷான முகவுரை அளித்திருக்கிறார்.

போலெஸ்

[கிடைக்குமிடம்: காலேஜ் புக் ஸ்டால், 67, ஹைரோடு, திருநெல்வேலி ஜங்ஷன்; விலை: அணா இரண்டு.]

ரஷ்ய ஆசிரியர் மாக்ஸிம் கார்க்கி எழுதிய ஒரு சிறு கதை; பி. எக்ஸ். ரங்கசாமி அதைத் தமிழாக்கியிருக்கிறார்.

நான் நடிக்கப் பிறந்தவள்

[விலை: உள் நாடு 8 அணா: வெளி நாடு 12 அணா; கிடைக்குமிடம்: மனோரஞ்சிதம் வெளியீடு, சென்னை—1.]

சினிமா நடிகை பி. எஸ். சரோஜாவின் வாழ்க்கை வர்ணனை இப் புத்தகம். பி. எஸ். சரோஜாவே சொல்வது போல எழுதப்பட்டிருக்கிறது.

"பரீட்சையில் தேறாதவன் வாழ்க்கையில் பயனற்றவனா"

[ஆசிரியர்: குமார்; கிடைக்குமிடம்: பாபு பப்ளிகேஷன்ஸ்: மரக்கடை ரோடு, சாலை, திருவனந்தபுரம்; விலை $2\frac{1}{2}$ அணா.]

இது சிறுவர்களுக்கான புத்தகமாம். ஆனால், இது சிறுவர்களுக்கு ஏற்ற புத்தகமாயில்லை.

பெரியார் பதில் கூறட்டும்

[ஆசிரியர்: கலைச் செல்வன்; கிடைக்குமிடம்: கலைமணி சாபு நிலையம், 62 பள்ளிவாசல் தெரு, கடலூர்; விலை: 2 அணா.]

'பெரியார்' எனப்படும் ஈ. வெ. ரா., மதம், கடவுள் பற்றி எழுதியுள்ள சில கட்டுரைகளுக்கு பதிலளிக்கும் முறையில் ஆசிரியர் இப் புஸ்தகத்தை எழுதியிருக்கிறார்.

ஆலய வழிகாட்டி

[தொகுத்தவர்: க. வெ. அருணகிரி முதலியார்; விலை ரூ. 1; கிடைக்கும் இடம்: கணபதி வாசகசாலை, 92, காமாட்சி கோயில் தெரு, காஞ்சிபுரம்.]

இப் புத்தகம் யாத்திரீகர்களுக்கு பெரும் உதவியாக இருக்கும். இதில், பாடல் பெற்ற ஸ்தலங்கள், ஸ்தல அகராதி, போன்ற பல உபயோகமான விவரங்கள் அடங்கியுள்ளன.

டி. ஆர். ராஜகுமாரி ராஜகுமாரனாகத் தோன்றும் இந்தக் காட்சியை 'அமரகவி'யில் காணலாம்.

அதிருஷ்டம்

[ஆசிரியர் ; "தில்லை வாசி"; விலை: ஒரு அணு; கிடைக்குமிடம் : சுமதி வெளியீடு, 78, மேலவீதி, சிதம்பரம்.]

ஜில்லா கலெக்டராகி விட்டபோதிலும், தனக்கு சிறுவனக இருந்தபோது புத்தி ஏற்படச் செய்த கலர்ப் பின் ஒன்றைப் பாதுகாத்து வருகிறுர் ஒருவர். அதை வருணிக்கிறது சிறுவர்களுக்கான இந்தக் கதை.

ரவா கேஸரி

[ஆசிரியர்:'சௌஜன்'; விலை: ஒரு அணு; கிடைக்குமிடம் : அறிவு மணி அலுவலகம், 323, புது ஜெயில் ரோடு, மதுரை.]

இது சிறுவர்களுக்கான கதைப் புத்தகம். கள்ள நோட்டுத் தயாரித்து வரும் ஒரு போலீச் சாமியாரை சிறுவன் ஒருவன் போலீஸாரின் உதவியினல் பிடித்துக் கொடுக்கும் கதை இது.

நட்சத்திரங்களும் நானும்

[ஆசிரியர்: ஆர். கந்தநாதன் ; விலை : 8 அணு; கிடைக்கு மிடம் : கமலா பப்ளிகேஷன்ஸ், ஐயப்பச் செட்டித் தெரு, சென்னை.]

இன்று முன்னணியில் உள்ள ஆறு நக்ஷத்திரங்களைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளே இந்தப் புத்தகம். சுருக்கமாகவும், ரஸமாகவும் ஆசிரியர் எழுதியிருக்கிறுர். புத்தகத்திற்கு நடிகர் டி. ஆர். மஹாலிங்கம் முன்னுரை எழுதியிருக்கிறுர்.

அன்பு மீனுள்

[ஆசிரியர்: சுவைமணி; விலை : 0-4-0 ; கிடைக்குமிடம் : வாசுகிப் பதிப்பகம், உ. சிறுவயல்; இ. மா.]

ஒரு இளம் பெண், ஒரு வாலிபனின் வாழ்க்கையில் புகுந்து கொள்கிருள். தன் சுயநலம் கருதி அவனது வாழ்க்கையைப் பாழாக்கிச் சென்று விடுகிருள். இதுதான் இக் கதையின் சாரம்.

புஷ்பங்கள்

[ஆசிரியை : டி. ஏ. மதுரம்; கிடைக்குமிடம் : நன்னூலகம், த. பெ. 1403, சென்னை-17; விலை 4 அணு.]

ஹாஸ்ய நடிகை மதுரம் விஷய சாரத்துடன் பேசவும் கூடியவர் என்பதற்கு இந்தப் புத்தகமும் ஒரு சான்று. சென்னை வானெலி நிலயத்தில் அவர் பேசிய பேச்சு ஒன்றுதான் இது.

எம். எல். ஏ. மோசடி

[ஆசிரியர் : என். ராமரத்னம்; ரவி பிரசுரம்; விற்பனை உரிமை ; நவயுகப் பதிப்பகம், 36, வடக்கு மாட வீதி, மயிலாப்பூர், சென்னை-4; விலை : அணு எட்டு.]

ருசிகரமான சிறு நாவல் ; படிக்கும்போது நமது எம். எல். ஏ.க்களில் யாராவது ஒருவரை மனதில் கொண்டே இந்தப் புஸ்தகத்தை ஆசிரியர் எழுதியிருப்பாரோ என்று தோன்றுகிறது. மது விலக்கை சரிவர அமுல் நடத்தத் தெரியவில்லை என்று குறை கூறும் ஒரு எம். எல் ஏ. அதே சமயத்தில் தாமே ரகஸியமாக மதுவகைகளை விற்று வருகிறுர். இன்ஸ்பெக்டர் மோஹனின் திறமையினல் அவர் கடைசியில் பிடிபடுகிறுர். "சில எம் எல். ஏ.க்கள் 'பெர்மிட்' விஷயமாக செய்து வரும் பித்தலாட்டங்களை" ஆசிரியர் சூசகமாக விளாசியிருப்பது குறிப்பிடத்தக்கது.

உத்திரவாதமுள்ள
பவுன், வெள்ளி நகைகளுக்கு
ஜெயின் ஜுவல்லரி கம்பெனி
1, நாகேஸ்வர ராவ் ரோடு, தியாகராயநகர், சென்னை-47.



எதிரே கடல் கொந்தளித்துக் கொண்டிருந்தது. அது, அனாதை ஆஸ்ரமத்தை விட்டு வெளியே வந்த, நர்மதாவின் உள்ளத்தைப் பிரதிபலிப்பது போலிருந்தது. தயங்கித் தயங்கி பத்தடி நடந்தவள் நின்றாள்; திரும்பி சோலைக்கு நடுவில் கம்பீரமாக நின்றிருந்த அந்த ஆஸ்ரமத்தின் கட்டிடத்தைப் பார்த்துப் பெருமூச்செறிந்தாள். அவளுக்கு நினைவு தெரிந்தது முதல், அவள் வளர்ந்தது, கல்வி பயின்றது எல்லாம் அங்கேதான். ஆஸ்ரமத்தின் தலைவி கமலாதேவிதான் அவளுக்குத் தாய்-தந்தை எல்லாமுமாக இருந்து வந்தாள். அங்கிருந்த நூற்றுக் கணக்கான அனாதைகளிடமும் கலைவி வாஞ்சையுடன் பழகி வந்தாளென்றாலும், நர்மதாவிடம் மட்டும் தனியானதொரு பிரேமை வைத்திருந்தாள் அதற்குத் தகுந்த காரணமும் இல்லாமல் போய்விடவில்லை.

முதல் நாள்; நர்மதா தன் வயதை ஒத்த சிநேகிதிகளுடன் வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தாள். அந்த வருஷம் எஸ். எஸ். எல். ஸி பரீட்சையில், ராஜதானியிலேயே முதலாவதாக நர்மதா தேறியிருந்ததைப் பாராட்டியே மற்ற சிநேகிதிகள் அவளைப் புகழ்ந்து பாராட்டிக்கொண்டிருந்தனர். அப்பொழுது ஆஸ்ரமத்தின் ஆயாள்களில் ஒருத்தி அங்கு வந்தாள். "நர்மதா! தலைவியம்மா உன்னை அவுங்க ரூமுக்கு வரச் சொன்னாங்க" என்று செய்தி சொல்லிவிட்டுப் போனாள் அவள்.

சிறு கதை

நர்மதா உடனே மான்போல் துள்ளி ஓடினாள் தலைவியின் அறைக்கு. ஆனால், தலைவி கூறியதைக் கேட்டதும் அவளுடைய மந்தஹாஸ வதனம் சுண்டிவிட்டது. "நர்மதா! உனக்கு இன்றோடு பதினெட்டு வயது பூர்த்தியாகிவிட்டது. இந்த அனாதை ஆஸ்ரமத்தின் சட்டம் உனக்குத் தெரியுமல்லவா! நீ இனி மேலும் இங்கே இருக்க அது இடங் கொடுக்காது" என்று வருத்தத்துடனேயே கூறினாள் தலைவி.

"அம்மா!" என்றாள் நர்மதா. அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை. துக்கம் அவள் தொண்டையை அடைத்து விட்டது.

"நர்மதா, உன்னை ஆஸ்ரமத்தை விட்டு வெளியே அனுப்பி விடுவது எனக்கும் வருத்தமாகத்தான் இருக்கிறது. ஆனால், நான் ஆஸ்ரமத்தின் விதிகளை மீறி உனக்கென தனி சலுகை காட்ட முடியாதே."

"அம்மா, பிறந்தது முதல் வெளி உலகமே இன்னதென்று அறியாத நான் எங்கே போவேன்? கண்ணைக்கட்டி காட்டில் விட்டதுபோல இருக்குமே" என்றாள் நர்மதா, அழுமாட்டாத குறையாக. "குழந்தாய், உன்னை நான் அப்படித் தவிக்க விட்டுவிட மாட்டேன். இதோ, நான் உனக்காக ஒரு சிபார்சுக் கடிதம் தயாராக வைத்திருக்கிறேன். நீ ரொம்ப புத்திசாலி விசாரித்துக்கொண்டு போய் கடிதத்தை கிலாஸதாரிடம் சேர்ப்பித்து விடு. அந்த மனிதர் மிகவும் நல்லவர்:

தயாள சிந்தை கொண்டவர். நமது ஆஸ்ரமத்திற்கு அடிக்கடி பண உதவி செய்து வருகிறார். அவர் உனக்கு ஒரு வழி செய்வார்" என்று கூறிய தலைவி, நர்மதாவிடம் தான் தயாராக வைத்திருந்த ஒரு கவரைக் கொடுத்தாள்.

அந்தக் கவரைத் தன் கையில் வாங்கிக் கொண்டே, 'அம்மா, நான் போகத்தான் வேண்டுமா?' என்று நர்மதா விம்மலுக்கிடையே கேட்டாள். தலைவியோ, தன் மனதைக் கல்லாக்கிக் கொண்டு மௌனம் சாதிக்கவே, 'அப்படியானால், நான் போய் வருகிறேன்" என்று கூறி, அறையிலிருந்து வெளியே புறப்பட்டாள்.

"நர்மதா, கொஞ்சம் பொறு. நீ இந்த ஆஸ்ரமத்திற்கு வந்து சேர்ந்த விதத்தையும் நான் சொல்ல வேண்டிய அவசியம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. பதினெட்டு வருஷங்களுக்கு முன் நடந்த சம்பவம் அது. அப்பொழுது இந்த ஆஸ்ரமத்தில் நான் ஒரு ஆயாவாக வந்து சேர்ந்த புதிது. ஒரு நாள் காலை; கைக்குழந்தையும் தானுமாக ஒரு பெண் என்னைப் பார்க்க வந்திருப்பதாக யாரோ வந்து சொன்னார்கள். நான் போய்ப் பார்த்தேன். அந்தப் பெண் என் கூடப் படித்த சிவகாமியாக இருந்தது கண்டு ஆச்சரியத்தினால் நான் ஸ்தம்பித்துப் போனேன்.

"கண்ணீர் பெருகி, அவள் கன்னங்கள் வழியே ஓடியது. பச்சிளங் குழந்தையான உன்னை என் காலடியில் வைத்தாள். 'சகோதரி! என்னை அதிகம் ஒன்றும் கேட்காதே. நான் நெறி தவறிவிட்டேன். இதோ இந்தக் குழந்தை, இந்த நிமிஷம் முதல் ஆஸ்ரமத்துக் குழந்தை; ஏற்றுக் கொள்' என்று கெஞ்சினாள். தாயார் உயிருடன் இருக்கும் போது குழந்தைகளை ஏற்றுக் கொள்வது ஆஸ்ரமத்தின் விதிகளுக்கு முரணானது. ஆனால் அவள் இருந்த பரிதாப நிலையில் நான் அதை மறந்து, உன்னை ஏற்றுக்கொண்டு விட்டேன். உன் அன்னை மன நிம்மதி அடைந்தாள். தன் மடியிலிருந்து ஒரு நீண்ட கவரை எடுத்து என்னிடம் கொடுத்தாள். 'அக்கா, இதை பத்திரமாக வைத்திரு. என் செல்வம் பெரியவளாகி, கல்யாணம் செய்து கொள்வது என்ற முடிவுக்கு எப்பொழுது வருகிறாளோ, அப்பொழுது இதை அவளிடம் கொடு. நான் வருகிறேன்!' என்று கூறி, கட்டு மீறி வந்த தன் துக்கத்தைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு அங்கிருந்து மறைந்து போனவள், போனவள்தான். பிறகு திரும்பவே இல்லை.

"நர்மதா! ஸீலிடப்பட்ட அந்தக் கவர் என்னிடம் பத்திரமாக இருக்கிறது. உன் தாயின் வேண்டுகோளை மறுக்காதே. தக்க சமயத்தில் நீ வந்து அதை வாங்கிக்கொள்."

அவளும் அப்படியே செய்வதாக வாக்களித்து விட்டு எல்லை மீறிய துக்கத்துடன் அங்கிருந்து புறப்பட்டாள்.

"நான் போகத்தான் வேண்டுமா?" என்று வருத்தத்துடன் கேட்டாள் நர்மதா.

• • •

"ரகுபதி முதலியார் — பாங்கர்" என்ற பித்தளை போர்டு அந்த பங்களாவின் முன்னால் காலை வெய்யிலில் பளிச்சிட்டது. ஆஸ்ரமத் தலைவி அளித்த சிபார்சுக் கடிதத்துடன் தயங்கியபடி பங்களாவுக்குள் நுழைந்தாள் நர்மதா. ஹாலில், ஒரு சோபாவில் சாய்ந்தபடி முதலியார் 'பக்தர்கள் வரலாறு' படித்துக் கொண்டிருந்தார். பட்டை பட்டையாக விபூதியும், அதன் நடுவில் பெரிய குங்குமப் பொட்டும் அவரது அகன்ற நெற்றியில் துலங்கின. நர்மதா கொண்டு வந்து கொடுத்த கடிதத்தை வாங்கிப் படித்த அவர், நர்மதாவை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, யோசனையில் ஆழ்ந்து விட்டார்.

அவரது பிரச்னைக்கு ஒரு முடிவு சொல்லுகிறவள்போல், "தாத்தா" என்று அன்பொழுக தனது மழலை மொழியால் அழைத்தபடி, நான்கு வயதுப் பெண் குழந்தை ஒன்று ஓடிவந்து அவர் கழுத்தைக் கட்டிக் கொண்டது. ஹாலில் நின்ற நர்மதாவைப் பார்த்து விட்டு, "தாத்தா இதுதான் எனக்கு நீ ஏற்பாடு செய்வதாகச் சொன்ன என் புதிய வாத்தியாரம்மாளா" என்று கேட்டாள் அந்தக் குழந்தை.

'அடி என் செல்லமே" என்ற வாஞ்சையுடன் தம் பேத்தியை அணைத்துக் கொண்ட முதலியார், "ஆமாம், இவள் தான் இனி உன் வாத்தியாரம்மாள், ஆயாள் எல்லாம்" என்று சொன்னார். பிறகு, "உனக்கு சம்மதமா?" என்று கேட்கும் பாவனையில் நர்மதாவைத் திரும்பிப் பார்த்தார் முதலியார்.

நர்மதாவுக்கு அந்த இடம் ரொம்பப் பிடித்து விட்டது. அவளுக்கு தம் பங்களாவிலேயே ஒரு அறையை ஏற்பாடு செய்து கொடுத்தார் முதலியார். முதலியாரின் மனைவியும் அவளிடம் அதீதமான ஒரு அன்புடன் நடந்து கொண்டாள். முதலியாரின் பேத்தி கல்யாணியும் வாத்தியாரம்மாளிடம் 'ஒட்டி'க் கொண்டாள்.

சில தினங்களுக்குள்ளேயே நர்மதா அந்தக் குடும்பத்தைப் பற்றிய விபரம் பூராவையும் விசாரித்துத் தெரிந்து கொண்டாள். முதலியாரின் மனைவியே எல்லாவற்றையும் அவளுக்கு விபரமாகச் சொன்னாள். கல்யாணி அவர்களுடைய மகன் வயிற்றுப் பேத்தி. கல்யாணி பிறந்த பத்தாவது நாளே, அவளது தாய், தன் கணவனையும், மாமியார், மாமனார் இவர்களையும் கதறவிட்டுக் காலன் வசமடைந்தாள். முதலியாரின் ஒரே மகன் செல்வராஜ் தன் அருமை மனைவியை இழந்தது முதல் வாழ்க்கையில் பற்றற்றவனாக இருந்து வருகிறான். பெற்றோரும், உற்றோரும் எவ்வளவோ சொல்லியும் மறுமணம் செய்துகொள்ளாமல் பிடிவாதமாக இருந்து வந்தான். தந்தை நடத்தி வந்த பாங்கியின் மானேஜராக அவன் இருந்து வந்தான்.

முதலில் சில தினங்கள் வரை நர்மதா தன் அறையிலேயே அடைபட்டுக் கிடந்தாள். பிறகு ஒரு நாள் சிறுமி கல்யாணியின் இடைவிடாத தொந்தரவின்மேல் பங்களாவின் தோட்டத்திற்குப் போனாள். அந்த சூழ்நிலை அவ

ளுக்கு மிகவும் பிடித்திருந்தது. ஆகவே, பிறகு அதையே தினசரி மாலை நேரங்களில் ஒரு வழக்கமாகக் கொண்டு விட்டாள். அப்படிப் போன நாட்களில் ஒரு தினம் தான் அவள் முதலியாரின் மகன் செல்வராஜைப் பார்த்தது.

தோட்டத்தின் ஒரு பக்கத்தில் உட்கார்ந்து சுவாரஸ்யமாக நாவல் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தாள் அவள். கல்யாணி மற்ருெரு பக்கத்தில் தனியே ஓடி விளையாடிக் கொண்டிருந்தாள். "கல்யாணி. கல்யாணி!" என்ற புதிதான ஒரு குரல் தன் சமீபமாகக் கேட்டதும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள் நர்மதா.

தனக்கு அருகாமையிலே, தன்னையே பிரமிக்கப் பார்த்தபடி ஒரு சுந்தர வாலிபன் நின்று கொண்டிருப்பதைக் கண்டதும் சட்டென்று எழுந்து நின்ருள். அவள் முகம் நாணத்தால் குங்குமமென சிவந்து விட்டது.

தன் மகளுக்கு, புதிதாக ஒரு வாத்தியாரம்மாளை, தன் தந்தை ஏற்பாடு செய்திருக்கிருர் என்பதை அவன் அறிவான். அவள் யார், எப்படி இருப்பாள் என்றெல்லாம் தெரிந்துகொள்ள விரும்பாத மனே நிலையில் அவன் இருந்தமையால் அதைப் பற்றி அவன் அக்கறை கொள்ளாமல் இருந்தான்.

அன்று தன் மகளைத் தேடி தோட்டத்திற்கு வந்த செல்வராஜ். நர்மதாவைக் கண்டதும், அந்த அழகிதான் தன் மகளின் புது வாத்தியாரம்மாள் என்பதைப் புரிந்து கொண்டான்.

நிதானித்துக் கொண்ட செல்வராஜ். ஏதாவது பேச வேண்டுமென்று, "கல்யாணி எங்கே!" என்று கேட்டான்.

நர்மதா வாய் திறந்துபதில் சொல்லவில்லை. மௌனமாகக் குனிந்த தலையை நிமிர்த்தி, கல்யாணி விளையாடிக் கொண்டிருந்த பக்கம் தன் பார்வையைச் செலுத்தினுள். செல்வராஜ், பிரேமை

டி. கிருஷ்ண குமாரி

தெலுங்குப் படங்கள் பலவற்றில்
நடித்துப் புகழ் பெற்று வரும்
கிருஷ்ண குமாரி தமிழ்ப் படங்க
ளிலும் நடிக்க முற்பட்டிருக்கிறார்.



வட இந்தியாவில் வெற்றி முழக்கம் செய்துவரும் ஏவி. எம். மின் "பஹார்" ஹிந்திப் படம் இப்பொழுது தமிழ் நாட்டில் காட்டப்பட்டு வருகிறது. அப்படத்தில் வைஜயந்திமாலாவின் ஒரு தோற்றம் இது.

பொங்கும் கண்களுடன் அவளைத் திரும்பத் திரும்பப் பார்த்தபடி தன் மகள் கல்யாணி இருந்த பக்கம் போனான்.

நர்மதா அந்த வாலிபன்தான் முதலியார் மகன் என்பதைப் புரிந்து கொண்டாள். அவனது கம்பீரத் தோற்றமும், சோகத்தின் சாயல் படிந்த அந்த சுந்தர வதனமும் அவள் மனதில் ஆழமாகப் படிந்து விட்டன. அடிக்கடி அதை உருவகப்படுத்திப் பார்த்துப் பெருமூச்செறியலானாள்.

நாளடைவில் செல்வராஜும்—நர்மதாவும் நெருங்கிப் பழகலானார்கள். பரஸ்பர பிரேமை அவர்களுக்குள் ஏற்பட்டு விட்டது. ஒருவரின்றி மற்றவர் வாழ முடியாது என்ற நிலை ஏற்பட்டது. மனைவியைப் பிரிந்த பின் அந்த நான்கு வருஷங்களில் மறுமணம் செய்துகொள்வதில்லை என்று விடாப்பிடியாக இருந்த அவன் மனோதிடம் குலைய ஆரம்பித்தது. நர்மதாவைத் தன் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொள்ள விரும்பினான். ஒருநாள் தன் எண்ணத்தை மனம்விட்டு நர்மதாவிடம் வெளியிட்டு விட்டான்.

நர்மதாவுக்கு அவன் வாயால் அதைக் கேட்டதில் அலாதி ஆனந்தம்தான். "நீங்கள், சொல்லுவதெல்லாம் சரிதான். ஆனால், நான் உங்களை அடைய நினைப்பது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கதைதான்" என்றாள் அவள், அசுவாரஸ்யமாக.

"நர்மதா, நீ என்ன நினைக்கிறாய் என்பது எனக்குத் தெரியும். அனாதையான நம்மை இவர் மணக்க இவரது பெற்றோர்கள் சம்மதிப்பார்களா என்றுதான் நீ தயங்குகிறாய். சம்மதம் பெறுவது என் பொறுப்பு" என்றான் செல்வராஜ் உறுதியுடன்.

செல்வராஜ் சொன்னபடியே தனது பெற்றோர்களின் சம்மதத்தையும் பெற்று விட்டான். முதலியார் தம்பதி முதலில் விஷயத்தைக் கேட்டதும் திகைத்தனர். ஆனால், துறவி போல் வாழ்ந்து வந்த தங்கள் மகன் இவ்வளவாவது விவாகம் செய்து கொள்வதாக ஒப்புக் கொண்டானே என்ற ஆறுதல் அவர்களுக்கு. தவிரவும் அவர்களுக்கும் நர்மதாவை ரொம்பவும் பிடித்துப் போயிருந்தது.

முடிவைத் தெரிந்து கொண்ட நர்மதாவுக்கு ஏற்பட்ட சந்தோஷம் சொல்லி முடியாது. 'நம் வாழ்க்கையில் கூட மகிழ்ச்சி உண்டா!' என்று எண்ணி எண்ணி மனம் பூரித்துப்போனாள் அவள்.

"நர்மதா, இனித் தடை ஒன்றுமில்லையே? விவாகத்துக்கு நாள் குறிப்பிடலாமல்லவா!" என்று மகிழ்ச்சி பொங்கக் கேட்டான் செல்வராஜ்.

"எனக்கு இரண்டு நாட்கள் தவணை கொடுங்கள். நான் போய் ஆஸ்ரமத்துத் தலைவியின் ஆசியைப் பெற்றுத் திரும்பி வந்து விடுகிறேன்" என்று கூறி விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டாள் நர்மதா.

• • •

தலைவி கமலாதேவி நர்மதாவை ஆர்வத்தோடு வரவேற்றாள். நர்மதாவின் திருமணச் செய்தியைக் கேட்டு குதூகலித்தாள். அவள் தாய் தன்னிடம் ஒப்படைத்திருந்த, ஸீலிட்ட அந்தக் கவரைக் கொண்டு வந்து அவளிடம் கொடுத்தாள். பவித்திரமான ஒரு பொருளை வாங்கிக் கொள்வதுபோல பயபக்தியுடன் அதைத் தலைவியிடமிருந்து பெற்றுக் கொண்ட நர்மதா, ஆஸ்ரமத்தின் ஒரு தனி அறைக்குப் போனாள்.

நடுங்கும் கைகளுடன் கவரை உடைத்து, உள்ளேயிருந்த கடிதத்தை எடுத்து பரபரப்புடன் படிக்கலானாள்:

"அன்புள்ள மகளே,

"நம் தாய் யார்? தந்தை யார்? என்ற கேள்வி உன் மனதை வாட்டி, வேதனைப் படுத்தியிருக்கும் என்பது எனக்குத் தெரியும்.

"நீ எப்பொழுதாவது சினிமா உலக சரித்திரத்தின் கடந்த காலத்திய ஏடுகளைப் புரட்டியானால் 'சாருபாலா' என்ற ஒரு நக்ஷத்திரத்தைப்பற்றித் தெரிந்து கொள்வாய். அது மட்டுமல்ல! அந்த நக்ஷத்திரம் 'ஒரே படத்தில் நடித்துவிட்டு மறைந்து விட்டாள்" என்ற விஷயத்தையும் தெரிந்து கொள்ளலாம். இந்த துர்ப்பாக்கியவதிதான் அந்த மாஜி நக்ஷத்திரம்.

"பள்ளிக்கூடத்தில் படிக்கும் போதே நான் பரத நாட்டியக் கலையைப் பயின்று விட்டேன். என் பரத நாட்டியத்தின் புகழ் எங்கும் பரவியிருந்தது. அத்துடன் கூட நான் நல்ல அழகி. அந்த அழகுதான் என்னைப் பாழ்படுத்தி விட்டது.

"என் ஆட்டம் எங்கு நடந்தாலும்

தவறாது அதற்கு வந்து விடுவார் ஒரு இளைஞர். முதல் வரிசையில் அவரை தான் தவறாது காண்பேன். அவர் சுந்தர ரூபன்; வாலிபப் பிராயம். நாளடைவில் என் கண்களும் மேடைமீது வந்ததும் அவரைத்தான் முதலில் தேடத் தொடங்கின. தப்பித் தவறி ஒருநாள் அவர் ஆட்டத்துக்கு வராமல் இருந்து விட்டால், அன்று எனக்கு ஆடவே பிடிக்காது. 'கடனே' என்றுதான் ஆடிவிட்டு வருவேன். ஆனால், அவர் வராது என் கச்சேரி நடந்த நாட்களோ ரொம்பவும் குறைவுதான். அதிகம் வருணிப்பானேன். அவர் என் உள்ளத்தில் இடம் பெற்று விட்டார். அதே போல நானும் அவர் மனதைக் கவர்ந்து விட்டேன். என்பதை நான் தெரிந்து கொள்ள அதிக நாட்கள் பிடிக்கவில்லை.

"ஒரு சமயம், ஒரு ஆஸ்பத்திரியின் கட்டிட நிதிக்காக என்னுடைய கச்சேரி ஒன்று நடைபெற்றது. அன்றையக் கச்சேரிக்கு, நகரின் பிரபல தனவந்தரான ஒருவர் தலைமை வகிக்கப் போவதாக கச்சேரியை ஏற்பாடு செய்திருந்தவர்கள் சொன்னார்கள். கச்சேரியும் நடந்தது. சொல்ல முடியாத கூட்டம். அன்று தலைமை வகிக்க இசைந்த அந்த பிரபல செல்வந்தர் மேடைமீது ஏறிவந்தபோது என் உள்ளம் அப்படியே ஆனந்தத்தால் துடித்தது. அவர் வேறு யாருமல்ல. என் உள்ளம் கவர்ந்த கள்வன்தான். ஆம்; அந்த சுந்தர இளைஞர் தான். அவர் என் நடனத்தைப் புகழ்ந்தபோது எனக்கு வானவீதியில் பறப்பது போன்ற உணர்ச்சியே ஏற்பட்டது. அவர், கச்சேரியை ஏற்பாடு செய்தவர்கள் சார்பாக, எனக்கு நடனமூர்த்தி நடராஜரின் வெள்ளி விக்கிரஹம் ஒன்றைப் பரிசாக அளித்தார். அப்பொழுது அவர் ஸ்பரிசம் பட்ட எனக்கு உடம்பு புல்லரித்தது.

"மகளே, அதிகம் வளர்த்துவானேன். அடுத்த சில தினங்களுக்குள்ளேயே எங்கள் பழக்கம் நெருக்கமாகி விட்டது. அந்த தனவந்தர் அடிக்கடி என்னை வந்து சந்திக்கலானார். அவருடைய இடைவிடாத தூண்டுதலின் பேரிலும், சிபாரிசின் பேரிலும் நான் ஒரு படத்தில் கதாநாயகியாக—சாருபாலா என்ற சினிமாப் பெயருடன்—நடிக்க ஒப்பந்தம் ஆனேன். அவர் என் நலனுக்காக, என் முன்னேற்றத்துக்காகப் பாடுபடுவதைக் கண்டு நான் என் நன்றியறிதலைத் தெரிவிக்க வகை தெரியாமல் திகைத்தேன். அவ்வளவுக்கும் அவருடைய சுயநலம் தான் காரணம் என்று நான் அப்பொழுது தெரிந்து கொள்ளாமல் போனேன்.

"நாங்கள் இருவரும் கடற்கரை, நாடகம், சினிமா, சங்கீதக் கச்சேரி என்று அடிக்கடி இன்பமாகப் பொழுது போக்கினோம். தன் தந்தையிடம், எங்கள் காதலைப் பற்றிக் கூறிவிட்டதாகவும் சீக்கிரம் திருமணத் தேதி வைத்து விடுவதாகவும் அவர் சொல்லி வந்தார். பேதை நானும் அதையெல்லாம் உண்மையென்றே நம்பி வந்தேன். நான் அவரோடு எவ்வளவோ நெருங்கிப் பழகி வந்தேன் என்றாலும், நெறி தவறி விடாமல்தான் இருந்து வந்தேன். ஆனால்,......ஒரு நாள் ......ஒரே நாள்......அதற்கும் ஆபத்து வந்துவிட்டது. அவரது காமப் பசிக்கு நான் இரையாகி விட்டேன். செல்வமே! அதன் விளைவுதான் நீ.

"அதன் பிறகு அவர் எப்பொழுதும் போல அடிக்கடி என்னைச் சந்திக்க வருவதில்லை. கல்யாணத்தைப் பற்றக் கேட்ட போதெல்லாம் கடுப்புடன் ஏதேதோ கூறித் தட்டிக் கழித்தார். பிறகுதான் ஒருநாள் அந்தப் பேரிடி என் தலையில் விழுந்தது. எங்கள் காதல் விவகாரம் என் பட முதலாளிக்குத் தெரிந்திருக்க வேண்டும். அவர் என்னை அழைத்துக் கண்டித்தார். 'அவர் ஏற்கனவே மணமானவர். நீ அவருடன் பழகுவது தவறு' என்று பட முதலாளி சொன்னபோது, நான் அதை நம்பவில்லை. பிறகு விசாரித்ததில்தான் உண்மை வெளிப்பட்டது. ஆம், அவர் மணமானவர்தான்; அவருக்கு நான்கு வயதில் ஒரு மகன்கூட இருந்தான். உடனே போய் அவர் மானத்தை வாங்க வேண்டுமென்றுதான் என் உள்ளம் கொதித்தது. ஆனால் 'நம் பேச்சு எடுபடுமா?' என்ற நினைப்பு அதைத் தணித்துவிட்டது.

"கண்ணே, அந்த நிமிஷமே தற்கொலை செய்து கொள்ளத்தான் துணிவு கொண்டேன். ஆனால்; நான் செய்த குற்றத்துக்காக என் வயிற்றிலிருந்த நீயும் அழிவதை நான் விரும்பவில்லை. உன்னைப் பெற்றேன். நல்ல காலமாக அதற்குள் நான் நடித்து வந்த படமும் முடிந்து விட்டது. உன்னை சகோதரி கமலா தேவியிடம் ஒப்படைத்து விட்

டேன், எங்கே போகிறேனோ, அது எனக்கே தெரியாது!

'உன் தாயின் அவல வாழ்க்கையைக் கூறி உன் மனதைப் புண்படுத்த வேண்டாம் என்றுதான் நான் முதலில் நினைத்தேன். ஆனால், தாயைப் போல சேயும் ஆகிவிடக்கூடாது என்று உன்னை எச்சரிக்கவே எழுதலானேன் நர்மதா! ஆண்களை லேசில் நம்பிவிடாதே. அவர்கள் தங்கள் காமத்தைத் தீர்த்துக் கொள்ள பிரேம கீதம் பாடுவார்கள்; அதற்காக காதல் என்ற அந்த தெய்வீகமான வார்த்தையைப் பயன் படுத்துவார்கள்.

"நீ கல்யாணமே செய்து கொள்ளக் கூடாது என்று நான் சொல்லவில்லை. உன் கல்யாண விஷயமாக எதையும் தீர விசாரித்துப் பிறகு ஒரு முடிவுக்கு வா. இதுவே, உனக்கு என்னுடைய புத்திமதி, எச்சரிக்கை.

"கடைசியாக உன் தாயை வஞ்சித்த அந்தப் பாவியின் பெயரையும் கூறிவிடுகிறேன். அவர்தான்—உலகத்தின் கண் முன் தர்மவானாகவும் பக்திமானாகவும் வாழ்ந்து வரும்— 'பாங்கர்—ரகுபதி முதலியார்.'

"துரதிருஷ்டம் பிடித்த உன் தாய்,
சிவகாமி."

கடிதத்தைப் படிக்க முடியாமல் கண்ணீர் நர்மதாவின் கண்களை அடிக்கடி மறைத்தது. தட்டுத் தடுமாறிப் படித்தாள். பலமுறை படித்தாள். எதிரே தன் தாய் நின்று தன்னை எச்சரிப்பது போன்ற பிரமை ஏற்பட்டது அவளுக்கு.

தன் தாயைக் கெடுத்த துரோகி—தன் தந்தை—யாரென்று மீண்டும் படித்தாள். "பாங்கர்—ரகுபதி முதலியார். பாங்கர்—ரகுபதி முதலியார்" செல்வராஜின் தந்தையா? அப்படியானால்...... செல்வராஜ் என் சகோதரன்." அவளுக்கு உலகமே சுற்றுவது போலிருந்தது. பித்துப் பிடித்தவள் போலானாள்.

செயலற்று நின்ற அவளைத் தட்டி எழுப்பியது "நர்மதா!" என்று அழைத்தபடி அங்கு வந்த தலைவியின் கனிவான குரல்.

நர்மதா தடாலென்று கீழே விழுந்து தலைவியின் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். "அம்மா, நான் கன்னிப் பெண்ணாகவே வாழ விரும்புகிறேன். ஆஸ்ரமத்தில் என்னை ஒரு ஆயாளாகவாவது ஏற்றுக்கொள்ள மாட்டீர்களா?" என்று கூறிக் கண்ணீர் வடித்தாள்.

"நர்மதா, நீ மனப்பூர்வமாக அதை விரும்பினால் அப்படியே ஆகட்டும்" என்று சொல்லி, நர்மதாவைத் தூக்கி ஒரு தாயின் பிரேமையுடன் அவள் தலையை அன்புடன் வருடினாள்.

நர்மதாவின் உள்ளம் சாந்தி அடையத் தொடங்கியது. ஆனால், பின் கண்ட கடிதத்தை எழுதித் தபாலில் சேர்த்த பிறகுதான் பூரண அமைதி ஏற்பட்டது அவளுக்கு:

"அன்புள்ள சகோதரா!

இப்படி அழைப்பது ஆச்சரியமாக இருக்கிறதா? ஆம், அப்படித்தான் நான் உங்களை அழைக்க முடியும். இத்துடனுள்ள என் தாயின் கடிதத்தைப் படித்தால் உங்களுக்கு விஷயம் விளங்கிவிடும். கடைசியாக ஒரு வேண்டுகோள். இந்த விஷயம் உங்கள் மனத்தோடு மடியட்டும். உங்கள் பெற்றோர்களின் கண்களில் பட்டு அவர்களைக் கலங்க வைக்க வேண்டாம். கண்மணி கல்யாணிக்கு என் ஆசிகள்.

சகோதரி, நர்மதா"

இலவசம்

எங்கள் கறுப்பு மயிர் தைலம் No 501 (Regd.) எல்லா வித கேசங்களுக்கும், கருகருத்த காசுநி அளிக்கும் மயிர் உதிராது. இதை உபயோகித்தால நீண்டு, பளபளப்புடன் சுருளும். ஒரு பாட்டில் ரூ. 1-12-0
மூன்று 4-0-0
இத்துடன் 10 வருஷ உத்திர வாதமுள்ள அழகான கைக் கடியாரமும், ஒரு நியூ கோல்ட் மோதிரமும் ஒரு பாட்டில் வாங்குபவர்களுக்கு அனுப்பப்படும். மூன்று பாட்டில் வாங்குவோருக்கு 3 கைக்கடியாரமும், 3 மோதிரங்களும் அனுப்பப்படும். திருப்தியில்லாவிடில் பணம் வாபஸ் செய்யப்படும்.

JAI HIND WATCH Co.
P.B. 97 SITLA TEMPLE AMRITSAR.

நடனம் ஆடினர்

"நந்தி"

ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி சபையின் ஆதரவில் திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூல் ஹாலில் சென்ற மாதம் 23ந் தேதியன்று வைஜயந்தி மாலாவின் நடனக் கச்சேரி நடைபெற்றது. அன்றைய நிகழ்ச்சிகளில் "சாதிஞ்சனே" வர்ணத்தைச் சிறப்பாகச் சொல்லலாம். கற்பனை நிறைந்த அழகான ஜதித் தொகுப்புகளும், அதை சுத்தமாக ஆடிக் காட்டியதும் கலை ரஸனையுடனிருந்தன. சொற்கட்டுகளும் அதிக நீளமில்லாமல், சலிப்புத் தட்டாத அளவுக்கு பொருத்தமாக அமைக்கப்பட்டிருந்தன. பதங்களில்கூட ஆட்டமும் அபிநயமும் இணைந்து பாவ சுத்தத்துடன் காணப்பட்டன. "வர்ணத்"திலும். "காலைத் தூக்கி", "நடனம் ஆடினர்" முதலிய பாட்டுக்களிலும் அமைக்கப்பட்டிருந்த துரிதகால ஜதிகள் அவ்வளவு ஜனரஞ்சகமாகயில்லை. என்னதான் சிறந்த பயிற்சியிருந்த போதிலும் துரிதகால ஜதிகளை அடுத்தடுத்து ஆடும்போது அங்கிக சுத்தம் குறைந்து விடுகிறது இந்தக் குறை வைஜயந்தியின் அந்தக் கச்சேரியிலும் காணப்பட்டது. "நடனம் ஆடினர்" என்ற பாட்டின் ஆட்டத்தில் நடராஜர் நிலையை அடிக்கடி காண்பிக்கும்போது; பல இடங்களில் நடராஜர் நிலை வழுவி, ஆலயங்களின் சன்னிதி வாயிலில் உள்ள துவார பாலகர் சிலையின் நிலையைப்போல இருந்தது. பொதுவாக, கச்சேரியின் முன்பாகத்தில் இருந்த அளவு ரஸனை கச்சேரியின் கடைசி பாகத்தில் காணப்படவில்லை. அன்று ஸ்ரீ. பார்த்தசாரதி சுவாமி சபையினர் ஜஸ்டிஸ் பி. ராஜகோபாலனைக் கொண்டு வைஜயந்திமாலாவுக்கு "நாட்டிய கலா பூஷணி" என்ற பட்டத்தை அளித்தனர். கே. என். தண்டாயுதபாணி பிள்ளை அவர்களின் நட்டுவாங்கத்துடன் அன்றையக் கச்சேரி நடைபெற்றது.

சேவ. கல்யாணி

எழும்பூர் மியூஸியம் தியேட்டரில் நடைபெற்ற தமிழிசை விழாவில் "சரபேந்திர பூபாலக் குறவஞ்சி" என்ற நாட்டிய நாடகமும் இடம் பெற்றிருந்தது. தஞ்சை மன்னன் சரபோஜியைக் கண்டு காதல் கொண்ட ஒரு மங்கை, காதல் நோயால் வருந்திக் கொண்டிருக்கையில்,

குறி சொல்லுவதில் கைதேர்ந்த குறத்தி ஒருத்தி 'அவள் மன்னனை அடைவாள்' என்று கூறுகிறுள். குறத்தியைத் தேடி அலைந்து குறவன் வருகிறுன். இருவரும் மகிழ்ச்சி யடைகின்றனர். இதில் ஹேமமாலினி வஸந்தவல்லியாகவும், பாலசரஸ்வதி குறத்தியாகவும், குமாரி நிர்மலா குறவனுகவும் நடித்தனர்.

ஹேமமாலினியிடம் சாத்விகம் சாதாரணமாகவே இருந்தது. பாலசரஸ்வதியிடம் அபிநயம வரப் பிரசாதம்போல் உன்னத முறையில் அமைந்திருந்தாலும் குறத்தயின் பாகத்திற்கு அவர் பொருந்தவில்லை. குறத்தியின் அபிநயத்திற்கான நீண்ட பாட்டுகளின்போது, தோழிகள் நடுநடுவே பாட்டுகளை பதவிந்நியாச முறையில் ஆடியது விறுவிறுப்புடன் இருந்தது. வேகமான ஜதிகளை உடல் குலுங்க ஆடிவிட்டு, பெருமூச்சுடன் நிற்கும்போது பாலசரஸ்வதியைப் பார்க்க பரிதாபமாகவே இருந்தது. பாட்டுகளும் ஜதித் தொகுப்பும் கலை மணத்துடன் உன்னத முறையில் அமைக்கப்பட்டிருந்தும் நாட்டியத்தில் எதிர்பார்த்த அளவு விறுவிறுப்புக் காணப்படவில்லை.

இண்டியன் இன்ஸ்டிடியூட் ஆப் பைன் ஆர்ட்ஸின் ஐந்தாவது "தென்னிந்திய நாட்டியக் கலை மகாநாடு" மியூஸியம் தியேட்டரில் பேராசிரியர் ஆர். ஸ்ரீனிவாசன் தலைமையில் ஜனவரி 4ம் தேதயன்று ஆரம்பமாயிற்று. ஸ்ரீ. டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் விழாவைத் துவக்கி வைத்தார். ஆரம்ப தினத்தன்று சௌ. கல்யாணியின நடனம் நடைபெற்றது. நாட்டியக் கலை மகா நாட்டில் ஆடத்தகுந்த முறையில் பூரண பாவத்துடனும், ஆங்கிக சுத்தத்துடனும் கச்சேரி அமைந்திருந்தது. "தாயே யசோதா" என்ற பாட்டின் அபிநயத்தின்போது பாட்டிற்கும் பாவத்திற்கும் சம்பந்தமின்றி சில சமயங்களில ஆடியதும், "நடனம் ஆடினுர்" என்ற பாட்டில் சில நிலைகள் பூரண சுத்தமாக இல்லாமலிருந்ததும் தவிர, கசசேரி முழுவதும் கலா ரஸனை நிறைந்திருந்தது. நடனத்தல் நல்ல மேடையனுபவம் பெற்றிருந்தவரைப்போல ஆடிய சௌ. கல்யாணிக்கு இதுதான் அரங்கேற்றல் கச்சேரி என்று அறிந்தபோது ரஸிகர்கள் ஆச்சரியம் அடைந்தனர்.

சுத்தமான

கம்பளிப் போர்வை

விலை ஐந்தே ரூபாய்தான்! இத்தாலியில் தயாரித்த—முழு சைஸ்—சுத்தமான கம்பளிப் போர்வை. எங்களுடைய புதிய திட்டத்தை பிரபலப்படுத்தவே இந்த சந்தர்ப்பத்தை அளிக்கிறோம். ஸ்டாக் மிகக் குறைவாகவே இருப்பதால் ஒருவருக்கு இரண்டு கம்பளிக்கு மேல் கொடுக்கப்பட மாட்டாது. ஏமாற்றத்தை தவிர்க்க உடனே எழுதவும்.

GENERAL NOVELTY STORES
(G.M.) DELHI

நீங்கள் சினிமாவில் சேர விரும்புகிறீர்களா?

சினிமாவில் நீங்கள் நடிகராகவோ, நடிகையாகவோ சேர விரும்பினுல் முதலில் நீங்கள் அனுப்பும் போட்டோக்கள் அழகானதாயிருக்கவேண்டும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

அற்புதமான முறையில் "மேக்கப்"புடன் நீங்கள் போட்டோ (ஸ்டில்கள்) எடுத்துக் கொள்ள முற்றும் தகுதியான இடம்.

ஸ்மார்ட் ஸ்டுடியோ

57C, பைகிராப்ட்ஸ் ரோடு
திருவல்லிக்கேணி சென்னை—5.

பிரம்ம லோகம்

இப்படத்திற்கெனப் பாடியிருக்கும் பாட்டுகள் வெகு இனிமையாக அமைந்து விட்டிருக்கின்றனவாம்.

தாய் உள்ளம்

நாராயணன் கம்பெனியாரின் "தாய் உள்ளம்" அடுத்த மாதம் திரையிட்டு விடப்படுமாம். கே. ராமனுத் டைரெக்ஷனில் தயாராகும் இப் படத்தில், வி. நாகய்யா, எம். வி. ராஜம்மா, மனோஹர், கணேசன், காமெடியன் ராமஸ்வாமி, கே. ஆர். செல்லம், முத்துலக்ஷ்மி ஆகியோர் முக்கிய பாகங்களில் நடித்து வருகின்றனர். இப்படத்தில் சில சிறந்த டெக்னிக்குகளைக் கையாண்டிருக்கிருராம் டைரெக்டர். சமீபத்தில் எம். வி. ராஜம்மா-மனோஹர் சம்பந்தப்பட்ட காக்ஷி ஒன்று நடுக்கடலில் படமாக்கப்பட்டதாகத் தெரிகிறது.

காஞ்சன

பக்ஷிராஜாவின் "காஞ்சன" தமிழ்-தெலுங்கு-மலையாளம் மூன்றுபாஷைகளிலும் படமாகி வருகிறது. தமிழ்ப் படம் பிப்ரவரி மரதம் கடைசி வாரத்தில் திரையிடப்படுமென்று தெரிகிறது. வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. லலிதா, கே. ஆர். ராமசாமி, எம். ஆர். சந்தானலக்ஷ்மி, டி. எஸ். துரைராஜ் ஆகியோர் பிரதம பாகங்களில் நடித்து வருகின்றனர். இப் படம் ஜெமினியின் வெளியீடாக இருக்கும்.

அந்தமான் கைதி

வாஹினி ஸ்டுடியோவில் வெகு மும்முரமாகத் தயாராகி வருகிறது, ராதா கிருஷ்ண பிலிம்ஸாரின் "அந்தமான் கைதி". டைரெக்டர் கே. சுப்ரமண்யத்தின் மேற்பார்வையில், வி. கிருஷ்ணன் டைரெக்ஷனில் தயாராகி வரும் இப் படத்தில் எம். ஜி. ராமச்சந்திரன், டி. எஸ். பாலய்யா, திர்குநச்சி, கே. சாரங்கபாணி, டி. என். சிவதாணு, எம். எஸ். கருப்பய்யா, பி. கே. சரஸ்வதி, எம். எஸ். திரௌபதி, எஸ். டி. சுப்புலக்ஷ்மி ஆக பலர் நடிக்கின்றனர். லலிதா-பத்மினி-ராகினி சகோதரிகளின் நடனம் படத்தில் ஓர் உயர்வான அம்சமாக இருக்குமாம். படம் மார்ச் மாதம் திரையிடப் படலாமெனத் தெரிகிறது.

அமரகவி

நாகூர் ஸினி புரொடக்ஷன்ஸின் "அமரகவி" முக்கால் பாகத்திற்கு மேல் படமாகி விட்டதாம். எம். கே. தியாகராஜ பாகவதர், டி. ஆர். ராஜகுமாரி, பி. எஸ். சரோஜா, பி. கே. சரஸ்வதி ஆகியோர் பிரதம பாகங்களில் நடிக்கும் இப்படத்தை நாகூர் சிறந்த முறையில் டைரெக்ட் செய்து வருகிருராம். கிருஷ்ணன்-மதுரம் ஜோடியுடன்கூட, டி. வி. சேதுராமன்-கே. எஸ். அங்கமுத்து இவர்களும் ஹாஸ்ய பாகங்களைத் திறம்படப் பூர்த்திசெய்திருக்கிருர்களாம். பாகவதர்

ராணி

ஜுபிடரின் பிரமிக்க வைக்கும் தயாரிப்பாக இருக்குமாம் அவர்களது "ராணி". இப்பொழுது இப்படத்தின் இறுதி வேலைகள் பிரஸாத் டைரெக்ஷனில் சென்னை நெப்டியூனில் நடைபெற்று வருகின்றன. அநேகமாக இப்படம் பிப்ரவரியிலேயேகூட திரைக்கு வந்துவிடக் கூடுமாம். பாலசந்தர், பானுமதி, எம். எஸ். எஸ். பாக்யம் ஆகியவர்கள் முக்கிய பாத்திரங்களில் நடிக்கும் படம் இது. இப் படத்தில் பானுமதி ஒரு நாடோடிப் பெண்ணுக வந்து பல அரிய நடனங்களை ஆடியிருக்கிருராம்.

பெண் உள்ளம்

தமிழ் நாடு டாக்கீஸாரின் "பெண் உள்ளம்" நியூடோன் ஸ்டுடியோவில் வளர்ந்து வருகிறது. எஸ். சௌந்தரராஜன் டைரெக்ஷனில் இப்படத்தில் எம். வி. ராஜம்மா, டி. கே. ஷண்முகம், எஸ். ஏ. நடராஜன் மேனகா ஆகியவர்கள் பிரதம பாகங்களில் நடிக்கின்றனர். தவிர டி. வி. சேதுராமன், அங்கமுத்து இவர்கள் ஹாஸ்ய பாகத்தில் நடிக்கிருர்களாம். இப்படத்திற்கென அங்கமுத்து, திரௌபதியாக வந்து சபதம் போடும் கட்டம் அடங்கிய ஒரு தெருக் கூத்து நாடகம் ஒன்று படமாக்கப்பட்டதாம்.

வாழ்க்கை வர்ணனை

[14-ம் பக்கத் தொடர்ச்சி]

ஸ்ரீராமும் ஒருவராவார். அவர் இராணுவத்தில் சேர்ந்ததற்கு அவரது குடும்பத்தின் அப்போதைய பொருளாதார நிலைமையும் ஒரு காரணமாகும்.

முதன் முதலில் ஸ்ரீராம் சேர்ந்தது கப்பற் படையில். ஆனால் சில நாட்களுக்குள்ளாகவே அவருக்கு அது பிடிக்கவில்லை. அதன் பேரில், மேலதிகாரியின் தயவால் ஸ்ரீராம் தம் உத்தியோகத்தை தரைப் படைக்கு மாற்றிக் கொண்டார். பீல்ட் என்ஜினீயரிங் சர்விஸில் ஒரு பயனீர் அபீஸராக அவர் ஆக்கப்பட்டு பம்பாய்க்குச் சென்றார்.

பம்பாயில் ஒரு வருஷம் கழிந்ததும் ஸ்ரீராமின் உடல் நிலை பாதிக்கப் பட்டது. அதே சமயத்தில் தாயாரும் நோய் வாய்ப்பட்டு 'உடனே புறப்பட்டு வரும்படி' தந்தி யனுப்பினர். ஸ்ரீராமுக்குத் தாயாரை விட உத்தியோகம் பெரிதாகத் தோன்றவில்லை. எனவே தம் வேலையை ஒரே யடியாய் ராஜினமா செய்து விட்டு சென்னைக்கு வந்தார். தம் அருமை மைந்தனைப் பார்த்ததுமே அவரது தாயார் மனந்தேறி, நோயினின்றும் விடுபட்டார். இந்த சந்தோஷத்தில் ஸ்ரீராமின் உடல் நிலையும் சரிப்பட்டு விட்டது.

சென்னையில் ஸ்ரீராமின் தமையன் ஸ்ரீ. நரசிம்மன் போலீஸ் இலாகாவில் உத்தியோகம் பார்த்து வருகிறார். ஸ்ரீராம் அவர் வீட்டில் தங்கி ஏதாவது ஒரு வேலை தேடிக் கொள்ள முயன்று வந்தார். அதிக சிரமப் படாமல் சீக்கிரத்திலேயே அவருக்கு வேலை கிடைத்து விட்டது. ஏ. ஆர். பியில் அவர் ஒரு டெலிபோன் ஆபரேட்டர் ஆனார். 'ஹலோ, ஹலோ!' என்று அவரது காது சதா துளைக்கப்பட்ட போதிலும், அவர் பொறுமையை இழக்காமல் தம் வேலையைத் திருப்திகரமாய் செய்து வந்ததை மேலதிகாரிகள் கவனித்தனர். ஸ்ரீராமுக்கு டெப்போ இன்ஸ்பெக்டராக 'பிரமோஷன்' கிடைத்தது.

ஸ்ரீராம் இரண்டு வருஷ காலம் ஏதோ தம் கடமையைச் சரிவரச் செய்து வந்தாரே தவிர அவருக்கு இந்த இரும்புத் தொப்பி உத்தியோகம் பிடிக்கவில்லை. சினிமாப் படங்களைப் பார்த்த போதெல்லாம், "நாமும் ஏன் இவர்களைப் போல

ஒரு சினிமா நக்ஷத்திரமாகக் கூடாது" என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டு வந்தது. அதற்கான முயற்சியிலும் ஈடுபடலானார். ஜெமினி ஸ்டுடியோவுக்கு ஒரு விண்ணப்பத்தை அனுப்பினர். சிறிது காலத்திற் கெல்லாம் அவருக்கு ஜெமினியில் வேலை கிடைத்தது. ஆனால் நடிக்கும் வேலையல்ல; 'ப்ளோர் அஸிஸ்டெண்ட்' உத்தியோகம்.

ஸ்ரீராம் ஸ்டுடியோவில் சேர்ந்த சமயத்தில் 'சந்திரலேகா'' படம் தயாராகி வந்தது. படத்தை டைரெக்ட் செய்து வந்த ஸ்ரீ. எஸ். எஸ். வாஸன் தம் பார்வையில் அடிக்கடி நடமாடி வந்த ஸ்ரீராமனின் வாட்ட சாட்டமான அழகிய தோற்றத்தைக் கவனித்ததும் அவருக்கு சசாங்கனின் மெய்க்காப்பாளன் வேஷத்தைக் கொடுத்து நடிக்கச் செய்தார். ஆனால் தாம் ஒரு நடிகரானதைப் பற்றி ஸ்ரீராம் சந்தோஷப் படவில்லை! ஒரு பேச்சுக் கூட இல்லாமல் வெறுமனே பொம்மை மாதிரி வந்து விட்டுப் போகும் அந்த வேஷம் அவருக்கு அதிருப்தியை அளித்ததில் ஆச்சரியமென்ன!

"சந்திரலேகா" படத்தில் சாதாரண வேஷங்களை ஏற்றுள்ள பலருக்கு பிற்காலத்தில் இதர படங்களின் மூலம் பிரபலமடையும் பாக்கியம் ஏற்பட்டிருக்கிறது.

இந்த பாக்கியம் ஸ்ரீராமுக்கு இப்படம் தயாராவதற்குள்ளாகவே ஏற்பட்டு விட்டது. "மதனமாலா" படத்தைத் தயாரிக்க முற்பட்ட ஸ்ரீராமனந்தா பிக்சர்ஸார் ஸ்ரீராமுக்கு மகத் துணையுடன் கதாநாயகன வேஷத்தையே கொடுத்து நடிக்கும்படி செய்தனர்.

முதலாளிகள் தம் மீது கொண்ட நம்பிக்கை வீணாகாதபடி ஸ்ரீராம் "மதனமாலா"வில் திறம்பட நடித்துள்ளார்.

இதன் பிறகு, ஸ்ரீராம் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பிலிம் கம்பெனியார் தயாரித்த "நவஜீவனம்" தமிழ்ப் படத்தில் நடித்தார். இப்படம் "1950ம் வருஷத்திய சிறந்த படமாக" சென்னை சர்க்காரால் கௌரவிக்கப் பட்டது நேயர்களுக்கு ஞாபகமிருக்கும். ஸ்ரீராமின நடிப்பு இப்படத்தில் முதல் படத்தைக் காட்டிலும் பண்பட்டிருந்தது. சமூகப் படங்களில் அவர் மேலும் சோபிக்கக் கூடும் என்பது தெளிவாகத் தெரிந்தது.

இவ்விரண்டு படங்களையும் பார்த்த பின், ஸ்ரீ. வாஸனின் மனதிலும் இவ்வெண்ணம் தோன்றியிருக்க வேண்டும். தாம் கண்டெடுத்த ஸ்ரீராமை தம் படங்கள் மூலமே மேலும் உன்னத பதவிக்கு ஏற்றி வைக்கத் தீர்மானித்தார் அவர். ஸ்ரீராம் மீண்டும் ஜெமினியில் சேர்ந்து மூன்று வருஷ ஒப்பந்தத்தில் சேர்ந்தார்.

சமீபத்தில் வெளி வந்து தடபுடல் பட்டுக் கொண்டிருக்கும் "சம்சாரம்" தமிழ்ப் படத்தில் நீங்கள் ஸ்ரீராமைப் பார்த்திருப்பீர்கள். நாட்டுப்புற வாசியின் வேஷத்தை அவர் நன்கு நடித்து ரஸிகர்களின் பாராட்டுதலைப் பெற்று வருகிறார். தகுந்த வேஷம் கிடைத்தால் ஸ்ரீராம் வெளுத்துக் கட்டி விடுவார் என்பது இப் படத்தின் மூலம் விளங்குகிறதல்லவா!

ஸ்ரீராமின் சொந்தப் பெயர் பட்டாபிராமன் என்பது. அவர் பள்ளிக்கூடத்தில் படிக்கும் போதே தம் பெயரை ஸ்ரீராமன் என்று சுருக்கிக் கொண்டு விட்டார். அவருடைய தாய் பாஷை தெலுங்கு. ஆங்கிலமும், தமிழும் அவருக்குத் தெரியும். ஹிந்தியும், மலையாளமும்கூட கொஞ்சம் தெரியும்.

ஸ்ரீராம் விவாஹம் ஆனவர். அவர் தம் தூர பந்துவான லக்ஷ்மிகாந்தத்தை 1943ம் வருஷத்தில் மணந்து கொண்டிருக்கிறார். இவர்கள் இப்பொழுது முறையே ஆறு வயதும் மூன்று வயதும் உடைய இரு ஆண் குழந்தைகளுக்கு பெற்றோராக விளங்கி வருகின்றனர்.

தற்போது ஸ்ரீராம் ஜெமினி தயாரித்து வரும் "தாய்" படத்தில் நடித்து வருகிறார். சாத்விகமான தோற்றமும், சதா சிரித்த முகமும், சகஜமாகப் பழகும் குணமும், மாநிறமும், ஐந்தடி எட்டங்குல உயரமும் உடைய ஸ்ரீராம் எதிர் காலத்தில் மேலும் புகழ் பெறக்கூடும் என்று தாராளமாய் எதிர் பார்க்கலாம்.

134131

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL / 688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். விலை ரூ. 8-8-0 சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) ரூ. 10-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (த. செ. தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638, (R) MADRAS-1.

கிளை: 134 SERANGOON ROAD. சிங்கப்பூர்.

ஸிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES, 62, MAIN St., கொழும்பு-11

Printed by S. Sriraman at Commercial Printing & Publishing House, 46, Armenian Street, Madras—1. Edited and Published by P. R. S. Gopal (Gundoosi), at 26, Godown St., Madras—1.

ஜுபிடரின்
கைதி
நகர உரிமையாளர்கள்:
டைரக்ஷன்: S.பாலசந்தர். ஸ்டுடியோ: சென்ட்ரல். பெல் பிக்சர்ஸ்...
சென்னை: கெயிட்டி, துங்கம், மற்றும் முக்கிய நகரங்களில் நடைபெறுகிறது...

அழகுக்கு அழகு செய்யும்
ஆபரணங்கள்
P.A.R
P.A.ராஜு செட்டியார் & பிரதர்
தந்தி "ராஜா" கோயமுத்தூர் போன்: 268